பூவை எஸ். ஆறுமுகம்

கடல் முத்து

பூவை எஸ். ஆறுமுகம்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

Published by
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS–600 003

KADAL MUTHU
in Tamil
By POOVAI S. ARUMUGAM

© C. L. S.
First Published in August, 1992

Cover Design by : KUMARASAMY

Printed at The C. L. S. Press, Vepery, Madras-600 007. B 3157

அணிந்துரை

1952ஆம் ஆண்டு என்று நினைவு. அப்போது 'வேலை வில்லவன்' என்னும் புனைபெயரில் என் சிறுகதைகளை இலக்கிய நோக்கோடு வெளிவந்துகொண்டிருந்த இதழ்கள் சிலவற்றில் எழுதி வந்தேன். அவற்றுள் குறிப்பிடத்தகுந்த ஓர் இதழ் பொன்னி. அவ்விதழுக்கு நான் அனுப்பிவைத்த கதை ஒவ்வொன்றும் கிடைத்ததும் அது வெளியீட்டிற்கு ஏற்கப் பெற்றுள்ளதாகவும், விரைவில் வெளிவரும் என்றும் எழுதி என்னை ஊக்குவித்தவர் அக்காலப் பொன்னி துணை ஆசிரியர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள்.

அவர் அவ்விதழிலும் பிற இதழ்களிலும் எழுதியிருந்த சில சிறுகதைகளின் தொகுப்பு கடல் முத்து என்ற பெயரில் வந்தபோது அதை ஆர்வத்தோடு படித்து மகிழ்ந்த நான் அதை அடுத்து வந்த காலக்கட்டத்தில் திரு. பூவை எஸ். ஆறுமுகம் அவர்களின் படைப்புக்களை அவர் துணை ஆசிரியராக இருந்து பணியாற்றிய உமா இதழில் படித்து மகிழும் வாய்ப்பினைப் பெற்றேன். அவ் இதழில் அவர் இளம் எழுத்தாளர்களுக்கு வரவேற்பு அளித்ததோடு நாடறிந்த எழுத்துலகப் பெருமக்களோடு தாம் நிகழ்த்திய பொருள் பொதிந்த உரையாடல்களைப் பேட்டிக் கட்டுரைகளாக வெளியிட்டு வந்தார். புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலருடைய இதய வேட்கை, விழைவுகளையும் பண்பட்ட கருத்துக்களையும் விளங்கிக்கொள்ள அக்கட்டுரைத் தொடர் ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் பயன்தர வல்லவையாக அமைந்தன.

திரு. ஆறுமுகம் அவர்களின் எழுத்தையும், கையெழுத்தையும் மட்டுமே அறிந்தவனாக இருந்த நான்

கடந்த ஆண்டில் அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியபோது அவரோடு உரையாடலைக் கடல் முத்துவோடு தொடங்கினேன். அவருடைய பல நூல்களைப்பற்றிப் பேசினோம் என்றாலும் 'கடல் முத்து'வைச் சிறப்பாக நான் மீண்டும் வாசிக்க விரும்பியதோடு அந்நூலைச் சரியாக நாற்பதாண்டுகளுக்குப் பிறகு இக்கால வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தவும் ஆசைப்பட்டேன்.

திருத்தங்கள் ஏதுமின்றி அந்நூல் இப்போது உங்கள் கரங்களில் திகழ்கிறது. இதில் அடங்கும் கதைகள் கிராமியச் சூழல்களின் உயிர்ப்புநிலையைக் கண்முன் நிறுத்துகின்றன. இளங் காதலர்கள், ஏழ்மையில் வாடுவோர், இலட்சியங்களுக்காகப் போராடுவோர் பலரை இக்கதைகளில் சந்திக்கலாம். தஞ்சை மாவட்டக் கிராமியப் பேச்சுமொழியைக் கேட்டு இன்புறலாம்.

இந்நூலை மறு அறிமுகம் செய்யும் வாய்ப்பினை வழங்கிய அன்பர் பூவை எஸ். ஆறுமுகம் அவர்களுக்குக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

அன்பன்

தி. தயானந்தன் பிரான்சிஸ்
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

சென்னை
1–8–1992

திரும்பிப் பார்க்கிறேன்

என் முதற்கனவு 'கரகம்'. சரித்திரப் பேராசிரியர் சாண்டில்யன் அவர்கள் அந்நாளிலே, அதாவது, பொங்கு விரிகாவிரியின் புனித மணம் தவழும் திருச்சிராப்பள்ளியில் புனித சூசையப்பர் கல்லூரியிலே நான் பி. ஏ. இறுதி யாண்டில் படித்துக் கொண்டிருந்தபோது, என் முதல் கதையை 'சுதேசமித்திரன்' ஞாயிறு மலரில் வெளியிட்டார். அடிமைப்பட்டிருந்த அருமைப் பாரத மணித் திருநாடு விடுதலை பெற்றுச் சுதந்தரம் பெற்றுப் பழம்பெருமையைத் தற்காத்துக்கொண்ட பொன்னான தருணம் அது!—ஆனால், நானே என் எழுத்துக்கு அடிமைப்பட நேர்ந்தது!

காலம் ஒரு புள்ளிமான்! நாட்கள் வந்தன; போயின.

ஓர் உண்மை உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்!—'பொன்னி' தான் எனக்குத் தாய்வீடு. ஆனால், நான் தாய் வீட்டிற்கு அழைக்கப்படுவதற்கு முன்னமேயே, என்னுடைய ஐந்தாவது சிறுகதையைப் பொன்னி பொங்கல் மலர் வெளிப்படுத்தி அன்புகண்டது; அன்புகாட்டியது. அந்த மலர்க் கதைதான், காவிரித் தஞ்சையின் வட்டார மணம் கொழித்த 'கடல் முத்து' ஆகும். அது இப்பொழுது தமிழ்ப் படைப்பு இலக்கியத்தின் இயல்பான—எதார்த்தமான பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம், வண்ணம் சேர் நூல் வடிவம் பெறுகிறது! நான் மகிழ்வேன், நீங்களும் மகிழ்வீர்கள்.

'அங்கிங்கெனாதபடி, எங்கும் பிரகாசமாய் ஆனந்தப் பூர்த்தியாகி' விளங்குகின்ற ஆண்டவன் ஒரு விளையாட்டுக்

பொற்காலத்தின் பொற் கனவாக நாளும் பொழுதும் மின்னிக் கொண்டிருக்கின்ற 'பொன்னி' அன்று பழக்கப் படுத்திய எழுத்தாளர் 'வேலே—வில்லவன்' இன்று 'கவிஞர் தயா'வாகக் காட்சி தருகின்ருர்!—அருள்திரு. டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் அவர்களின் பேரன்பிற்கு நான் என்றென்றும் நன்றியுடன் செஞ்சோற்றுக் கடன்பட்டவன்.

அன்றும் சரி, இன்றும் சரி!—தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தைத் திறனய்வு செய்யும் அறிஞர்கள் 'பூவை'யை மறந்தது இல்லே; அதுவும் என் பாக்கியம்தான்!

1966ஆம் ஆண்டில் தமிழக முதல்வராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் என்னுடைய 'பூவையின் கதைகள்' நூலுக்குத் தமிழக அரசின் முதற் பரிசினே வழங்கினர். பின்னர், 1982ஆம் ஆண்டில் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக அரசின் சார்பில் எனக்கு இரண்டு முதற் பரிசுகளேத் தந்தார். ஒன்று: முழுநீள நாட்டுப்புற நாடக நூல். மற்ருென்று: 'தெய்வம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது?' எனும் கதைக் கொத்து!

ஓர் ஆச்சரியம்!—என்னுடைய நாற்பத்தைந்து ஆண்டுக் கால இலக்கியப் பணியிலே வெளிப்படுத்தப்பட்ட என் சிறுகதைத் தொகுப்புக்கள் தாம் இவ்வகைப் பட்டியலிலே எண்ணிக்கையில் மிகுந்திருக்கும்! ஒரு நல்ல செய்தி!—என் அருமை மகன் பூவை மணி கடல் முத்துக் கதைகளில் சிலவற்றை மேடையேற்றப் போகிருனும்!...

கவிச்சக்கரவர்த்திக்குச் சடையப்ப வள்ளல் கிடைத்தது உண்மை.

அப்படியேதான், கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் பேரன்பிற்கு நானும் பாத்திரமாகி இருக்கிறேன்.

சத்தியத் தர்மத்தையும், தர்மச் சத்தியத்தையும் மதிக்கின்ற உண்மையான இலக்கிய ஆர்வலர்கள் பூவையை மறக்கமாட்டார்கள்; மறக்கவும் முடியாது!—எல்லாருக்கும் நன்றி.

அன்புடன்

பூவை எஸ். ஆறுமுகம்

தமிழ் அரசி
சென்னே-600 018

உள்ளடக்கம்

			பக்கம்
1.	கடல் முத்து	..	1
2.	தங்கச்சி	..	14
3.	வாழப் பிறந்தவள்	..	23
4.	போட்டி	..	29
5.	புதிர்	..	39
6.	குழந்தை உள்ளம்	..	44
7.	நடிகை	..	51
8.	ஏய் காளி	..	59
9.	மையலும் தையலும்	..	67
10.	சாவிலே வாழ்வு	..	74
11.	புண்ணியம் ஒன்று	..	83
12.	'ஞான் ஒரு இந்தியனாணு'	..	98
13.	எல்லைச் சக்தி	..	107
14.	செந்தட்டீ மம்மே பாரே!	..	113
15.	பிள்ளைக்கலி	..	121

கடல் முத்து

'காளி ஆத்தா பேரிலே ஆணையிட்டுச் சொல்லுகிறேன். அக்கரைச் சீமையிலேருந்து திரும்பியாந்ததும் உன்னைக் கட்டாயம் கண்ணாலம் கட்டிக்கிறேன், பவளக்கொடி."

தூணுடன் தூணாகப் பிணைந்து நின்ற பவளக்கொடியின் விம்மித் தணிந்த நெஞ்சில் அவ்வார்த்தைகள் எதிரொலித் தன. கடல் கடந்து செல்லும் மாலுமிக்குக் கலங்கரை விளக்கு உறுதுணையாக அமைவதுபோல, அன்று கடல் கடந்து சென்ற நடேசன் விடுத்துச் சென்ற ஆறுதல் மொழியை நேருக்கு நேர் நின்று நேற்றுச் சொன்ன மாதிரி அவள் உணரலானாள்.

சாயங்காலம் இருக்கும். கடை அலுவல்களைச் சீர் செய்துவிட்டுப் பவளக்கொடி திரும்பினாள். அவள் காது களில் தன் தாய்மாமன் 'கண்டிச் சீமை'யிலிருந்து வந்திருக் கும் சேதி காற்றுவாக்கில் விழுந்தது. உடனே அவளுக்குத் தன் மச்சான் நடேசனின் நினைவும் கூடவே வந்தது. மாமனைக் கேட்டால் மச்சானைப்பற்றி ஏதாகிலும் தெரியுமே என்ற ஆவலில், 'ஆயா, மாமன் வந்திருக்குதாமே; தெரியு மில்லே' என்றாள் பவளக்கொடி.

'அப்படியா? நீ சொல்லத்தான் எனக்குத் தெரியுது. தம்பியை விசாரிச்சா உன் மச்சானைப்பத்தி ஏதுனாச்சும் தாக்கல் கிடைக்குமே' என்று கூறியவாறு கிழவி செல்லி புறப்பட்டாள்.

பூங்கரங்களில் கன்னத்தைப் புதைத்தவண்ணமிருந்த பவளக்கொடியின் இதயத் தடாகத்திலே நீர்மட்டத்திடை தலைமறைவாக இருந்த எண்ண மலர்கள் கம்பீரமாகத் தலை தூக்கிச் சிரித்தன. அவளும் பூப்போலப் புன்னகை பூத்

தாள். கடந்த நினைவுகளை மீண்டும் எண்ணிப் பார்ப்பதில் தான் எவ்வளவு இன்பமிருக்கிறது!

அறந்தாங்கி—பட்டுக்கோட்டை ரஸ்தாவில் அந்தச் சாயாக் கடை இருந்தது. டீ என்றால் டீ அப்படி இருக்கும். முன்பெல்லாம்—அதாவது பவளக்கொடி 'பெரியவள்' ஆவ தற்கு முன்னர் அவளே நேரில் நின்று சாயா பரிமாறுவாள். வாடிக்கைக்காரர்களுடன் குழந்தைபோல விளையாடுவாள்; கிளிமாதிரிக் கிள்ளை மொழியைப் பாங்காக உதிர்ப்பாள்! இளம் பூஞ்சிட்டுப் போன்று சிறகடித்துப் பறப்பாள். அவள் என்றால் ஏனையோருக்கும் ஒரு அன்பு—மயக்கம்! அவள் மயக்க உரு!

பவளக்கொடி அலைகடலில் சேகரிக்கப்பட்ட முத்து; ஒளிபரப்பி ஒய்யாரமாய்த் திரியும் கடல் முத்து. பவளவாய் திறந்தால் முத்துக்கள் நகைக்கும்; கண் திறந்தால் வண்டுகள் ரீங்காரமிடும்; கன்னக் குழிவில் ரோஜா சிரிக்கும். அவள் காட்டு ரோஜா!

அவள் பக்குவமடைந்ததும் கடையில் மாற்றம் நிகழ்ந் தது. அவள் இப்போதெல்லாம் சாயா போட்டு நேரில் வியாபாரம் பண்ணுவது நின்றுவிட்டது. அதற்குப் பதில் அவள் உள்ளறையில் எல்லாம் தயாரித்து, ஒவ்வொரு 'செட்'டாக வெளியே நீட்டுவாள். ஒவ்வொன்றையும் நிதானமாக வாங்கி வியாபாரம் செய்வாள் அவள் அம்மா.

நடேசன் அடுத்த பத்தாவது மைலிலிருந்தவன். காளைப் பருவம்; வயதின் பெரும் பகுதியைப் பர்மா—ரங்கூனில் கழித்தவன். ஊரின் சுற்றுச் சூழ்நிலைப் பாசி அவனைப் பற்றவில்லை.

அவன் பவளக்கொடியை முதலில் கண்டதுமே மனதை அவள் வசம் பறிகொடுத்துப் போனான். அவன் ஆணழகன்; அவள் பெண் பதுமை; அழகும் அழகும் பின்னின. பூங்கொடிக்குத் தாவிப் படரக் கொழுகொம்பு கிடைத்து

விட்டால் அப்புறம் அதன் வளர்ச்சிக்குக் கேட்கவும் வேண்டுமா?

இதே போன்றதொரு பொங்கல் திருநாளில் பவளக் கொடி—நடேசன் முதல் காதல் சந்திப்பு நிகழ்ந்தது. அந்த வட்டாரத்தில் 'வழுக்கல் மர' வேடிக்கை பிரமாதம். வான ளாவிய கம்பமொன்று பூமியில் நடப்பட்டிருக்கும். கம்பம் பூராவும் பசை வழிந்தோடும். விரல் பட்டால் 'சர்'ரென்று வழுக்கி விட்டுவிடும். கம்பத்தின் உச்சியில் சாயத் துண்டில் பத்து ரூபாய் முடிந்திருக்கும். பரிசைத் தட்டி, மார் தட்டிக் கொள்ள அனைவர் உள்ளமும் சுவரிலடித்த பந்தாக எழும்பும். பலர் பரிசைத் தட்டக் கனவு கண்டதுடன் சரி.

கடைசியில் நடேசன் ஒருவனால் தான் சாயத் துண்டை யும், பணத்தையும் கம்பத்தின் உச்சியிலிருந்து கொணர முடிந்தது. ஆனால் கம்பத்தினூடே சார்ந்து இறங்குகையில் அவன் கால் பின்னிச் சறுக்கிவிட்டது. 'தொபுகடீர்' என்று பூமியில் சாய்ந்தான்.

சுய நினைவு வரப்பெற்றதும் நடேசன் துயில் நீத்து விழிகளை மலரத் திறந்தான். அவன் ஒரு பெண்ணின் கண் காணிப்பில் இருப்பதை அறிந்தான். உடம்பில் லேசாக வலியிருந்தது; பலத்த காயமில்லை.

'மச்சான், மச்சான்' என்று பன்னெடு நாள் பழகிய பாவனையில் ஆதரவு செய்த பவளக்கொடியைக் கண்டதும், நடேசன் மெய்மறந்தான்; உடம்பு வேதனையை மறந்தான். உலகமே ஒரு சொப்பன சொர்க்கமாகத் திகழ்ந்தது. அதில் அந்த நங்கை கனவுக் குமரியாக—மாய மோகினியெனத் தோற்றம் கொடுத்தாள். அழகின் அன்வயமன்றோ அவள்!

ஆம்; அவள் அவனுள் உருமாறினாள். அப்படியே அவனும் அவளுள் இடம் பெற்றான்.

ஆக மறு மூன்று நாட்களும் நடேசன் அவள் வீட்டில் தங்கும்படி வாய்ப்பு அவர்களை ஒன்றுகூட்டியது.

'மச்சான் அன்னிக்குக் கம்பத்திலே ஒவ்வொரு அடியா முன்னே ஏறிக் கடைசியாய்ச் செயிச்சதைக் கண்ட

தும் எம்மா சந்தோசப் பட்டுப்பூட்டேன் தெரியுமா? ஆனா, அதே சுருக்கிலே நீங்க கீழே விழுவிங்கன்னு கனுக்கூடக் காணல்லே. இதுமட்டும் உயிரு தப்பிச்சது புண்ணியந் தான்—' கூறின பவளக்கொடியின் தேறுதல் அவனை ஆறுதல் படுத்தியது. இதெல்லாம் பழைய கதை.

'பவளக்கொடி, பவளக்கொடி—' சுய நினைவு பெற்ற பவளக்கொடி அலறியடித்துக்கொண்டு வந்த தன் அன்னையைக் கண்டதும் 'என்னவோ ஏதோ'வென்று பதைத்து விட்டாள்.

'தங்கச்சி, ஒன் மச்சான் காட்டுக் காய்ச்சலிலே செத்துப் போயி நாலஞ்சு நாளாயிடுச்சாமே' என்று ஓலமிட்டாள் செல்லி.

'மச்சான் எப்போது வரும்' என்று நாட்களை யுகங் களாகக் கழித்து வந்த பவளக்கொடி இந்த எதிர்பாராத இடியைக் கேட்டதும் மனமிடிந்தாள்; பித்துப் பிடித்தவள் கணக்கில் அலறினாள். அடுத்த தருணம் அவளை ஆறுதல் படுத்த வந்த அவள் 'ஆயா'விடம் அவளுக்கு ஆத்திரம் பற்றி எரிந்தது. எரிச்சல் மூண்டது. தீயின்றிப் புகையா?

நடேசனைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகும் தீர்மானத்தை ஒரு நாள் பேச்சு வாக்கில் தன் தாயிடம் பவளக்கொடி எடுத்துரைத்தாள்.

'தங்கச்சி, நடேசனை நீ கட்டிக்கிறதுக்கு அட்டியில்லே. ஆனா அதுகிட்டே பேருக்குக்கூட நாலு காசு பணம் கிடை யாதாமே. நம்ப பலகாரக் கடை மிச்சத்திலே எப்படி மூணு வயிறு நிரப்ப ஏலும்? நீ ரோசனை செஞ்சுக்க, பவளம்.'

சொல்லாமல் சொல்லிய கிழவியின் பேச்சு நடேசனுக்கு எட்டியது.

'பவளக்கொடி, எண்ணி ஒரு வருசத்துக்குள்ளே எப்பாடு பட்டும் கையிலே நாலு பத்துச் சேர்ந்திடும். கொஞ்சம்

பசையுடன் திரும்பி வந்து உன்னைக் கண்ணாலம் செய்துக் கிறேன். உன் நினைவு ஒண்ணுதான் எனக்குப் பலத்தைத் தரமுடியும், பவளக்கொடி—'

அவள் பவளவாய் திறந்து விடை ஈந்தாள். இச்சம்பவத்தை மீளவும் நினைவுகூர்ந்து அவள், பெற்றவளை நிந்தித்தாள். யார் யாரை நோவது? அம்பு எய்தவள் அக்கிழவி. அம்பை நோவதா? அவளைக் கோபிப்பதா? அவள் ஏங்கினாள். இங்ஙனம் அதிர்ச்சி ஏற்படும் என்று அவள் எப்படி எதிர் பார்த்திருப்பாள். பாவம்? பின்னர் நிகழவிருக்கும் நியதியின் நீதியை முன் கூட்டியே அறியும் 'அஷ்டசித்தி படைத்த மாமுனியா' அவள்?

'ஜிம் ஜிம்' என்று சதங்கை ஒலி முன் அறிவிப்பு மொழிய வந்து நின்ற வில் வண்டியிலிருந்து மாசிமலைத்தேவன் இறங்குவதைக் கண்ட பவளக்கொடி உள்ளே சரேலெனப் பாய்ந்தாள்.

'ஆயா, மாமா வந்திருக்காக' என்ற அளவில் படபடப்புடன் கூறியதைக் கேட்ட கிழவி செல்வி ஆச்சரியம் பொங்கக் கையில் வெற்றிலைச் சம்புடத்துடன் வெளியே வந்தாள்.

'வா, தம்பி, சௌக்கியமா? ஏது இந்த வீடு தேடி அத்திபூத்தாப்பிலே, உம்; முதலிலே வெத்திலை போடு தம்பி.'

தேவன் வருகை கிழவியை மலைக்கச் செய்தது. அவன் சுற்று வட்டாரத்தில் பசையான ஆசாமி. கிழவியுடன் கூடப் பிறந்தவன். பர்மா, மலேயா, கண்டி இதெல்லாம் அவனுக்குத் தண்ணீர் பட்ட பாடு.

செல்வியும் மாசிமலையும் உடன் பிறப்பில் ஒட்டிக்கொண்டார்களே தவிர, இயற்கையில் அவர்கள் ஒட்டவில்லை. சில மனத்தாங்கல்கள்! கடைசியில் செல்வியின் கணவன் இறந்த சடங்கில் ராசியானான் தேவன்.

'அக்கா, ஒங்கிட்ட ஒரு சேதி கேட்கலாமின்னு வந்தேன். எம் பெண்சாதி செத்து வீடே வெறிச்சோடிக் கிடக்குது, மறுபடியும் வீட்டிலே விளக்கு ஏத்தி வைக்க மனசிலே ஆசை துள்ளுது. அதுக்கு நம்ப பவளக்கொடியை எனக்குக் கொடுத்துட்டா எம்பிட்டோ சீரா வச்சிருப்பேன்.'

தேவன் இப்படிப் பேசினன்.

கிழவிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

பவளம் கதவைப் படீரென்று சாத்தினள்.

ஆக மூன்று உள்ளங்களிலிருந்தும் நீண்ட பெருமூச்சுப் புறப்பட்டது!

'என்ன அக்கா, ரொம்ப யோசனை செய்யிறே. இடம் தேடி வருகுது சீதேவி. வார கிழமை நல்ல நாள்; பரிசம் போட்டுடலாம்.'

கிழவி திரும்பவும் சிலையானள்.

'அக்கா, என்ன பதிலே பேசல்லே. பவளக்கொடி அந்தப் பயல் நடேசனைக் கையிலே போட்டுக்கலாமின்னு நினைச்சிருக்கும். விதி யாரை விட்டுச்சு? இல்லாதபோன அந்த அனதைப் பய செத்திருப்பான? ஹூம்; முடிவான சொல் இது. உன் மகள் எனக்குத்தான். அதுக்கு ஏற்பாடு செஞ்சுத்தான் ஆகணும்.'

கணத்தில் வில் வண்டி பறந்தது. அதிகாரம் வரிசை செலுத்தப் பேசிச் சென்ற தம்பியின் உத்தரவைக் கேட்டுச் செல்வி பிரமித்தாள்; சுவர் ஒண்டலில் நின்றிருந்த பவளக்கொடி வாய் விட்டுக் கதறினள்.

அவளுக்கு அந்த ஒரு ஏச்சு—அதுவும் இறந்த நடேசனைப் பற்றிய கேலி அவளை வெகுவாகத் துன்பப்படுத்தியது. ஆசை மச்சானின் அன்பு முகம் அவள் முன் தோன்றியது. அவனது ஆதரவு வார்த்தைகள் கணீரென்று ஒலித்தன. அவள் கண்ணீர் பெருக்கினள்.

விண்ணைச் சாடியது அவள் பார்வை. கற்பனை போல எல்லையற்ற வண்ண விதானமே, நீயாகிலும் அவளுக்கு இத மொழி சொல்லாயா?

அமிர்தம் பொழிந்த நிலவைப் பார்த்தாள். நிறை மதியே, உன் சீதளக் கதிரெனச் சில வார்த்தைகளை அவளுக்குக் கூறிச் சாந்தி செய்யமாட்டாயா?

'பவளக்கொடி.'

'ஆயா.'

'கேட்டியா சேதியை?'

'கேட்கிறது என்ன ஆயா. மாமா துப்பு இப்பல்ல புரியுது. கண்ணாலமா? எனக்கா? மச்சானை மறந்துட்டா? ஒருக்காலும் ஏலாது. காளி மேலே சத்தியமிட்டுச் சொல்லு கிறேன். இனி மச்சான் ஞாபகம் ஒண்டியே எனக்கு உலகம். மாமா கிட்டே சங்கதியைச் சொல்லிப்போடு.'

'பவளம், கலங்காதே. உன் எண்ணத்துக்குக் குறுக்கே நான் எதுவும் செஞ்சிடமாட்டேன்.'

மறுமுறையும் தேவன் வந்தபோது, தன் மகள் ஒப்ப வில்லை என்று சொல்லியதைக் கேட்ட அவன் தீப்பறக்கப் பேசிச் சென்ற வார்த்தைகள் அவளைச் சித்திரவதை செய்தன. அவள் கொடிபோலத் துவண்டு போனாள்.

'என்ன திமிரு? மாமனா அவன்? பணம் ஒண்ணு இருந்தாக்க அல்லாரையும் கொடிகட்டி ஆண்டிட முடியுமாக்கும். அவன் பணம் அவனோடே. என்னை அவனுக்குக் கல்யாணம் பண்ணித் தராமப் போனா ஆளையே தூக்கிட்டுப் போயிடு வானாமே. அத்துக்குத்தான் சம்யுக்தை—பிருதிவி மகாராசா காலங் கூடப் புல் முளைச்சுப் போச்சுதே—'

'ஆயா, நம்ம ரெண்டுபேரும் நிலந் தெளியறத்துக் குள்ளாற மாமன் கண்ணுக்குத் தெரியாத இடத்துக்கு ஓடிப் போனாத்தான் தப்பிக்கலாம் போல. என்ன செய்யிறது? பாம்பைக் கண்டாக்க நாமதானே தள்ளிப் போகவேணும்.'

பவளக்கொடி விம்மினாள்; கிழவி கண் கலங்கி நின்றாள்.

அடிமுடியின்றி எண்ணங்கள் சிதலம் பெற்றன; சிதல மடைந்தவை பின் சேகரம் பெற்றன. சராசரங்கள் ஓய்வுற்ற சாமம். உறக்கமும் விழிப்புமற்ற நிலையுடன் பவளக்கொடி புரண்டு படுத்தாள். அதே சமயம் 'பவளக்கொடி' என்ற குரல் கேட்டது.

கனவு கண்டு விழிப்பவள் போலானாள் அவள். யார் குரல் அது? கதவைத் திறந்தாள். அங்கே நடேசன் நின்று கொண்டிருந்தான்.

'மச்சான்—'

எத்தனையோ காலம் கனவு கண்ட இன்பத்திரளை ஒரு நொடிப்போதில் அனுபவித்துவிட்டது போன்ற நெடுமூச்சு—இன்பப் பெருமூச்சு அவள் இதயத்தினின்றும் வெளிப் பட்டது.

பவளக்கொடி தேம்பினாள். மச்சான் இறந்ததாக மாமன் சொன்ன செய்தியை ஞாபகப்படுத்திக்கொண்ட அவளுக்கு அப்பொழுதே தேவனின் சூது புலனாயிற்று. செல்லியும் இதை உணரலானாள்.

'பவளம்!'

'மச்சான், உங்களைக் காணுவோமின்னு நினைக்கவே யில்லை.'

'என்ன சங்கதி?'

'நீங்க காயலிலே செத்துப்போனதா என் மாமன் வந்து சொன்னாரு. அதுக்கு ஒத்த மாதிரி நீங்களும் கடுதாசிகூட எழுதல்லே. இப்பத்தான் அவரு தந்திரம் விளங்குது. இப்படிப் புரளி பண்ணி என்னை அவரு கட்டிக்கிறதுக்குப் போட்ட திட்டம் இது—'

'பவளக்கொடி, நான் காய்ச்சலிலே பிழைச்சது மறு பிறப்புத்தான். அதாலே காகிதம் போட வாய்க்கல்லே. ஆனா உன் மாமன் இப்படித்தான் தீவினை பண்ணுவாருன்னு

தெரியாது. மாசிமலைத் தேவனுக்கு எங்கிட்டே என்ன வயித் தெரிச்சலோ? முகம் நிமிர்ந்து அவரை ஒண்ணுக்கு ரெண்டு தடவைகூடப் பார்த்ததில்லையே? ஊம்—'

பவளக்கொடி புத்துயிர் பெற்றாள்; மறு வாழ்வு பெற்றாள். கன்னக் கதுப்பெழிலில் நாணம் குமிழியிட்டு மின்னியது; கரு வண்டுக் கண்களில் இன்ப வேதனையிருந்தது. அவள் மார்பகம் ஒரு கணம் விம்மித் தணிந்தது.

குமுதம் மலர்ந்தது; அங்கே தண்மதி மடலவிழ்ந்திருந் தான். வண்டு கானம் இழைத்தது; அங்கே மலர்மது காட்சி தந்தது.

பவளக்கொடி புதுமை பெற்றாள், அங்கே நடேசன் முறுவலித்து நின்றிருந்தான்!

'என்ன, நடேசன் வந்துட்டானா? வந்து என் பவளக் கொடிக்குத் தாலியும் கட்டிப்புட்டானா?' என்று கர்ஜித்தான் மாசிமலைத்தேவன்.

பண்ணையாள் கூறிய விவரம் தேவனின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டது. கூடப்பிறந்த அக்காளாக இருந்தும்கூடத் தனக்குப் பவளக்கொடியைத் திருமணம் முடித்து வைக்க வில்லையே என்று ஆத்திரப்பட்டான் கிழவியின்மேல். அக் குடும்பத்தை ஒழித்துவிடவேண்டுமென்ற ஓரே நோக்கமே தேவனின் மனதில் வைரம் பாய்ந்தது.

'என்ன அகங்காரம்! நேற்றுப் பிறந்த பயல்; வக்கத்த அனாதைப் பயல் நடேசன் என் சொத்தைத் திருடிக்கிட்டானா? பார்க்கலாம், அவங்க ரெண்டுபேரும் எப்படி ஜோடியா இருக்காங்கண்ணு?'

அடுத்த நிமிஷம் தேவன் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். மேற்கண்ட விஷ விதை அவனது வைர நெஞ்சில் சக்தியாகப் பரிணமித்தது.

மறுநாள் இரவு மூன்று நாழிகைப் பொழுது.

'ஏய்.'

'எசமான்.'

'சொல்றதைச் செம்மையாக் கேட்டுக்கணும். இன்னிக்குச் சாமத்துக்குக் கைவசமிருக்கும் சாராயப் புட்டிகள் அத்தனையையும் அப்படியே கொண்டுபோய் அந்த நடேசன் குடிசையிலே வச்சிரு. மற்றபடி இந்தத் துப்பு யாருக்கும் மூச்சுக் காட்டப்புடாது. உடனே ஓடிப்போய்ப் போலீஸ் காரங்கிட்டே விசயத்தை சொல்லிக் கையோடே அழைச்சிட்டு வந்திடு. கையும் மெய்யுமாப் பிடிபட்டப்புறம் பயல் எப்படித் தப்புறான்னு காணலாம். அவன் கையிலே விலங்கிட்டாத்தான் அவன் செஞ்ச பழிக்கு என் மனசு குளிரும்.'

முறுக்கேறியிருந்த மீசையை ஒரு முறை தடவிக்கொண்டான் தேவன்; அவன் கண்கள் சிவப்பேறின.

அச்சமயம் கம்பீரமாகத் தோன்றிய நடேசனைக் கண்ட மாசிமலைத்தேவன் திகைத்தான்.

'தேவர் ஐயா, உங்களுக்கு ஏதுக்கு வீணுகக் கஷ்டம் கொடுக்கவேணுமின்னுதான் நானே வலிய உங்க கிட்டே வந்திருக்கேன். என்னை இப்போ என்ன செய்ய உத்தேசம்?' என்று முழங்கினுன் இளைஞன் நடேசன். அவன் குரலில் சோளம் பொரிந்தது; இடியும் மின்னலும் மின்னின.

மலைத்துவிட்ட மாசிமலை தலைநிமிர்ந்தான். அவன் மனச்சவுக்கு அவனை வளைத்து முத்தமிட்டதோ?

'ஐயாவே, நான் ஒங்களுக்கு என்ன தீவினை செஞ்சேன்? உசிரோடேயிருக்கிறப்பவே செத்துப் போனதாச் சொன்னீங்களாம். இப்போ என்னைக் கேசிலே மாட்டி வைக்க ரோசிக்கிறீங்க. வினை விதைச்சவன் வினையறுத்துத்தான் தீரணும்.'

நடேசன் பேசினுன்.

'ஐயா, என்னை அடையாளம் புரியுதா?'

. . . . . .

'தேவர் ஐயா, உங்களுக்கு லீலாவைத் தெரியுமா?'

'என்ன, லீலாவையா? ஆமா தம்பி' என்றான் தேவன் பதட்டம் குரலில் இழையோட.

கண்கள் நீரைச் சொரிய நின்ற நடேசனைக் கவனித்த தேவனுக்கு உலகம் சுற்றியது. அவன் எடுத்து நீட்டிய புகைப்படத்தைப் பார்த்த தேவனுக்குக் கண்முன் தெரிந்த தெல்லாம் ஆலவட்டம் சுழன்றன. அந்தப் படத்தில் மூன்று உருவங்களிருந்தன. தேவன்—லீலா—நடேசன். அந்த நாளில் எடுத்தது!

'நடேசா; ஆமா—நீ என் மகன்' என்று அலறினான் தேவன். நடந்த சம்பவங்களை எண்ணினான்.

நடேசனின் தாய் லீலா—பர்மாவில் தேவன் இருக்கையில் அவனது அன்பிற்குப் பாத்திரமானவள். ஆனால் திடீரென்று கிளம்பிய உள்நாட்டுக் கலகம் அவர்களைத் திசை வேறாகப் பிரித்தது. தேவன் தாயையும் சேயையும் மறந்தான். காலம் மாற்றிவிட்டது அவனை. பின் மூண்ட பர்மா யுத்தத்தில் உயிர் தப்பிய அவர்கள் எப்படியோ காலத்தை ஓட்டினார்கள். நடேசனும் பெரியவனானான். அதற்குள் அவன் அன்னையின் வாழ்வும் முடிந்தது. மரணப் படுக்கையில்தான் அவள் தன் மகனுக்கு ரகசியத்தை உணர்த்தினாள். இதை நடேசன் மனத்திலேயே புதைத்துவிட்டான். எதற்கும் ஓர் வரையறை உண்டல்லவா? தன் தாயை வஞ்சித்ததற்குத் தேவனிடம் பழிவாங்கத் துடித்தான் நடேசன். ஆனால்...?

தேவனுக்கு நடேசன் தன் மகன் என்று அதுவரை தெரியவே தெரியாது. அவன் தூண்டில் புழுவாகத் துடித்தான்; விம்மினான். சம்பவங்கள் எத்துணை விந்தையாக உருப் பெற்றுவிட்டன?

'நடேசா.

புத்துணர்வில் மகனை அழைத்தான் மாசிமலைத்தேவன்.

கண்ணீரில் நீந்திய விழிகளை மேலுயர்த்தினுன். நடேசன் சரேலென்று வெளியேறினுன். தேவனும் 'நடேசா' 'நடேசா' என்று அரற்றிய வண்ணம் பின்தொடர்ந்தான்.

அப்போது 'யார் அங்கே?' என்ற அதிகாரத் தொனி எதிரொலித்தது. வாசலில் இரண்டு போலீஸ் ஜவான்கள் நின்றிருந்தனர்.

'மிஸ்டர் 204 துரிதம் பண்ணி வீட்டைச் சோதனை யிடுங்க' என்ற உத்தரவு சப்-இன்ஸ்பெக்டரிடமிருந்து வந்தது.

ஒரு கேசைப்பற்றித் துப்பறிய வந்த தாணுக்காரர்கள் வழியில் தேவனின் சதியை நீண்ட நேரமாக மறைவில் நின்று கேட்டிருக்கின்ருர்கள். வெறும் வாயை மெல்லுபவனுக்கு அவல் கிடைத்தால் எப்படியிருக்கும்?

அவ்வீட்டினின்றும் ஆறு சாராயப் புட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டன. தேவன் கைது செய்யப்பட்டான். அவன் வினை அவனைச் சுட்டுவிட்டது!

மூன் நிலா.

மாசிமலைத்தேவன் படுத்த படுக்கையாகிப் போனுன். அவன் மனச்சாட்சி அவனை அணு அணுவாகப் பிய்த்துத் தின்றது. எலும்பும் தோலுமாகிவிட்டான். அவன் சொத்து முழுவதையும் நடேசனுக்கு எழுதிவைத்தான்.

'அக்கா, மகனையும் மருமகளையும் பார்க்கத்தானே ஜாமீனிலேகூட ஓடியாந்தேன். திருநாளைக்குப் போன அதுக ரெண்டும் இன்னம் திரும்பல்லியே. என்ன விசயம்?'

விளக்கு வைக்கும் நேரத்தில் கிழவிக்குக் கடிதம் ஒன்று வந்தது. நடேசனும் பவளக்கொடியும் அக்கரைச் சீமைக்குப் போய்விட்டார்கள். அந்த 'ஜோடி' தேவனின் கண்களில் மீண்டும் விழிக்க விரும்பவில்லை!

'அப்பமகன்னு என் உயிரு இருக்கிறதுக்குள்ளே அதுங்க ரெண்டு பேரையும் கண்ணுலே காண முடியாதா? ஐயையோ! நான் படுபாவி, கொடுத்து வைக்காதவன். ஐயோ—' என்று புலம்பினன் மாசிமலைத்தேவன். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

அணையப்போகும் விளக்கு அழகாக ஒளி வீசியது!

தங்கச்சி

அந்தி வெயிலின் செங்கதிர்கள் எங்கும் பரவிக் கிடந்தன. அப்போதுதான் அவன் அடிமேல் அடிவைத்து அந்த ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தான். பரந்து அடர்ந்து நிழல் கவிழ்ந்து நின்ற ஆலமரம்தான் அவனுடைய சுவர்க்க பூமி!

'தங்கச்சி' என்று அன்பு கனிந்த குரலில் அழைத்தான்.

'அண்ணாச்சி, வந்திட்டிங்களா?' என்றாள் அவள்.

ஆர்வத்துடன் பதில் கொடுத்துக்கொண்டே கை வேலையை அப்படியே போட்டுவிட்டு எழுந்த அவள், தன் அண்ணன் நீட்டிய பையை வாங்கிக் கீழே வைத்தாள். அப்புறம் ஊன்றுகோலைத் தரையில் ஊன்றியவண்ணம் மெதுவாகக் கீழே உட்கார்ந்தான் செல்லையா. பிறகு தலையில் சுற்றியிருந்த 'முண்டாசை' அவிழ்த்து முகத்தைத் துடைத்துக்கொண்டே, தன் முன் நின்றுகொண்டிருந்த தங்கையை நோக்கினான். அவளுடைய முகத்தில் தனிப்பட்ட சோபிதம் காணப்படுவதைப் பார்த்ததும் அவனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

'தங்கச்சி, இன்னிக்கு நரி முகத்திலேதான் முழிச்சிருக்கணும். கல்யாணக்கார வீட்டு விருந்து சோறு கெடச்சுது. சாப்பிடறதுக்கு ஏற்பாடு பண்ணு, அப்புறம் இருட்டிவிடும்.'

'கோயிலிலேருந்து வந்த ஒரு அம்மா, தேங்காமுடி ஒண்ணு கொடுத்தாங்க, அதிலே தொவையல் செஞ்சிருக்கேன், அண்ணாச்சி' என்றாள் அவள்.

அன்றைக்குக் கிடைத்த அன்னத்தைச் சாப்பிட இருவரும் உட்கார்ந்தனர், சாப்பாடு முடிந்தது.

'தங்கச்சி, சின்னப் பாட்டு ஒண்ணு.'

'பாட்டா? ஏது ஒருமாதிரியா இருக்கீங்களே, இன்னிக்கு?'

'ஆமாம், வள்ளி...'

பிச்சைக்காரப் பெண் பாடினுள். பாட்டு முடிந்ததும், 'ஏதேது? தெம்மாங்கு கூடத் தெரியுதே' என்ருன் கேலியாக.

அவள் சிரித்தாள், அவனுக்கும் சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது. பின் இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

இவ்வித இன்பநிலையில், அண்ணனும் தங்கையும் எவ்வளவு நேரம் இருந்தார்களோ?

அவன் பெயர் செல்லையா. களையான தோற்றம். ஆனுலும் நொண்டி. ஊன்றுகோலின்றி அவனுல் ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாது.

வள்ளி! இதுதான் அந்தப் பெண்ணின் பெயர். வறுமையில் பிறந்த உயிர். ஆனுல், அதே வறுமை அவளது அழகிற்குத் திரையிடவில்லை.

ஜனசந்தடி அதிகமுள்ள கடைத்தெருப் பக்கங்களில் தான் அவர்கள் நடமாடுவார்கள். அங்குதானே ஏதாவது நாலு காசு வரும்படி கிடைக்கும்? வள்ளி, காதில் விழுந்து அனுபவப்பட்டிருந்த சினிமாப் பாட்டுக்களைப் பாடுவாள். அதற்கு ஏற்ருப்போல அவன் குழல் ஊதுவான். கான வெள்ளத்தில் கவர்ந்திழுக்கப்படும் ஜனங்கள் அவர்களைச் சுற்றிக் கூடிவிடுவார்கள். பிள்ளைப் பேற்றின் பெருமை உணர்ந்த புண்ணியவான்கள் கையில் இருப்பதை மறைக்காமல் அவர்கள் ஏந்தி நிற்கும் தட்டில் வீசி, வந்த வழியே செல்வார்கள். உடனே அந்த ஏழை உள்ளங்கள் மலர்ந்து விடும்.

இரவு நேரங்களில்தான் அவர்களுக்கு ஓய்வு கிடைக்கும். அப்பொழுது அண்ணனும் தங்கையும் பேசிக்கொள்ளும் பேச்சில் அகப்படாத விஷயமே பாக்கி இராது. வேடிக்கையாக வள்ளி ஏதாவது பேசினுல், அப்படியே கதைபோலக்

கேட்டுக்கொண்டிருப்பான் செல்லையா. அதில்தான் அவனுக்கு அளவுகடந்த ஆவல்! இப்படித்தான் அவர்களுடைய வாழ்க்கை நடந்துகொண்டிருந்தது.

புரண்டு படுத்தான் செல்லையா. தூக்கம் வரவில்லை. தலையைத் தூக்கி வள்ளியைப் பார்த்தான். கவலை ஏதுமின்றி நிச்சிந்தையாக உறங்கிக்கொண்டிருந்தாள் அவள்.

அவன் மனம் பூராவும் அன்று மத்தியானம் நிகழ்ந்த அந்தச் சம்பவத்தில்தான் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

உச்சிப் பொழுதிருக்கும். தெருக்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துகொண்டிருக்கையில், வழியில் பங்களாவின் முன் ஜனக்கும்பலொன்று காணப்படுவதைப் பார்த்தான். 'பெரிய பணக்காரங்க வீட்டுக் கண்ணாலம். ஏதாவது வசதியாகக் கிடைக்கும்' என்று நினைத்து, நின்ற நிலையில் சிறிதுநேரம் காத்திருந்தான். அதற்குள் 'வாங்க அண்ணே நீங்களும்' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். எல்லோரும் சூழ்ந்துவிட்டார்கள். நடுவில் யாரோ ஒரு பரிசாரகன் நின்றுகொண்டிருந்தான். பக்கத்தில் பெரிய பாத்திரமொன்றில் சாதம் பிசைந்து வைக்கப்பட்டிருந்தது. அவரவர்கள் முண்டியடித்துக்கொண்டு வாங்கிச் சென்றார்கள். செல்லையா முயன்று பார்த்தான்; முடியவில்லை. கம்பை ஊன்றியபடி அக்கூட்டத்திற்குள் எப்படி நுழைய முடியும்? ஆனால், மறு விநாடி தன் தோள்மீது யாரோ கைவைப்பது தெரிந்ததும் திரும்பிப் பார்த்தான்.

'அண்ணே!'—அறிமுகமற்ற புதுக்குரல் செல்லையாவுக்கு வியப்பை அளித்தது.

'என்ன அண்ணே, இப்படித் திகைச்சிப்போய்ப் பார்க்கிறீங்க! நீங்க இந்தச் சோத்தை வச்சிக்கிங்க. நான் போய் வேறே வாங்கிக்கிறேன். பாவம்! கம்பை ஊணிக்கிட்டு இந்தக் கும்பலில் புகுந்து எப்படிச் சோறு வாங்கமுடியும்?'

உவந்தளிப்பதை உள்ளப் பூரிப்புடன் ஏற்றுக்கொண்டான் செல்லையா. கொஞ்சநேரத்தில் பலநாள் தோளுக்குத்

தோளாகப் பழகிவிட்டது போன்ற சிநேகம் ஏற்பட்டது அவ்விருவரிடையிலும்.

அவனும் நாடோடிதானும். அம்மா மட்டும்தான் இருக்கின்றூர்களாம். தள்ளாத வயது; கண் பார்வைகூட கெட்டுவிட்டதாம். ஒரு மைல் தூரத்திலிருக்கும் சத்திரத்தில்தான் அவர்கள் இரண்டு பேரும் தங்கியிருக்கிறூர்களாம்.

'அப்படின்ஞ கண்ணுலம்—'

அதேசமயம் வள்ளியின் முகம் அவன் கண்முன் ஒருகணம் தோன்றி மறைந்தது.

'வேறே ஒருத்தரும் இல்லியா?'

'என்ன அப்படிக் கேக்கிறீங்க?' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் புதிய ஆள்.

'கண்ணுலம்—'

'பூ, இதுக்குத்தாஞ இப்படிச் சுத்தி வளேச்சு என்னென்னமோ கேக்கிறீங்க? பிச்சைக்காரப் பிழைப்பிலே கண்ணுலத்தைப்பற்றி நெனேச்சாச் சாத்தியப்படுமா? ஆஞ, அம்மாவுக்கு உசிரு இருக்கும்போதே யாராச்சும் ஒரு பெண்ணேக் கல்யாணம் செய்துவிடணும்னு இருக்கு. பெத்த மனசு பாருங்க! பொண்ணுக்கு எங்கே போறது?'

'இம்பிட்டுத் தங்கமான குணமிருக்கிற ஆளுக்கு வள்ளியைக் கட்டிக் கொடுத்தா அப்புறம் மனசிலே கவலேயே இல்லே' என்று நினேத்தான் செல்லேயா.

எனக்கு ஒரே ஒரு தங்கச்சி இருக்குது. அதை நம்ப மாதிரி நல்ல மனுசனுக்குக் கொடுத்துப்பிட்டா மனசு நிம்மதியா இருக்கும். அதுக்குப் புருசனேத் தேடிக்கிட்டுத் தான் இருக்கேன். அது அளகைப்பத்தி ரொம்பச் சொன்ஞ நல்லாயிராது. ஒங்களுக்குத் தங்கச்சியை...!'

செல்லேயா சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது அந்தப் புதிய ஆளின் முகம் மலர்ந்துவருவதையும் கவனித்துக் கொண்டேதான் இருந்தான்.

'அண்ணே, இன்னிக்கு எந்திருச்சது நல்ல பொழுதுதான் போலிருக்கு. ஒங்க இஷ்டப்படியே ஆகட்டும். அம்மாக் கிட்டேயும் சொல்லிப்பிடனும், அப்பத்தான் அதுக்கு மனசு சந்தோசமாயிருக்கும்.'

'ரொம்ப சரிங்க. நாளைக்குக் காலம்பற இதே இடத்துக்குக் கணக்காப் பார்க்கட்டுமா? அப்படியே ஒங்களையும் கூட்டிக்கிட்டுப் போய்த் தங்கச்சியைக் காண்பிக்கிறேன்!'

மீண்டும் புரண்டு படுத்தான். கண்களில் தூக்கம் சொக்கியது.

'தங்கச்சி!'

'அண்ணாச்சி!'

'இன்னிக்கு என்கூட நீயும் வரவேண்டாம். இருக்கிற அரிசியிலே இன்னொரு ஆளுக்கும் கூடச் சேர்த்துப் பொங்கி வை.'

அதிகம் சொல்லவில்லை. இருந்தும் அவன் நடையைக் கட்டிவிட்டான். ஆனால் வள்ளியின் நிம்மதியான உள்ளத்தைப் பெருஞ் சிந்தனையில் அமிழச் செய்துவிட்டல்லவா அவன் சென்றுவிட்டான்?

'கூட ஒரு ஆளுக்கும்—யார் அந்தப் புது ஆள்?' என்று யோசித்தாள் வள்ளி.

எல்லாவற்றையும் தயார் செய்து அவர்கள் வரவுக்குக் காத்திருந்தாள் வள்ளி.

கனவு கண்டு விழிப்பவள்போலத் தன் முன் நின்று கொண்டிருந்த தமையனைக் கண்டவுடன் 'அண்ணாச்சி' என்றாள் திடுக்கிட்டு. சொல்லிவைத்தாற்போலத் தன் அண்ணன்கூட மற்றொரு மனிதர்—முன்பின் அறியாத புது மனிதர்—நிற்பதைக் கண்டாள்.

'மச்சான், அதுதான் என் தங்கச்சி' என்றான் செல்லையா.

'யாரு இந்த ஆளு?' மனதிற்குள்ளாகக் கேட்டுக்கொண்டாள் வள்ளி. அவள் உள்ளத்தெழுந்த அக்கேள்விக்குக் குறிப்பறிந்து பதில் சொல்பவன்போல வள்ளியை அருகில் அழைத்துக் காதும் காதும் வைத்ததுபோல ஏதோ சொன்னான் செல்லையா.

'கண்ணாலம்—எனக்கா?'

பிரமித்துப் போய் இக்கேள்வியைக் கேட்டாள்.

'அண்ணாச்சி, மூத்தது நீங்க இருக்கிறப்ப அதற்குள்ளே எனக்கு என்ன அவசரம்?'

'வள்ளி, நொண்டியா இருக்கிற லட்சணத்திலே கண்ணாலம் ஒண்ணு தான் கொறச்சலா? நீ எப்பவும் சந்தோசமாயிருந்தாப் போதுமின்னுதானே நான் நெனைச்சுக்கிட்டிருக்கேன். நீயும் மச்சானும் கை பிடிச்சுக்கிட்டா அப்புறம் துளிக்கூடக் கவலை கிடையாது. தங்கச்சி...' என்று கெஞ்சினான் செல்லையா.

ஆல இலைத் தடுக்கில் சாதம் பறிமாறினாள் இரண்டு பேருக்கும். உண்டு முடிந்ததும் நெடுநேரம் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தார்கள் மூவரும். மச்சானின் பார்வை வள்ளியின்மீது விழுந்திருப்பதையும், அவள் அவனையே பார்த்த வண்ணமிருக்கையில் உதடுகளில் புன்முறுவல் நெளிந்தோடுவதையும் செல்லையாதானா கவனிக்காமல் இருப்பான்!

'மச்சான், உங்க மனசுபடி எல்லாம் செஞ்சுப்புடலாம். பொழுது போகப்போவுது. என்னைக் கண்டாத்தான் அம்மாவுக்கு உசிரு வரும். நாலு நாளிலே எல்லாத்தையும் முடிச்சுடலாம்.'

'சரி மச்சான்!' என்று விடை கொடுத்தனுப்பினான் செல்லையா. அப்பிரிவில் வள்ளியின் பெண் இதயம் உள்ளூற வேதனைப்பட ஆரம்பித்தது.

கையால் கன்னத்தைத் தாங்கிய வண்ணம் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாள் அந்தப் பிச்சைக்காரப் பெண்.

விழிக்கோடிகளில் மிதந்து கிடந்த கண்ணீரைத் துடைக்கக் கூட நினைவு வரவில்லை அவளுக்கு.

திடீரென்று மழை 'சோ'வென்று கொட்ட ஆரம் பித்தது.

மரத்தின்மீது சாய்ந்திருந்த தன் அண்ணனைக் கீழே படுக்க வைத்துவிட்டுத் தூற்றல் மேலே அடிக்காதிருக்கும்படி 'தட்டி' ஒன்றும் அணையாக வைத்தாள். ஒருதடவை செல்லையாவை உற்று நோக்கினுள். அவளுக்கு வெல வெலத்துவிட்டது. தன் உயிரைக் கொடுத்துத் தன்னை உயிருக் குயிராகக் கண்காணித்து வந்த அருமை அண்ணனுக்கு உடம்புக்கு முடியவில்லை என்பதை நினைத்துப் பார்த்த பொழுது அவளுக்கு அழுகை வந்துவிட்டது.

மெதுவாக 'அண்ணுச்சி' என்று கூப்பிட்டாள். அவள் குரலில் வேதனை தலைதூக்கியிருந்தது.

தங்கையின் குரல் கேட்டதும் மெல்லக் கண்களைத் திறந்தான்.

'தங்கச்சி, அழாதே, ஒடம்புக்கு ஒண்ணுமில்லே. சும்மா சுத்தி அலைஞ்ச அலுப்பிலே கொஞ்சம் சூடாயிருக்குது" என்று சமாதானப்படுத்தினுன்.

ஆனுல், அதே சமயம் 'தனக்கு ஏதாவது நேர்ந்திட்டால் பின்னுல் தங்கச்சி பாடு—'என்ற எண்ணம் அலைபாய்ந்தோடிய போது மட்டும் அவனுக்குக் கண்களில் நீர் பொங்கியது.

செல்லையாவின் அருகில் உட்கார்ந்திருந்த வள்ளி அவன் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். தணல் மாதிரி உடம்பு கொதித்தது. என்ன செய்வதென்று தோன்றவில்லை அவளுக்கு. வைத்த கண் கொட்டாமல் அண்ணனையே பார்த்துக்கொண்டிருந்தாள் அவள்.

காற்றில் விலகியிருந்த மேல் துணியை இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்க ஆரம்பித்தான் செல்லையா.

திடீரென்று பிரமைபிடித்தவன் போலத் தலையை உயர்த்திக் கண்களைத் திறந்து பார்த்தான். அப்பொழுதுதான்

அவன்மீது ஏதோ ஸ்பரிசம் பட்டது அவனுடைய நினைவிற்கு வந்தது.

'யாரது, மச்சானு? இந்த மழையிலேயும் காத்திலேயும் ஏதுக்கு இங்கிட்டு வந்தே?'

'மச்சான் வள்ளி எங்கே? அதைக் காணவேணும் போலே யிருக்கு. எங்கே?'

'மரத்து ஓண்டலிலேதானே படுத்திருக்கும் எப்பவும்?'

'அங்கிட்டுக் காணலையே.' இதைக் கேட்டதும் இடியால் தாக்குண்டவன் போல ஜுரம் என்ற நினைவுகூட மறந்து அப்படியே எழுந்து உட்கார்ந்தான் செல்லையா.

'மச்சான், இனிமே என்னைப்பத்தி மறந்திடுங்க. நான் திருடன். என்னமோ தோணிச்சு. புத்தியில்லாமத் திருடிப் பிட்டேன் ஒரு சேலைக் கடையிலே. கடைசியா அம்பிட்டுக் கிட்டேன்' என்று வார்த்தைகளை முடித்துவிட்டுக் கையில் மாட்டப்பட்டிருந்த விலங்குகளை மேலே உயர்த்தினன்.

'ஐயோ, திருடனு?' செல்லையா ஸ்தம்பித்துவிட்டான்.

'ஊம். நாழி ஆகிவிட்டது. ஜல்தி' போலீஸ்காரன் அதிகாரத்துடன் உத்தரவிட்டான்.

'எசமான், நீங்க ரொம்ப நல்லவங்க. வள்ளிய ஒரு தரமாச்சும் பார்த்துப்பிட்டு வந்துடறேன். கொஞ்சம்...' என்று கெஞ்சிக் கும்பிட்டான்.

அதே சமயம் 'ஏய்' என்று அலட்டும் சப்தம் கேட்டுத் திரும்பினன். கையில் விளக்குடன் இரண்டு பேர் வந்து நின்றார்கள். அதன்பின் சிலர் தாங்கள் தூக்கிவந்த உருவத்தை மெதுவாகத் தரையில் கிடத்திவிட்டு 'ஏய், இந்தக் குட்டி உன் தங்கச்சியா? செத்த முந்தி கொட்டற மழையிலே ஓடியாந்து அண்ணனுக்கு ஜுரமின்னு சுடுசோறு கேட்டுச்சு. சோறு போட்டதும் போயிருக்குது. திடுமின்னு யாரோ அலறும் சத்தம் கேட்டு ஓடிப் போய்ப் பார்த்தோம். இது தரையிலே சுருண்டு கிடந்துச்சு. அப்பத்தான் பாம்பு ஒண்ணு ஓட்டமா ஓடிச்சு. ஐயோ! விரியம் பாம்பு மாதிரி

தான் தோணுச்சு' என்று சொல்லி முடித்தான் வந்தவர்களில் ஒருவன்.

'ஐயோ, தங்கச்சி! சோரு? கடைசியிலே உனக்கு நான் தானு எமனு வரவேணும்?' விக்கலுக்கும் விம்மலுக்கு மிடையே கதறினான் செல்லையா.

வள்ளி மெல்லக் கண்களை விழித்தாள். அவள் பார்வை யில் ஒருவிதத் துடிப்புக் காணப்பட்டது. கண்கள் இரண்டும் இருளடைந்திருந்தன.

மறுகணம் அந்தப் பிச்சைக்காரக் கைதி முன்செல்ல, அவனுக்குக் காவலாக—ஆனால் கம்பீரமான நடை போட்டுக் கொண்டு போலீஸ்காரர்கள் பின்தொடர மூவரும் இருளோடு இருளாக மறைந்துகொண்டிருந்தார்கள்!

வாழப் பிறந்தவள்

நடுச்சாமம்.

இரவு ஊர்ந்துகொண்டிருந்தது.

ஒளி உமிழ்ந்து பரப்பி நின்ற மேஜை விளக்கின் பாதத்தில் விரிந்து கிடந்த வைத்திய சஞ்சிகை ஒன்றில் கருத்தை மையமிட்டுப் படித்துக்கொண்டிருந்தார் டாக்டர் சேகரன்.

'டாக்டர் ஐயா.'

'டாக்டர்—எசமான்—'

ஒன்றியிருந்த உள்ளத்தைத் திருப்பிவிட்டுக் குரல் குறுக்கிட்ட திசைக்குத் திருஷ்டியைத் திருப்பினார். வாசல் கதவு 'படீர் படீ'ரென்று ஓசை ஓலமிடத் தட்டும் சப்தம் காதைத் துளைத்தது; ஓடிப்போய்த் திறந்தார்.

மூச்சுப்பிடிக்க ஓடிவந்து அறையில் விழுந்த கண்ணுச்சாமியைக் கண்டதும் டாக்டருக்குத் திகைப்பு வளர்ந்தது.

'கண்ணுச்சாமி.'

'எசமான், காஞ்சனை எங்கேயோ மறைஞ்சுப் போயிட்டாளே.'

'காஞ்சனை!'—

சேகரனுக்குப் பகீரென்றது. மனத்திரையில் புனையா ஓவியமெனத் தீட்டப்பட்டிருந்த அவள் எழில் பிம்பம் இமைப்போதில் அவர் கண்முன் நிழல் வடிவிட்டது. விழிகள் கண்ணீர் கூட்டின.

'என்ன, காஞ்சனை மறைந்துவிட்டாளா? அதுவும் இந்த அகாலவேளையில்—குமையும் இருள் வீச்சிலே—?'

'ஐயையோ, என் அருமை மகள் எங்கே போனுளோ தெரியலையே. எப்பவும் போலத்தான் தூங்கிக்கிட்டிருந் துச்சு. என்னமோ லேசாச் சத்தம் கேட்டது. விழிச்சுக் கிட்ட நான், "யார் அது" என்று குரல் கொடுத்துப் பார்த்தேன். பதிலே வல்லே. மனசு சந்தேகப்பட்டது. விளக்கைத் தூண்டிக் காஞ்சனே படுத்திருந்த இடத்தைப் பார்த்தேன். அந்த இடம் சும்மா காலியாயிருந்துச்சு. என் உயிரே போயிடுச்சு எசமான்.'

துயரம் சுருதி சேர்க்க விக்கலுடன் நடந்ததைச் சொன் ஞன் கண்ணுச்சாமி.

'காஞ்சனை இப்படித் திடுதிப்பென்னு மறைய என்ன தான் காரணம்? பெண் இதயம் பேதலிக்கப் பிழைபட ஏதாகிலும் சொன்ஞயா?'

மனம் கற்பித்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு கேள்வியை உதிர்த்துவிட்டார் டாக்டர், கண் ணுச்சாமியிடம்.

ஆனுல் கேட்ட கேள்வி அவனைச் சுட்டுவிட்டதோ என் னவோ, பாவம்! பச்சைக் குழந்தைபோல அவன் விசித்து அழ ஆரம்பித்தான்.

'எசமான், "அது" பிறந்த நாளிலிருந்து முகம் கண்ட இதுவரை ஒரு வார்த்தைகூடச் சொன்னதில்லிங்க.'

'ஒருவேளை ரயிலடிப்பக்கம் போயிருக்கலாம்; ஏனென் ருல், இன்னும் அரைமணி நேரத்தில் வடக்கே ஒரு ரயில் இருக்கிறது. எதற்கும் பதட்டப்படாமல் வா, போய்ப் பார்க்கலாம்.'

எங்கும் மோனம்!

ரயிலடிக்குச் சென்றுகொண்டிருந்த அவர்கள் இரு வரும் வழியில் குறுக்கிட்ட ஆற்றுப் பாலத்தை அணுகும் போது, இருளில் ஒரு புள்ளியென வெள்ளை உருவமொன்று முன்செல்வது புலஞயிற்று. மறு விஞடி 'தொபேலெ'ன்று பெருத்த ஓசை ஓலம் எழுப்பி அமைதியைக் கலைத்தது,

அதே தருணத்தில் பாலத்தில் போய்க்கொண்டிருந்த உருவமும் மறைந்தது.

'என்ன அந்தச் சப்தம்?'

'நீங்களும் கவனிச்சிங்களா எசமான்?'

அடுத்தகணம் சேகரன் தண்ணீரில் குதித்தார். நல்லவேளையாகத் தண்ணீர் கழுத்தளவே இருந்தது. நீரில் மூழ்கி எழுந்த அவர் கையில் மனித உடல் ஒன்று தட்டுப்பட்டதை உணர, பலத்தை ஒன்றுசேர்த்து அவ்வுருவத்தைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்.

வழியில் கிடத்தப்பட்டிருந்த உடலை அருகிலிருந்த விளக்குக் கம்பத்தின் மங்கிய ஒளியில் உற்றுக் கவனித்தான் கண்ணுச்சாமி. உள்ளம் அதிர, 'ஐயோ, கடைசியிலே அது என் காஞ்சனைதானு?' என்று அலறினுன்.

'காஞ்சனை!'

முத்துப் பதிந்த மென்முறுவல்; அதிலே மயங்கச் செய்யும் காந்த இழைவு. வேல் விழிகள்; அதிலே மனங் கவர் மானின் மருட்சி. தளிர் மேனி; அதிலே பருவ வளர்ச்சியின் பூரித்த அங்கங்கள். ஆமாம்; அனைத்தும் காஞ்சனை!

இருந்தும்...!

வாழ்க்கைப் பூங்காவில் புதுமணம் பரப்ப வேண்டிய புதுமலர் பேயும் அஞ்சும் மையிருட்டில் ஆற்றைச் சரணடையக் காரணம்? இளமையின் தொடக்கத்திலேயே வாழ்வு வெறுக்கும்படி என்னதான் சம்பவித்தது?

வீட்டிற்குக் கொண்டுவந்து படுக்கவைத்தான் கண்ணுச்சாமி. அவள் விரக்திக்குக் காரணம் பிடிபடாமல் மனம் குழம்பிக் கிடந்த சேகரன் 'ஸ்டெத்தாஸ்கோப்' கொண்டு சோதனை செய்து பார்த்தார். உயிருக்குப் பயமில்லை என்பதை உணர்ந்ததும் அவருக்கு மிக ஆறுதல் உண்டானது.

நிமிஷங்கள் சில தேய்ந்தன.

இணைந்திருந்த இமை வட்டங்களிடையே விழி விரிப்பு. மெல்ல மெல்லக் கண்களைத் திறந்து சுற்றிப் பார்த்தாள் காஞ்சனை.

டாக்டர் முகத்தில் வியப்பு; கண்ணுச்சாமிக்கு அப்போதுதான் போன உயிர் மீண்டது போன்ற அமைதி.

காஞ்சனையின் புருவங்கள் மேலேறி நின்றன. சேகரன் திரும்பினார், அவள் பக்கமாக. பார்வைகள் பரிமாறின.

'காஞ்சனை, இருந்திருந்தாற்போல ஆற்றில் விழ நேரிட்டதின் மர்மம்தான் என்ன?' டாக்டர் அன்புடன் வினவினார்.

அவள் பதில் கூறாமல் கண்ணீர் பெருக்க ஆரம்பித்தாள்; உடல் நடுங்க மார்பகம் ஓர் முறை விம்மித் தாழ்ந்தது.

'காஞ்சனை, ஏன் இப்படித் தேம்புகிறாய்? உன் மௌனமும் மனக் கலக்கமும் உன் தந்தைக்கு எவ்வித சஞ்சலத்தை உண்டாக்கும் என்பதை யோசித்தாயா? சொல். என்னவானாலும் வாயைத் திறந்து பதில் கூறு.'

இவ்விதம் சொல்லிய டாக்டர் திரும்பவும் அவளை நோக்கினார். விழிவெள்ளம் அடங்கவில்லை. தன் தந்தையையும் சேகரனையும் மாறி மாறிப் பார்த்த அவள் பார்வையில் அடியுண்ட மானின் வேதனை தடம் பரப்பியது.

'டாக்டர் ஸார், தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள். நான் சாகப் பிறந்தவள். உலகம் சிரிக்க, மனசுக்கு என் இதய அந்தரங்கத்தை வளைத்து முத்தமிட்டுச் செல்லும் நரக வேதனையைச் சகிக்க எப்படி என் மனம் தாளும்?'

'காஞ்சனை, விபரமாகச் சொல்.'

'நான் கர்ப்பவதி.'

'என்ன?'

இரண்டு குரல்கள் ஓரே சமயத்தில் எதிரொலித்தன.

'சில வாரங்களுக்கு முன் நடந்த விஷயம். பணத்தின் மமதையில் இடப்பட்ட விஷவித்து. மிட்டாதார் மகள் என் வகுப்புத் தோழி. ஒருநாள் அவளிடம் புத்தகமொன்று

வாங்கப் போனேன். அவள் இல்லை; அவள் தமையன் மட்டுமே இருந்தான். நான் புறப்படுவதைக் கண்ட அவன், தன் தங்கை வரும் நேரமாகிவிட்டதாகத் தங்கச் செய்தான். நான் தங்கினேன், தோழியைக் காண. ஆனால் மறுநிமிஷம் அந்தப் பாவி என்னை பலவந்தப்படுத்தி...ஐயோ...இந்த இழிவுநிலையிலா மீண்டும் இவ்வுலகைத் திரும்பக் காண என்னைக் காப்பாற்றியிருக்கிறீர்கள். ஊஹூம் சாத்திய மில்லை...திரும்பவும் தந்தையின் முன்னிலையில்...உங்கள் முன்னிலையில்...அந்தோ!"

வார்த்தைகள் குழம்பின.

இளகிய நெஞ்சம் படைத்தவனல்லவா தமிழன்?

சேகரன் கண்கலங்கினார். கண்ணுச்சாமி செயலிழந் தான்.

டாக்டர் சிந்தித்தார். சிந்தனையின் தொடுவாயில் எண் ணங்கள் அலைபாய்ந்தன.

'காஞ்சனை கபடமற்றவள். பச்சைப் பசுங்குழந்தை போன்றது அவள் மனப் பண்பாடு. தகதகக்கும் செந்தணல் பிழம்புகளில் அவளைத் தள்ளி அவளுடைய மலரவேண்டிய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியிடத்தான் திட்டமிட்டிருப்பான் அந்த வஞ்சகன். அதன் நிமித்தம் அவள் வெந்து சாம்ப லாக வேண்டியதுதானா? எத்துணை கோரமான நியதி! நினைக்கவும் மயிர் சிலிர்க்கும் ஆணையல்லவா? உலகில் பிறக்கத் தவங்கிடந்து, பின் இப்படிச் சாவை அரவணைக்க அதற்கு வரவேற்பும் அளிக்கவேண்டுமா? கூடவே கூடாது. பெண் பாவம் பொல்லாதது. தூண்டிற் புழுவாகத் துடிக்கும் அவளுக்கு அபயமளிப்பதே புண்ணியம்—கடமை. ஆம்; அவள் காப்பாற்றப்படவேணும். இனி காஞ்சனை என் உயிர்த்துணைவி...ஆகா!'

தன்னிடம் வேலைசெய்யும் காவற்காரனின் மகளைக் கரம்பற்ற முடிவு செய்தார் டாக்டர். வாழ்க்கைப் புத்தகத் தின் ஆரம்ப அத்தியாயம் அவளாலேயே துவக்கப்பட வேண்டும். அவருக்கு அனைத்தும் கனவு மாதிரி தோன்றிற்று.

நீர்த்திரையிட்டிருந்த கண்களுடன் காஞ்சனையை நோக்கி 'காஞ்சனை, நீ என்னை மணம் செய்துகொள்ள...' என்றார்.

இக்கேள்வியைக் கண்ணுச்சாமி எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? அவன் முகத்தில் ஆச்சரிய ரேகை தாரை ஓடியது.

'டாக்டர், குற்றம் படைத்த என்னை ஏற்றுக்கொண்டீர்களானால் அப்புறம் சமூகம் உங்களைத் தூற்ற ஆரம்பிக்குமே.'

'சமூகம் அது கிடக்கட்டும். அதே சமூகம் உன்னுடைய மாசு மருவற்ற புனிதத் தன்மையை ஏன் ஊகித்துணர முடியாதென நினைக்கிறாய்?'

'அப்படியென்றால் நான் வாழப் பிறந்தவள்தானா?'

நன்றியின் மிகுதியில் அவள் கண்ணீர் உகுத்தாள். டாக்டரின் கால்களைப்பற்றிப் பணிய ஓடினான் கண்ணுச்சாமி.

ஆனால்...?

மறு விநாடி அண்டம் கலங்க எழும்பிய 'ஐயையோ' என்ற வேதனை கலந்த அபயக் குரல் கேட்டுத் திரும்பினார் சேகரன்.

காஞ்சனையின் மார்பில் பதிந்திருந்த வாளைப் பிளந்து பிரவகித்துக்கொண்டிருந்தது குருதி வெள்ளம். தற்கொலை!..

ஒன்றும் தோன்றாமல் நின்ற டாக்டருக்கு உலகமே சுழன்றது. கண்ணுச்சாமி பேய்ச் சிரிப்பு உமிழ்ந்தான்.

என்ன தோன்றிற்றோ, அடுத்த கணம் மிட்டாதார் வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான் கண்ணுச்சாமி.

போட்டி

நுங்கும் நுரையுமாகக் குமிழியிட்டுச் சென்றிருந்த காவேரியின் புதுவெள்ளப் பூரிப்பில் மனம்விட்டு லயித்திருந்த அவள் காற்றில் கலந்துவந்த குழல் ஓசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். நினைத்தபடி முத்தையனைக் காண வில்லை. குணவதிக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. வழக்க மாக வரும் அந்த ஒற்றையடிப் பாதையை மீண்டும் ஒருமுறை நோக்கினாள். செடி மறைவிலிருந்து மெல்ல எழுந்த முத்தை யனைக் கண்டவுடன் குணவதிக்குச் சந்தோஷம் எல்லை கடந்தது. தன்னை வழக்கம்போல ஏமாற்றி வேடிக்கை பார்க்கவே இப்படிச் செய்திருக்கிறான் முத்தையன் என்பதை அறிந்த குணவதி, சுய கௌரவத்தை விட்டுக்கொடுக்க விரும்பாதவள்போல மறுபடியும் அலைபாய்ந்து ஓடிக்கொண் டிருந்த புதுப்புனலின் பரப்பில் கால்களைப் பதித்து விளையாட ஆரம்பித்தாள்.

'ஏலே குணவதி.'

குழைந்த அக்குரலின் மோகனநாதம் அவளை என்ன செய்ததோ? சற்றுமுன் கொண்ட திட வைராக்கியம் எங்கு ஓடி ஒளிந்ததோ? மெதுவாகத் தலையைத் திருப்பிப் புன் னகை பூத்தாள், தன் எதிரே ஒயிலுடன் நின்றுகொண் டிருந்த முத்தையனைப் பார்த்து. ஆனால் மறு விநாடி அவ ளுடைய மலர்ந்த முகம் குவியக்கண்ட முத்தையன், கார ணம் ஒன்றும் விளங்காதவனாய்க் கதிகலங்கினான்.

'குணவதி எம்மேலே கோவமா ஒனக்கு? ஏதுக்கு இப்படித் திடீர்னு ஒன் முகம் மாறிடுச்சு?'

'மச்சான், ஒங்களுக்கு விசயமே தெரியாதாங்காட்டியும்? ஆளு செத்தானா பொளைச்சானாங்கற சேதிகூட இம்பிட்டு

வருசமாப் புரியாம இருந்த ஓட்டுவீட்டு மேஸ்திரியாரு மகன் மாரி நேத்திக்கு ரங்கூனிலேருந்து வந்திருக்கானும். எல்லாங் கிடக்க அம்மாவையும் மத்தியான்னம் ஒரு ஆளு அனுப்பி மேஸ்திரி கூப்பிட்டுருக்காரு. என்ன கதையோ...?'

குணவதி எந்த அர்த்தத்தில் பூடகமாக விஷயத்தைச் சொல்லுகிறுள் என்பதை முத்தையன் உணராமல் இல்லே. மேஸ்திரி மகனுக்குக் குணவதி 'முறைப்பெண்' என்பதை உணர்ந்த அவனுக்குக் கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது.

'குணவதி' என்று மேற்கொண்டு ஏதோ சொல்ல வாயெடுத்தான் முத்தையன். அதற்குள் கண்கலங்க நின்று கொண்டிருந்த குணவதியின் வயதான தாயைக் கண்டதும் இருவர் நிலேயும் மோசமானது.

'சோடிப் புருக்கணக்கா நீங்க ரெண்டுபேரும் என்னேக்கும் இருப்பீங்கன்னு கொண்டிருந்த என் ஆசைக்கு மோசம் வருமின்னு துளிகூட நினைக்கலேயே. மேஸ்திரி தன் மகனுக்குத்தான் ஒன்னேக் கட்டிக்கொடுக்க வேணுமாம். மொறைப் பொண்ணும். அதே தான் நம் சாதிக்கட்டுப்பாடாம். இப்படி ஒரே மூச்சா என்னென்னமோ சொன்னுரு. மாரிக்கு ஒன்னேக் கண்ணுலம் பண்ணிஞ நாம்ப தப்பிச்சோமாம். இல்லாட்டி நம்பளே ஒரு கை பார்த்துடுவாராம்...' என்று குணவதியிடம் விம்மலுடன் கூறி முடித்தாள் அவள் தாய்.

முத்தையனுக்கு மனதில் ஒரு கலக்கம் ஏற்பட்டது, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நின்றுகொண்டிருந்த தன் அம்மா போனபிறகு தணிந்த குரலில் 'மச்சான்' என்றுள் குணவதி.

'குணவதி நீ கண் கலங்காதே. எதுக்கும் கொடுத்து வைக்கவேணும். அவங்க அவங்க தலேயெழுத்தை மாத்திப் போட யாராலேதான் ஏலும்? ஒண்ணுக்கும் உதவாத இந்த ஒண்டியாலே, பாவம் ஒறமொறைக்குள்ளார ஏதுக்கு வீணு தவசலும் சண்டையும்? நான் ஒண்ணு மாத்திரம் கேட்கிறேன். என்னேப்பத்திய நெனேப்பு மட்டும் மாரும

உனக்கு இருந்தா அதுவே போதும். மறு பேச்சாடாமல் மாரியைத்தானே கண்ணாலம்—'

வார்த்தைகளை முடிப்பதற்குள் குணவதி இடைமறித்து, 'மச்சான் வெந்த புண்ணிலே வேலிடவா வேணும்? இவ்வளவு வருசமாப் பழகியுங்கூடக் குணவதியை நீங்க புரிஞ்சுக்கலையா? மொறப்பொண்ணுமில்லே மொறைப்பொண்ணு, அன்னிக்கு அப்பாரு சாகக் கிடக்கிறப்போ ஒரு உதவி ஒத்தாசை செய்யத் துப்பில்லே. அன்னிக்கு விட்டுப்போன சொந்தம் இப்ப எப்பிடிப் புதுசா முளைச்சுதாம்? மச்சான், ஒரு யோசனை தோணுது. மூணும்பேருக்குத் தெரியாம ராவோடு ராவா கண்டிச் சீமைப் பக்கம் ஓடிடலாமே...' என்று பதட்டமாகக் கேட்டாள்.

'குணவதி, அவுங்களுக்குப் பயந்து ஏதுக்கு ஓடணும்? உன் அன்பு எம்மேலே உள்ளவரைக்கும் அதுவே எனக்குப் பத்து ஆளு பலத்தைக் கொடுக்கும்! பார்த்துக்கலாம்—' என்று ஆத்திரத்தோடு மொழிந்த முத்தையனைக் கண்டதும் குணவதி ஆச்சரியப்பட்டாள்.

'குணவதி, ஏந்திரு. மஞ்சள் வெய்யல் மறையறதுக்குள்ளே ஒரு ஓட்டம் படகிலே போயிட்டுவரலாம்.'

மறுமலர்ச்சியடைந்தவர்களைப் போன்று குணவதியும் முத்தையனும் படகைத் தள்ளினார்கள். காவேரியின் அன்பணைப்பில் மிதந்தது பரிசல்!

அடுத்த நாள்—!

நொந்த மனத்துடன் தெருவில் போய்க்கொண்டிருந்தான் முத்தையன். அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. தெருக்கூத்தில் வரும் ராஜபார்ட் மாதிரி உடையணிந்து குஷாலாக வந்துகொண்டிருந்தான் மேஸ்திரி மகன் மாரி. குணவதிக்குப் போட்டியிடும் அவனைக் கண்ட முத்தையனுக்கு நெஞ்சு படபடத்தது. மேலும் அன்று குணவதியின் தாய் சொன்ன விஷயங்களும் நினைவுக்கு வந்தன.

விவரம் தெரிந்த நாள் முதலாக முத்தையனும் குணவதியும் அன்னியோன்யமாகப் பழகி வந்திருக்கின்றனர். அந்நாள் தொட்டே குணவதி முத்தையனுக்குத்தான் என்று திட்டமிட்டாள் குணவதியின் தாய். தந்தை தாயற்ற தன்பேரில் தனித்த பரிவுகாட்டும் அக்குடும்பத்தில் முத்தையனுக்கு இனம்தெரியாத பாசம் ஏற்பட்டதில் வியப்பில்லைதான்.

காவேரியை அடுத்திருந்தது குடியிருப்பு. அதற்கெல்லாம் மேஸ்திரிதான் தலைக்கட்டு. கொஞ்சம் 'பசை'யான பேர்வழி. பணப் புழக்கம் குலுங்கும் இடம். அப்புறம் கேட்பானேன்? மேஸ்திரி மகன் மாரி நாலைந்து வருஷங்களுக்கு முன் பர்மா போயிருந்தான். அவனைப்பற்றி அன்று வரை யாதொரு தகவலும் கிடைக்காததால் மேஸ்திரியும் குணவதி விஷயத்தில் ஒன்றும் குறுக்கிடவில்லை. ஆனால் குணவதியும் முத்தையனும் என்றோ கைபிடித்த தம்பதிகளாக வேண்டியவர்கள். அதுவேதான் வயதான குணவதியின் அம்மா கண்டுவந்த கனவும் ஆகும். எதற்கும் காலமும் வேளையும் கூடிவர வேண்டாமா?

'முத்து அண்ணே'—

'வா மாரி, இப்பத்தான் ஒன்னை நெனச்சேன், ஆயுசு நூறு' என்று மேல் பூச்சாக ஏதோ பேசினுன் முத்தையன்.

'குணவதியை எம்மகனுக்குக் கட்டிக்கொடுக்காட்டி அப்பறம் ஒரு கை பார்த்துக்கலாம்'—என்று மேஸ்திரி எச்சரித்த விஷயமும் அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது.

'அண்ணே, ஒன்னைக் கண்டு சேதி பேசத்தான் ஓடியாந்தேன். தேடிப்போன மூலிகை காலிலே சிக்கின கதையா நீயே குறுக்கே வந்துப்புட்டெ, விசயம் அல்லாம் புரிஞ்சுக்கிட்டேன். அத்தைமவள், குணவதியைக் கட்டிக்க வேண்டியது நான். ஆனு அதுக்குப் போட்டியா நீ இருக்கே. இப்ப எல்லாருமாக் கூடி ஒரு முடிவு கட்டியிருக்கோம். அதாவது நம்ப காவேரியிலே கோடி முக்கம் வரைக்கும் நாம்ப ரெண்டு பேரும் பரிசல் ஓட்டி அதிலே யாரு முதலிலே வந்து செயிக்கிறுங்களோ அவனுக்குத்தான் குணவதி. நல்லா யோசிச்சு

முடிவு சொல்லிப்பிடு. முத்து, அப்பறமாப் பேச்சை மாத்தப்படாது.

சாதுரியமாகப் பேசிய மாரியின் வார்த்தைகளில் முத்தையனுக்கு நம்பிக்கை பிறந்தது. அவன் சொல்லும் முடிவும் நியாயமானதாகவே பட்டது. உடனே சம்மதம் தெரிவித்தான்.

'என்னிக்குப் பந்தயம் வச்சுக்கிடலாம்?' என்று கேட்டான் முத்தையன்.

'அடுத்த கிளமை இன்னேரமா' என்று பதில் கொடுத்தான் மாரி.

மாரியை அனுப்பிவிட்டுத் திரும்பினான். வழியில் குணவதி குதூகலத்துடன் வந்துகொண்டிருந்தாள், இடுப்பில் கூடையுடன்.

'குணவதி, கூடையெல்லாம் பெலமா இருக்கே புதுசா'—வேடிக்கையாக வினவினான் முத்தையன்.

'ஆமா மச்சான், ஒங்க அதிர்ஷ்டம் பெலமா இருக்கணு மேன்னு அரசமரத்துப் பிள்ளையாருக்கு நெதம் பூச்சாத்த ரேன்னு வேண்டிக்கிட்டிருக்கேன்.

'நீ சொல்றது ஏதும் புரியலையே.'

'மச்சான், ஒங்களுக்குத் தெரியாதா? அந்த நாளிலே சனக மவராசா தம் வில்லை ஒடிக்கறவுங்களுக்குத்தான் தம் மவ சீதையைக் கொடுக்கிறதாச் சொன்னாருன்னு கதை கேட்டிருக்கேன். இப்ப என்னுடான்னு பரிசல் பந்தயம்—'

'இப்பல்ல புரியுது. குணவதி கொஞ்ச முந்தித்தான் மாரிப் பய வந்து சேதி பூராவையும் சொன்னான். நானும் சரின்னு சொல்லிட்டேன்' என்றான் முத்தையன் சன்னக் குரலில்.

'மச்சான் கண்ணாலம் கட்டிக்கிறதிலே எனக்கும் பாத்தியம் இருக்கு. ஒங்களை நெனைச்ச மனசு இனிக் கனவிலே கூட அந்தப் பய மவன் மாரியை நெனைக்காது. அப்படி

யிருக்க என்னத்துக்குப் பந்தயமும் மண்ணாங்கட்டியும். மாரிப் பய என்னமோ சூது பண்ணி—'

'உஸ், சத்தம் போடாதே குணவதி. அவங்க ஒரு வளிக்குத் தோதா வர்றபோது நாமும் கொஞ்சம் விட்டுக் கொடுக்கத்தான் வேணுமாக்கும். நீ ஒன்னுக்கும் கவலைப் படாதே. இப்பச் சொல்றேன்னு பாரு. கடைசிவரை நீ மட்டும் என் குணவதிதான்—' என்றான் முத்தையன்.

குணவதிக்கு முத்தையன் கூறின வார்த்தைகள் தெம்பை ஊட்டின. அவள் கன்னங்களில் நாணம் தடம் பதிந்தது. சூரியனின் இளங்கதிர்கள் அவள் வதனத்தைப் பின்னும் சோபிக்கச் செய்தன. அக்காட்சியில் தன்னை மறந்தான் முத்தையன்.

அந்தி வானில் விந்தைக் கோலங்கள் மலர்ந்திருந்தன. அன்றுதான் முத்தையனும் மாரியும் ஒப்பந்தம் செய்து கொண்ட பந்தயநாள். காவேரிக் கரையில் கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்தனர். குணவதி படிக்கட்டின் ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்தாள். நாலைந்து நாட்களுக்கு முன்னிருந்த தைரியம் அவளுக்குத் தற்சமயம் இல்லை. எப்படியும் வெற்றி தன் மச்சான் முத்தையாவுக்குத்தான் என்பது நிச்சயமானாலும், ஒருக்கால் கெட்ட காலமாக மாரி பக்கம் அதிர்ஷ்டம் திரும்பிவிட்டால் தன் கதி என்னாகும் என்பதை நினைத்துப் பார்த்த அவளுக்கு அதிர்ச்சி உண்டாயிற்று. காதல் பரீட்சை அப்புறம் விஷப் பரீட்சையாகிவிடுமோ என்று மனம் நொந்தாள். இத்தகைய இக்கட்டான நிலையில் கடவுள் பேரில் பாரத்தைப் போட்டுக் காணிக்கை வேண்டிக்கொண்டாள் குணவதி.

கண் மூடிக் கண் திறக்கும்போதில் கூட்டத்தில் அமைதி நிலவியது. முத்தையனைக் கண்டவுடன் ஓடிவந்து தைரிய மூட்டினாள் குணவதி. புத்துயிர் பெற்ற முத்தையன் சுதாரிப்புடன் படகில் தாவினான். அதே சமயம் மாரியும் ஜாடையாகக் குணவதியை நிமிர்ந்து நோக்கினான். ஆனால்

அவள் இவனைச் சட்டை செய்யாமல் முகத்தை அப்பால் திருப்பிவிட்டாள். எதிர்பாராத ஏமாற்றத்தால் வேதனையடைந்த மாரி படகில் அமர்ந்தான். இரண்டுபேரும் மறு கணம் துடுப்பைத் தள்ள ஆரம்பித்தனர். ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் படகுகள் நீரைக் கிழித்தோடின. அக் கரை மூலையில் எல்லையிடப்பட்டிருந்தது கொடி ஒன்று.

அந்த வட்டாரத்தில் படகு ஓட்டுவதில் முத்தையன் ரொம்பவும் அனுபவம் பெற்றவன். ஆதலால் எவ்விதத்திலும் மாரியைத் தோற்கடித்துவிடலாமென்ற நினைப்பு. வர வர அவனுக்கு ஷோக்கு பிறந்தது. ஆனால் மாரியின் படகும் சளைக்கவில்லை.

கொஞ்ச நாழிகை சென்றது. எல்லையைத் தொட்டுத் திரும்பிய படகுகள் இரண்டில் ஒன்று மட்டுமே கண் பார்வையில் தெரிந்தது. ஜனங்கள் ஆர்ப்பரித்தனர். குணவதி கண்களைத் தீட்டிக்கொண்டு ஆதுரம் ததும்ப உற்று நோக்கினாள். அவளுக்கு அக்காட்சி உயிரையே மாய்த்துவிடும் போலாகிவிட்டது. 'யாரு மாரிப் பயலா?' என்று அலறினாள் குணவதி.

திரும்பும் படகு கட்டாயம் முத்தையனுடையதாகவே இருக்கும் என்று எண்ணிய அவள், மாரியின் படகு வந்து நின்றதைக் கரையில் ஓடிவந்து பார்த்தாள். 'அப்படின்னா என் மச்சான்' என்று மனதில் கேட்டுக்கொண்டாள்! மாரி தோளில் முத்தையனை அணைத்து வருவதைக் கண்டாள். 'மச்சான்' என்று அலறி விழுந்தாள். முத்தையனுக்குச் சுவாசம் மிகவும் லேசாக வந்துகொண்டிருந்தது. எல்லாம் ஏதோ சூழ்ச்சி என்பது அப்போதுதான் குணவதிக்குப் புலனாயிற்று.

'குணவதி, ரெண்டுபேரும் முக்கத்தைத் தாண்டி திரும்பையிலே, முத்து படகு ஓட்டையாப் போச்சு. தண்ணி படகிலே ரொம்பினதைக்கூடக் கவனிக்காமத் திரும்பவும் படகைத் தள்ளி முந்த ஆரம்பிச்சுச்சு. திடீர்னு அப்பறம் பரிசல் தண்ணியிலே கவிழ்ந்து போச்சு. தண்ணியிலே

தத்தளிச்ச முத்தையனை நான் கஷ்டப்பட்டுத் தூக்கி எம் படகிலே கொண்டாந்தேன். எதுக்கும் தலை எழுத்துன்னு ஒன்னு இருக்கில்லே. நான் சொல்றதைக் கேளு, இதிலேருந்து புரியலையா நீ எனக்கேதான் பூமியிலே பொறந்தவளுன்னு...' என்று சொல்லி மெல்ல நெருங்கினான் மாரி. அவன் பார்வையில் வெற்றியின் மிடுக்கு!

இமைப் பொழுதிற்குள் எவ்வளவு கோர சம்பவம் நிகழ்ந்துவிட்டது? பித்துப் பிடித்தவள் போலான குணவதி மற்றும் ஓர் தவனை முத்தையனைப் பார்த்தாள். பேசவும் திராணியிழந்து விழுந்து கிடந்த முத்தையனைக் காண அவளுக்கு அழுகை பீறிட்டது. கடைசியில் எல்லாம் கனவு தானா என்றெண்ணிய அவளுக்கு ஓர் நினைவு மின் வெட்டிற்று.

'மாரி முத்தையன் மேலே உனக்கிருந்த வஞ்சம் தீர்ந்து போச்சில்லையா? ஆனதாலே ஒம்மேலே எனக்குள்ள பழியைத் தீர்த்துவிட வேண்டியதுதான் பாக்கி. பாவிப்பயல்...' என்று வெறிபிடித்தவள்போலக் கர்ஜித்த குணவதி ஒரே மூச்சில் மாரியைப் பிடித்துத் தள்ளினாள். மாரியின் தலை கரையிலுள்ள படிக்கல்லில் படாரென்று மோதியது. அவ் வளவுதான். ரத்தம் பீறிட்டது. பிறகு முத்தையனைத் தொட்டுப் பார்த்தாள். உடல் ஜில்லிட்டிருந்தது. அதே சமயம் அமைதியுடன் ஓடிய ஆற்றில் சரண் புகுந்தாள் குணவதி.

'குணவதி குணவதி!'

தொடர்ந்து கேட்ட குரலைக் கண்டு விழித்தெழுந்தாள், கனவு கண்டு விழிப்பவள் போல.

'சந்தேகமில்லை. நிச்சயமாக மச்சானேதான்'—இப் படிக் குணவதி தன்னுள் முனகினாள். சற்று முன் கண்டது பூராவும் வெறும் கனவு என்பது அப்பொழுதுதான் அவளுக் குப் பிடிபட்டது.

'மச்சான்!'

ஆச்சரியம் தொனிக்க ஆர்வத்துடன் அலட்டினாள்.

'குணவதி, அன்னிக்கு நானும் மாரியும் பந்தயம் வச்சிக் கிறதா ஒப்பந்தம் கட்டினோமில்லையா? அதெல்லாம் அந்தப் பயமவன் மாரி செஞ்சிருக்கிற கபடம். இப்பத்தான் ஒவ்வொண்ணாத் துப்பு துலங்குது; விடிஞ்சதும் தானே படகுப் பந்தயம். அப்ப நான் படகு ஓட்டத் தொடங்கினதும் என்னை அப்படியே நடுத் தண்ணியிலேயே படகைக் கவிழ்த்துத் தள்ளி ஆளை 'முடிச்சு'ப்பிடத் திட்டம் போட்டிருக்கானும்; அப்பறம் ஒன்னை வலுக்கட்டாயமாக் கண்ணாலம் பண்ணிக்கிற முடிவாம்...' என்று நிறுத்தி மேற்கொண்டு அவள் காதில் ஏதோ மெதுவாகக் கூறினான் முத்தையன். குணவதிக்கு முகமலர்ச்சி ஏற்பட்டது. தான் கண்ட பொல்லாத சொப்பனத்துக்கும் இப்போது மச்சான் சொல்லும் சமாச்சாரத்துக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதுபோலத் தோன்றிற்று அவளுக்கு.

'சாமி கிருபையாலே இந்த மட்டும் உயிர் தப்பினது புண்ணியந்தான்' என்று நினைத்துக்கொண்டாள் குணவதி.

அடுத்த நாள் உச்சிப்பொழுது.

அன்றுதான் குறிப்பிட்டபடி முத்தையனும் மாரியும் பந்தயம் வைத்துக்கொண்ட தினம்!

வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்த மாரி குணவதியின் குடிசையின் முன் வந்து அலட்டினான். குணவதி வரவில்லை. அதற்குப் பதில் அவள் தாய் தள்ளாடிய வண்ணம் வெளியே வந்தாள்.

'அத்தை குணவதி எங்கே?—' என்று கேட்டான் மாரி.

கிழவிக்கு ஆத்திரம் பொங்கியது. கோபம் ரௌத்திர காரமாக வந்தது.

'மாரி, குணவதியையா தேடறே அம்பிட்டுப் பாசத் தோடே; போதும்; நீயும் ஒங்க அப்பனும் எங்களைச் சாதிச்சது, ஒங்க வஞ்சகமும் சூதும் எங்களுக்குப் புரியாம இல்லே

ஆமா! ஏதுக்கும் மேலே கடவுள் இருக்காரே...ஊம்... பந்தயமின்னு சாக்குப் பண்ணிட்டு அந்தப் புள்ளே முத்தைய னைக் கொன்னுபுடச் செஞ்சிருக்கிற சூழ்ச்சி வெளங்கிச்சு...'

'அத்தை, நம்ப குல தெய்வத்து மேலே ஆணையாச் சொல்றேன். இப்பச் சொல்றதெல்லாம் சாடா நெசம். என்னமோ குணவதி மேலே இருந்த பிரியத்திலே...அதை எப்படியும் கட்டிக்கிடணும்னு மனசிலே கொண்ட ஆசை யாலே—என்னமோ பாவம் செஞ்சுப்புட இருந்தேன். ஆனு தெய்வம் சமயத்திலே எனக்குக் கனவுலே சோதனை காட்டி டுச்சு. என் கண்ணும் திறந்து பூட்டுது. ஆனு அப்பாருக்கு இந்தச் சேதி தெரியவே தெரியாது. மேலும் குணவதி முத்தையனைக் கட்டிக்காமப் போனு கட்டாயம் ஆத்திலே விழுந்து மாண்டுபோயிடறதா ஊரிலே சொல்லியிருக்குதாம். அதுக்கு முத்தையன் மேலே இவ்வளவு உசிரு இருக்குமின்னு நெனைக்கலே. அப்படி உள்ளதை வலுக்கட்டாயப்படுத்திக் கட்டிக்க நான் நினைச்சது எம்புட்டு முட்டாள்தனமிங்கறது இப்பத்தான் புரியுது அத்தை. ஏன் இப்படி வெயிலிலே ஓடி வந்தேன் தெரியுமா? குணவதிக்கும் முத்தையனுக்கும் நாங்களே இருந்து கண்ணாலம் கட்டி வைக்கிறோம். அப்பத் தான் என் மனசு அடங்கும். குணவதி எங்கே...?' என்று கேட்டான் மாரி ஆர்வத்துடன்.

இன்னும் அவன் பேச்சில் நம்பிக்கை விழவில்லை கிழவிக்கு. எப்படி ஏற்படும் நம்பிக்கை?

'மாரி வாய் கடுக்கப் பேசாதே. ஒங்க பணத்துக்கும் காசுக்கும் நாங்க ஏழைங்க, பயப்படத்தானே வேண்டியிருக் குது. இனி எனக்குக் கவலையில்லே. எப்படியும் குணவதியும் முத்தையனும் பொழைச்சுப்பூடுங்க. அதுக ரெண்டுபேரும் இதுக்குள்ளே கண்டிச் சீமைக்குக் கப்பல் ஏறியிருப்பாங்க...'

கண் கலங்க, ஆனுல் குரலில் கண்டிப்புத் தொனிக்கக் கிழவி சொன்னதைக் கேட்டான் மாரி. அவனுக்கு உலகமே சுழன்றது. தன் நினைவு வந்ததும் விம்மிய உள்ளத்துடன் முகத்திலே தோல்வியின் சின்னம் தோன்ற வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான் மாரி!

புதிர்

குழந்தை வீறிட்டு அழுதது; அழுகை சப்தம் கேட்டு விழித்தெழுந்த காவேரி மகளுக்குப் பால் கொடுத்துவிட்டுத் திரும்பினாள். உச்சிப்பொழுதாகியிருந்தது. தன் மச்சானை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்தாள். வேலன் சுரணை தவறிய தூக்கத்தில் கிடந்தான். நாலு நாளாக அடித்த காய்ச்சல் அன்றைக்குத்தான் ஒரு மாதிரி தணிந்திருந்தது.

'மரம் வச்சவன் தண்ணி ஊத்தமாட்டானுன்னு சும்மா குந்திக்கிட்டு இருந்தாச் சோறு எப்படிக் கிடைக்கும்? நாலு வீடு தேடிப்போனா எந்த மவராசியாச்சும் மனசு இளகி பிடி சோறு போடாமலா போயிடுவாக? ஆனா, மச்சானுக்கு உடம்பு காயலா இல்லாட்டி வழக்கம்போலப் பிச்சைக்குப் புறப்பட்டிருக்கலாமே. இம்மா நேரத்துக்கு. வயித்துப் பாட்டுக்கும் திறமாக் கிடைச்சிருக்குமே—'

இந்த ரீதியில் அவள் மனத்து எண்ணங்கள் சங்கிலிக் கோர்வை பின்னின.

அவள் பிச்சைக்காரி. வேலன் அவளுடைய கணவன். தம்பதிகளின் வாழ்க்கைச் சுவடு குழந்தை. இந்த மூன்று நபர்களும் வறுமைப் பறையறிவிப்பின் வஞ்சனைக்குள்ளான தரித்திர நாராயணர்கள்; யாரோ சொல்லியிருக்கிறாரே அது மாதிரி அவர்கள் 'தெய்வக் குழந்தைகள்!' ஆம்; சிருஷ்டிச் சிக்கலுக்கு எடுத்துக்காட்டு!

வேலன் கபோதி. வாழ்வின் ஒளி வளர்பிறையாகப் பரிணமிக்க வேண்டிய பருவம்; என்றோ ஒளி கிறுக்கிப் பாய்ந்த மின்னல் அவனது பார்வையைப் பறித்துச் சென்று விட்டது. அவன் துடித்துப் போனான்; காவேரி திகைத்து குலைந்தாள்.

'மச்சான்.'

வேலன் திடுக்கிட்டெழுந்தான்.

'புள்ளையைக் கெட்டியமாய்ப் பார்த்துக்கங்க. நான் ஓடிப்போய் ஏதாச்சும் கிடைக்குதான்னு பார்த்துக்கிட்டு வாரேன்' என்று சொல்லி மகளைப் புருஷன் மடியில் பிடிப்பாக வைத்தாள். அதற்கு என்ன நினைப்போ? தகப்பனிடம் தவழ்ந்த குழந்தைக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு மீண்டும் விரைந்தாள் காவேரி. அவள் தாய்!

ஊர்ச் சத்திரத்தில் ஏழைகளுக்குச் சாதம் வடித்துப் போடுவதாகச் செய்தி காவேரிக்கு எட்டியது. அவ்வளவு தான்; சோறு கிடைக்கப்பெற்ற பஞ்சைப்போலக் கவளச் சோற்றுக்கு விழுந்தடித்துக்கொண்டு ஓடினாள்.

பொன் விளைந்த பூமியில் வறுமைத் தாண்டவத்தின் பிரதிநிதிகள் போன்று பந்தி பந்தியாக உட்கார்ந்திருந்த ஏழைபாழைகளுடன் அவளும் ஒருத்தியாகப் போய் அமர்ந்து கொண்டாள்.

பரிமாறுபவன் வரிசைக் கிரமமாகச் சோறுபோட்டுக் கொண்டுவந்தான். அதைத் தொடர்ந்து பின்னால் குழம்பும், கறியும், அத்துடன் மேல்பார்வைக்கு ஓர் 'மேஸ்திரி.'

'இன்னிக்கு நரி முகத்திலேதான் முழிச்சிருக்கணும். சாப்பாடு நல்ல வேட்டை. மச்சானுக்கு இது தெரிஞ்சாத் தெகச்சுப் போயிடும்.' இது அவள் ஆசைக் கனவு.

'ஆனா புள்ளேதான் பாவம், கத்தித் தீர்க்கப் போவுது' என்று வேறு கவலைகொண்டாள்.

காவேரியின் முறை வந்தது. சோறு, கறி குழம்பு எல்லாம் வாங்கிக்கொண்ட பிறகும் அவள் போகவில்லை. பக்கத்திலிருந்தவர்கள் போய்விட்டார்கள். என்ன தோன்றிற்றோ, 'எசமான்' என்று அழைத்தாள்!

'ஐயா, எம் புருஷனுக்குக் கண்ணுகடை தெரியாத சொரமுங்க. அவராலே நடக்க முடியலே. அவருக்கும் சேத்து இந்தச் சட்டியிலே சோறு—' என்று மென்று

விழுங்கினுள் அவள். இகலோகத்திலே பரலோகப் பரம் பொருளைத் தரிசிக்க 'க்யூ' நிற்கும் பக்தன் தன் பிரார்த்தனை ஈடேறக் கருணைபுரிய வேண்டும் என்று யாசிப்பதுபோலக் காவேரி இரக்கப் பார்வையுடன் மேஸ்திரியைப் பார்த்தாள்.

'சீ, பிச்சைக்கார நாயே! பொய்வேறே சொல்லியா ஆளை ஏமாத்தப் பார்க்கிறே. பாவமாச்சேன்னு பார்த்தாக் காலமில்லே பாரு. உன் கையில் இருக்கிற சோருகிலும் நிலைக்கணுமின்னு இப்பவே ஓடிடு, இல்லாத போனுல்...' அடியுண்ட நாகம்போலச் சீறினுன் அவன். உண்மையைத் தானே காவேரி சொன்னுள்? ஆனுல் ஏழை சொல் அம்பலம் ஏறுமா?

ஏழைப்பட்டுக் கோழைப்பட்ட அந்தப் பிச்சைக்காரி 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று கிடைத்த உணவுடன் ஓட்டமும் நடையுமாகச் சென்ருள். வழியில் மழை வேறு பிடித்துக்கொண்டது. இடியும் மின்னலும் பின்னிப் பிணைந்தன; வெந்த இதயம் வேதனைப்பட்ட நிமித்தம் இயற்கை காட்டிய அனுதாபமா?

அவள் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. ஆசை மச்சானும் அன்பு மகளும் அவளுடைய கனவின் விழிப்பில் மிதந்து சுழன்றனர்.

குளிரில் நடுங்கியவாறு குழந்தையை அணைத்துக்கொண்டு வேலன் நின்றிருந்தான்.

'மச்சான் சோறு கிடைச்சது, பார்த்துக்குங்க. மரத்து ஒண்டலிலே சட்டி இருக்கு, நான் ஓட்டமாப் போய்த் தண்ணி கொண்டாரேன்' என்று விரைந்தாள். ஆனுல் தண்ணீருடன் திரும்பியதும் காவேரி கண்ட காட்சி புலன்களனைத்தையும் ஒடுங்கச் செய்துவிட்டது!

'ஐயையோ! பூராச் சோத்தையும் நாய்க்குட்டி தின்னு முடிச்சுட்டுதே...'

சட்டியைக் காலிசெய்த பூரிப்பால் நாய் மெல்ல நகர்ந்தது. அவளுக்கு நாய்மீது ஆத்திரம் பற்றிக்கொண்டு

வந்தது. காவேரி கீழே கிடந்த 'சுக்கான் கல்' ஒன்றை எடுத்துப் 'பாளத்த நாயே, கயிட்டப்பட்டுச் சம்பாதிச்ச சோத்துக்கு எமனுவா வந்தே' என்று ஓலமிட்டுக் கல்லை வீசப் போனுள்.

'காவேரி எனக்குக் கண்ணு கிடைச்சிட்டதே தெரியாதா?' என்று கூவினுன் வேலன்.

காவேரி, 'என்ன? கண்ணுப் பார்வை வந்திருச்சா?' என்ற அதிசயக் கேள்வியுடன் கணவன் சமீபம் ஓடிஞள். அவள் கையிலிருந்த பெரிய கல் நழுவிற்று. ஆனுல்—! அங்கே அவளுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. மச்சானின் கண்கள் முன்போலவே மூடியிருந்தன. மின்வெட்டு அபகரித்துச் சென்ற பார்வை, ஒருசமயம் சற்றுமுன் வெடித்த மின்னலால் திரும்பிவிட்டதோ என்ற சபலம்தான் அவள் ஆசைக்குக் காரணம், கடைசியில்—?

வேலன் சிரித்தான்.

குழந்தை 'வீல்' என்று கத்தியது.

காவேரி கண்ணீர் பெருக்கிஞள்.

'காவேரி, எம்மேலே ஒனக்கு ரொம்பக் கோவமாங் காட்டியும்? பாவம், அந்த நாய்மேலே ஏதுக்கு அம்பிட்டு எரிச்சல்? நீ கொண்டாந்த சோறு இப்ப அந்த நாய்க் குட்டிக்குக் கிடைக்கணுமின்னு இருக்கும்போல, அதே சோத்தை நம்ப செல்லக்கண்ணு தின்னிருந்தா, நீ இவ்வளவு கோவப்படுவியாக்கும்—'

சற்றும் சலனமற்றுப் பேசிக்கொண்டே போன கணவனது புது வேதாந்தமும், வக்கணையும் அவளுக்குப் புதிராகப் பட்டன. வாழ்க்கையே ஒரு புதிர்தானே!

அவள் மறுபடியும் பிச்சைக்குப் புறப்பட்டாள்; இல்லையென்ருல் மச்சானுக்குச் சாப்பாட்டுக்கு வழி—?

'ஏலே காவேரிப் பொண்ணு.'

அவள் திரும்பிஞள்.

'காவேரி, நம்ப பாக்கியந்தானே இன்னிக்கு நமப புள்ளே உசிரு தப்பிச்சது. நீ போனதும் மகளைப் படுக்க வச்சிட்டு நானும் படுத்தேன். இது என்னடான்னு தவழ்ந்து அது போக்கிலே வீதி முக்கத்துக்குப் போயிருச்சாம். காத்து வேறே பிச்சு அடிச்சதிலலே அந்தச் சமயம் திடுமின்னு வேகமாகக் காரை ஓட்டியாந்த ஐயாவுக்கு, நம்ப கண்ணு குறுக்கே கிடந்தது கண்ணிலே தட்டுப்பட்டிருக்கு. சடக் கின்னு காரை நிப்பாட்டிப் புள்ளையைத் தூக்கிட்டாராம், அப்பத்தான் மகளைத் தடவிப் பார்த்தேன், காணலே. பதறிப்போய் வெறிபிடிச்சவன் கணக்காகத் தட்டுத்தடுமாறி நடந்தேன். உன் குழந்தையான்னு கேட்டு மகளைக் கொடுத்தாரு அந்த மவராசன். நான் கதறினதைக் கண்டு முதலாளி போலே—நானு என்னத்தைக் கண்டேன்—அவரு ரொம்ப இரக்கப்பட்டாரு. ஆனு, பாவம் அவருக்கு ஒரு குஞ்சு குட்டி இல்லாதது ஓண்டிதான் பெருங்கவலே. கடைசியாக் கோயில் பட்டைச் சோறு, வடை ஒவ்வொண் ணுப் பேரு சொல்லித் தந்தாரு. இந்த மட்டும் மக தப்பினது நம்ப புண்ணியந்தானே? அந்தச் சந்தோசத்திலே எனக்குக் கண்ணு கிடச்சுட்டுதுன்னு சத்தம் போட்டேன். நம்ப கண்ணுப்பொண்ணைக் காட்டிலுமா எனக்கு எங்கண்ணுப் பார்வை உசத்தி? இன்னிக்கு நமக்கு அளந்தபடி இம்பிட்டுத் தான். பாவம் அந்த நாய்...!' என்றான் வேலன் உணர்ச்சி வசப்பட்டவனாக.

முள் முனையில் ஊசலாடிய காவேரியின் தாய் மனம் அப்போதே நிம்மதி பெற்றது. தன் மகளை அப்படியே வாரி யெடுத்து உச்சிமோந்தாள். உடனே காவேரியின் நீர் மண்டிய விழிகள், சற்றுமுன் தன் கல்லுக்குப் பலியாகிவிட இருந்த அந்த நாய்க்குட்டியை இரக்கத்துடன் துழாவித் தேட ஆரம்பித்தன!

குழந்தை உள்ளம்

'செல்லம்மாவுக்கு உடம்பு மட்டும் குணமாயிருந்தா, மற்றப் பிள்ளைங்க மாதிரி எவ்வளவு குதூகலமா ஆடிப்பாடி விளையாடும்!'

பக்கத்தில் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளைக் கண்டதும், சிங்காரத்திற்கு அந்த ஓர் எண்ணம் மாறி மாறித் தோன்றியது. மரம் செதுக்கிச் சீர் பண்ணிக்கொண்டிருந்த அவனுக்கு மேலே வேலை ஓடவில்லை. அவன் கண்களின் ஓரத்தில் கண்ணீர் பரவியது.

'உடம்பு காயலாக் கிடக்கும் மகளை விட்டுப்பிட்டு ஏதுக்கு வேலைக்கு வரணும்? வந்தபுறம் மனம் நொந்து ஏன் இம்பிட்டுத் துடிதுடிக்க வேணும்?' என்று வேறு சிந்தித்து மூளையைக் குழப்பிக்கொண்டான் சிங்காரம்.

அவன் நினைவுப் பிரகாரம் அன்றைக்கு வேலைக்கு வராம லிருந்திருக்கலாம்; ஜுரமடித்துக் கிடக்கும் கண்ணான மகளின் அருகில் இருந்து வேண்டியதைச் செய்து, மனத்திற்கு அமைதியை ஓரளவு தேடிக்கொண்டும் இருக்கலாம். ஆனால், அன்றையப் பொழுதைக் காலதேவன் தன் கைப்பிடியி னின்றும் நழுவவிட்டாகவேண்டுமல்லவா? பணத்துக்கு என்ன செய்வது?

தினம் தினம் ஏதாவது வேலை செய்தால்தான் அவனுக் கும் மகளுக்கும் சாண் வயிற்றைக் கழுவி மூடமுடியும். செல்லம்மாவுக்குக் காய்ச்சல் விஷம்போல ஏறியிருந்ததால் முந்தின நாள் வேலைக்குப் போகவில்லை. அதன் பலன் அன்று சாப்பாட்டிற்குத் திண்டாட்டமாகிவிட்டது. இந்த இக்கட் டான நிலையே சிங்காரத்தைக் காலையில் வேலைக்குச் செல்லத் தூண்டியது.

நைந்துபோன பாய்மீது முடங்கிக் கிடந்தாள் செல்லம்மா. தலைமாட்டில் அகல் விளக்கு மங்கலாக எரிந்தது. இரண்டு நாளாகக் காய்ச்சலில் கஷ்டப்பட்ட குழந்தையின் முகம் வாடிவிட்டது. எண்ணெய் படாமல் சிக்கல் பாய்ந்திருந்த கேசத்தை மெல்லக் கைவிரல்களால் கோதியவண்ணம் தன் மகளை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் சிங்காரம்.

செல்லம்மாவுக்குக் கிட்டத்தட்ட எட்டு வயதிருக்கும். ஆனால் அந்த எட்டு வருஷங்களில் முழுசாக ஏழு வருஷங்கள் தாம் தாயின் பராமரிப்பில் வளர அதன் தலையில் 'லவிதம்' இட்டிருந்ததுபோலும். அப்புறம் தாயற்ற மகளுக்குத் தந்தையின் பொறுப்புடன் தாயின் ஸ்தானத்தையும் சேர்த்து நிர்வகிக்க வேண்டியவனானான் அவன்.

காய்ச்சி வைத்திருந்த கஞ்சியைக் குவளையில் சீராக ஊற்றி மகளிடம் நீட்டினான். 'மடமட'வென்று குடித்தாள் செல்லம்மா.

'இன்னும் கொஞ்சம்—?'

'ஊஹூம்! வேணும்!'

தலையணையை இசைவாக வைத்துப் படுக்க வைத்தான் சிங்காரம்.

'அப்பா!'

'தூங்கலையா கண்ணு?'

'அப்பா, பார்த்தியா மறந்து பூட்டேன். சாயந்திரமா மேஸ்திரி ஐயா வந்துட்டுப் போனாரு பணத்துக்கு.

சிங்காரத்தின் மன அமைதியைப் பறித்துச் சென்றது, செல்லம்மா கூறிய சேதி. அவன் கலங்கினான். கடன்பட்ட நெஞ்சமாயிற்றே! மனைவியின் பிரசவத்திற்கென ஐம்பது ரூபாய் கடன் வாங்கியிருந்தான் மேஸ்திரியிடத்தில், பிள்ளையும் தாயும் வேறாகப் புனர்ஜன்மமெடுத்துச் சுகமுடன் பிழைக்கவேண்டுமேயென்று. டாக்டர் பீஸிற்குக் கரைந்தது

மேற்படி பணம். அவன் போதாத காலம் மனைவி பிரசவத்தில் இறந்துவிட்டாள். கடன்பட்டதுதான் கண்ட பலன்.

சாப்பாட்டின் நினைவே சிங்காரத்துக்கு இல்லை. தலை கனக்க தரையில் துணியை உதறி விரித்தான். விழி, வெள்ளத்தில் மிதந்தது.

அடுத்த நாள், சுடுசோறு வடித்துச் செல்லம்மாவுக்கு ஊட்டிவிட்டான். மிகுதியை நாலு வாயாக உருட்டிப் போட்டுக்கொண்டு வேலைக்குப் புறப்பட எத்தனித்தான். ஜுரத்தின் அடையாளம் கொஞ்சமும் குறையாமல் இருந்தது செல்லம்மாவுக்கு. சிங்காரத்திற்கு இதைக் காண மனம் குமுறியது. அவன் உடல் நடுங்கினான்; உள்ளம் சோர்ந்தான்.

'சிங்காரம்!' என்று அழைத்தவாறு உள்ளே பிரவேசித்த மேஸ்திரியைக் கண்டதும் அவனுக்குத் 'திக்'கென்றது. 'வாங்க ஐயா!' என்று உபசரித்தான்.

'சிங்காரம், பாவம் புண்ணியத்துக்கு மனசு இரக்கப் பட்டு, நோட்டுசாட்டுக்கூட இல்லாமல், ஐம்பது ரூபாய் சுளையா எண்ணித் தந்ததுக்கு இதுதான் பண்ணுவியா அல்லது இன்னமும் பண்ணப் போறியா? பணத்தைக் கொடுத்துப்புட்டு இப்படி நடையாய் நடக்கிறேன் பாரு. அதுக்கு என் புத்தியைச் சொல்லவேணும்! கடைசியாகச் சொல்றேன்—எந்தக் குடி எக்கேடு கெட்டாலும் கடன் தொகை சாடா பொழுதுக்குள்ளே என் கைக்கு வந்துப் பிடணும்! சொன்ன பேச்சுக்கு மறுபேச்சுக் கிடையாது!...' என்று பொரிந்து கொட்டினார் மேஸ்திரி.

எதேச்சையாக அவர் திருஷ்டி அருகில் கலவரத்துடன் படுத்திருந்த செல்லம்மாமீது சென்று திரும்பிற்று. மின்னல் குமிழ் போன்ற அவள் கண்கள் மேஸ்திரியை ஏக்கத்துடன் துருவின. ஒரு கணம் துள்ளிக் குதித்தார் மேஸ்திரி.

'சிங்காரம், எத்தனை நாளாக என் பணத்தைத் தண்ணீரில் அடிக்கத் திட்டம் போட்டிருக்கிறாய்? உன் மகள் கழுத்திலே

போட்டிருக்கும் அந்தச் சரட்டை வித்துப் பணத்தைக் கொடு! இல்லாட்டி அந்தச் சரட்டைக் கடனுக்கு என்னிடம் கழற்றிக் கொடு! கொஞ்ச நஞ்சம் குறைஞ்சாலும் பரவா யில்லே. கடன் கழிஞ்சாக் காற்றுப்போல...'

நெருப்பைத் தீண்டியவன் மாதிரி திகைத்துவிட்டான் சிங்காரம்.

'ஐயா, உங்க கடனை எப்பாடு பட்டுத் தலையை அடகு வச்சாகிலும் கொஞ்ச நாளிலே கட்டிப்பிடுறேனுங்க. பொறுத்தது பொறுத்திட்டிங்க. இன்னும் கொஞ்சம் பொறுங்க. உங்க பிள்ளை குட்டிங்க நல்லாயிருக்கும். ஆனா மகள் சரட்டை மட்டும் உயிர் போனாலும் கழற்றமாட்டே னுங்க...'

கண்ணீரை விலக்கிக்கொண்டான் சிங்காரம். செல்லம் மாவின் கழுத்தைவிட்டுச் சரட்டை அகற்ற அவன் பஞ்சை மனம் சம்மதிக்கவில்லை. காரணம், அச்சரடு மரணப் படுக்கையில் உழன்ற அவன் மனைவி தன் ஞாபகார்த்தமாக என்றும் இருக்கவேண்டுமென்று மகளுக்குப் பூட்டிய ஆபரணம் அது. ஆனால் மேஸ்திரிக்கு இதில் ஏதோ சூது இருப்பதாகத் தோன்றவே கோபம் கொந்தளித்தது.

'அயோக்கியன்! இன்று பொழுதுக்குள் கடன் பட்டு வாடா ஆகிப்போடனும்! இல்லாவிட்டால் நாளை விடிவதற் குள் உன் குடிசை பறிபோயிடும்! ஜாக்கிரதை!'

தகப்பனுக்கும் மேஸ்திரிக்கும் நடந்த சம்பாஷணை பூராவையும் ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டிருந்த செல் லம்மாவுக்கு அழுகை பீறிட்டது.

'அப்பா, எதுக்காக இம்பிட்டு யோசனை பண்றீங்க? மூச்சு விடாமே என் சரட்டை அந்த ஐயா கிட்டக் கொடுத்துக் கடனை அடைச்சுப்பிடுங்க. பெரிய மனுசங்க பொல்லாப்பு நமக்கு ஏன்? நமக்கும் ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் நல்ல காலம் பிறக்காமலா போயிரும்? அப்போ வேறே ஒரு சரடு செஞ்சுக்கலாம்...' என்பதாக விக்கலுக்கும் விம்மலுக் கும் மத்தியில் கூறினாள் செல்லம்மா.

தன் புதல்வியின் அறிவைக் காணச் சிங்காரத்துக்கும் அழவேண்டும்போலிருந்தது. 'ஆகட்டும் கண்ணு!' என்று சொல்லிச் சரட்டைக் கழற்ற நெருங்கினான் அவன். வேறு வழி?

அதே சமயம், 'மேஸ்திரி எசமான்! உங்க மகள் கமலா வைப் பாம்பு கடிச்சு ரொம்பத் தடபுடலா இருக்குங்க!' என்று ஓடிவந்து சொன்னான் வேலைக்காரப் பையன்.

அவ்வளவுதான்! மேஸ்திரிக்கு உலகமே சுற்றியது! கை கால்கள் நடுங்கின. தன் குழந்தை ஆசை காட்டி அழகு காட்டி மனத்தை மகிழச் செய்த நிகழ்ச்சிகள் அடுக்கடுக்காக மனத் திரையில் விரிந்தோடின. மகளின் வதனத்தில் ஆசை கொண்ட மட்டும் பதித்த அன்பு முத்தங்களை ஒவ்வொன்றாக நினைவுபடுத்திப் பார்த்தார். ஒரு நிமிஷம் பயங்கர நினைவுகள் அவரை வாட்டி எடுத்தன.

மந்தரித்து எந்த விஷக் கடியையும் போக்குவதில் சிங்காரம் மிகவும் பிரக்யாதி பெற்றவன் என்ற எண்ணம் மின்னல் போல மேஸ்திரியின் மனத்தில் உதித்தது. 'மகள் உயிர் சிங்காரத்தின் கையிலேதான் இருக்குது; அவன் மனசு வச்சாக் கமலாவை உயிரோடே காணலாம். ஆனா கொஞ்ச முந்தி தயவு தாட்சண்யமின்றிப் பேசின எனக்கு அவன் இரக்கப்படுவானா? பகவானே!' எனத் தன்னுள் நினைத்துப் பார்த்த மேஸ்திரி, அப்போதுதான் சிங்காரம் அவன் மகளின் மீது கொண்டிருக்கும் பாசத்தை உணர்ந்தார். தனக்கு வந்தால் அல்லவா தெரியும் தலைவலியும் காய்ச்சலும்! அவனைக் கடிந்து சரட்டைக் கழற்றிக் கொடுக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தியதற்குத் தண்டனையாக இச்சம்பவம் நேர்ந்திருக்குமோ என்றுகூட நினைக்கலானார்.

'மேஸ்திரி ஐயா, இந்தாங்க சரடு; கடனுக்கு வச்சுக் குங்க! எதுக்கு இப்படி மலைச்சுப் போய் நிக்கிறீங்க? வாங்க உங்க வீட்டுக்கு. பாம்பு விஷத்தை மந்திரிச்சுக் கண் சிமிட்டிற நேரத்திலே தணிச்சிடறேன்!' என்றான் சிங்காரம் பதட்டத்துடன்.

மேஸ்திரிக்குத் தன் செவிகளை நம்பவே முடியவில்லை.

'சிங்காரம், என் சின்ன புத்தியாலே உன்னைச் சந்தேகிச்சுத் தப்பா நெனைச்சேன். என்னை மன்னிச்சுப்பிடு. நான் சொல்றதைத் தட்டாமல், அந்தச் சரட்டை உன் மகள் கழுத்திலே போட்டுப்பிட்டு ஓடிவா! என் மகள் உயிரைக் காப்பாத்தித் தந்தா அதுவே நீ எனக்குக் கோடி ரூபாய் கொடுத்த மாதிரி.

சிங்காரம் பின்தொடர, மேஸ்திரி ஓட்டமும் நடையுமாகச் சென்றார். சென்று பார்த்தார், அவர் வீட்டில் கண்ட காட்சி அவரைப் பிரமிக்கச் செய்தது. சர்வ சாதாரணமாகக் குதூகலத்துடன் நின்றுகொண்டிருந்தாள் அவர் பெண் கமலா. அப்படியென்றால் விஷம் தானாகவே அகன்று விட்டதா, என்ன?

'அப்பா, முதலிலேயே சொல்லிடுறேன். நீங்க என்னையோ, நம்ப வேலைக்காரனையோ கோவிச்சுக்கப்படாது. செல்லம்மாவுக்கு மேலுக்கு முடியலைன்னு கேட்டதும் பார்க்க ஓடியாந்தேன். அப்பத்தான் நீங்க அது அப்பாவைக் கண்டபடி கோவிச்சுக்கிட்டு, சரட்டைத் தரத்தான் வேணுமின்னு கண்டிச்சிங்க. அப்போ இருந்த அவரு மனசு உங்களுக்கு எப்படித் தெரியும்? என்னைப் பாம்பு கடிச்சதாகப் பொய் சொல்லியனுப்பினேன். கடைசியா என் தந்திரமும் பலிச்சுது. எனக்கு மந்திரிக்கச் செல்லம்மாவின் அப்பாரு வேண்டியிருந்ததாலேதானே உங்க மனசு திடுமின்னு மாறிச்சு? இல்லையானா அந்த ஆளைச் சும்மாவா விடுவிங்க? அப்பா, செல்லம்மாவும் நானும் உயிருக்குயிர். அவங்க ஏழைங்க; கடனைப்பத்தி இனித் தொந்தரவு பண்ணாதிங்க!' என்றாள் கமலா.

தன் ஆசை மகளைப் பாம்பு தீண்டவில்லை என்றறிந்ததும் மேஸ்திரிக்குப் போன உயிர் திரும்பிற்று. சிறு குழந்தையானாலும் விதரணை புரிந்த பெரியவர்களைப் போன்று பேசிய

தன் புதல்வியின் உயரிய மனப்பண்பையும், தந்திரத்தையும் கண்டு அப்படியே அன்போடு அவளை அணைத்துக்கொண்டார்.

தன்னைப்பற்றி இவ்வளவு அக்கறைப்பட்டிருக்கும் மேஸ்திரி மகளைக் கண் கொட்டாது பார்த்து நின்ற சிங்காரத்தின் கண்களினின்றும் கண்ணீர் வழிந்தது.

நடிகை

பிரபல சினிமா நட்சத்திரம் மாயா நிலைக்கண்ணாடியின் முன் நின்று விழுங்கும் விழிகளால் ஒருமுறை தன் அழகின் பூரணத்துவத்தின் எல்லையைக் கணக்கிடுவதுபோல ஏறிட்டு நோக்கினாள். மை தீட்டப்பட்ட வில் புருவங்களின் மத்தியில் ஒளி உமிழ்ந்த திலகமும், சிருங்காரம் கொப்பளிக்கப் ‘புட்டாமா’ பூசியிருந்த வதனத்திடையே மிளிர்ந்த உதட்டுச் சாயமும் அவள் மனதிற்கு அன்று நிரம்பவும் பிடித்திருந்தன. இடையில் மின்னிய ஒட்டியாணத்தைச் சிறிது தளர்த்தினாள். போதையூட்டும் ரீதியில் அவள் மேலாடை சற்றே நெகிழ, கவர்ச்சி கனிந்தது.

தயாராக நின்ற காரில் ஏறிக்கொண்ட மிஸ் மாயா ஸ்டூடியோவை அடைந்ததும் அவளை வரவேற்க இன்முகங் காட்டி ஓடி வந்தார் டைரக்டர் சந்திரமௌலி.

‘டைரக்டர் ஸார், ரொம்ப டைம் ஆகிவிட்டதுபோல் இருக்கிறது. கோபமில்லையே! டிரஸ்ஸிங்கில் இன்று கொஞ்சம் அதிகப்படியான கவனம் எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது’ என்று தன் இதழ்களில் புன்னகை மலர் தூவிக் குழையும் குரலில் சொல்லிவிட்டு, வெண்ணிலவு சிதறும் நெற்றியில் முத்து முத்தாகப் பூத்திருந்த நீர்த்துளிகளைத் துடைத்துக்கொண்டாள் மாயா.

‘பரவாயில்லை மாயா, உன் வரவிற்குத்தான் எல்லோரும் அப்போதிருந்தே காத்திருக்கின்றனர். “அன்னை பூமி” படத்தில் உன் “ஏ ஒன்” வெற்றிக்குத் தங்கள் சந்தோஷத்தை நேரிலேயே சமர்ப்பித்துப் போக ஆசைப்பட்டுத்தான் ரசிகர்களும், அபிமானிகளும் கூடியுள்ளார்கள்’ என்று சொல்லி, மாயாவின் பூங்கரங்களைப் பற்றியபடி உள்ளே நுழைந்தார் டைரக்டர்; சிகரெட்டின் பின்னல் புகை உயர்ந்தது.

இருவரையும் ஜோடியாகக் கண்டவுடன் காத்திருந்தவர்களின் முகங்கள் சந்தோஷத்தால் மலர்ந்தன. 'டின்னர்' தொடங்கியது. பிரசித்தி வாய்ந்த நடிகை மிஸ் மாயாவின் முழு ஜெயத்திற்குத் தங்கள் உள்ளக் களிப்பைத் தெரிவித்துக் கொண்டதுடன், அன்புப் பரிசுகள் பலவற்றையும் வழங்கினர். டின்னர் முடிந்தது. மாயாவை நேரில் பேட்டி கண்டுகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது பெரிய அதிர்ஷ்டம் எனக் கருதியவர்கள் போன்று ரசிகர் குழாம் கலேந்தது. அன்றைய மாலே நிகழ்ச்சி பூராவையும் கண்ட அவளுக்கு அனேத்தும் ஒரு கனவு போலவே தான் தோற்றம் கொடுத்தது. மாயாவின் மார்பகம் ஒருகணம் விம்மித் தாழ, ஆழ்ந்த பெருமூச்செறிந்தாள்.

அப்புறம் அதிக நேரம் டைரக்டரும் மாயாவும் அளவளாவிப் பேசி மகிழ்ந்தனர் என்பதற்கு அத்தாட்சியாகக் கட்டியங் கூறுவது மாதிரி தரையில் சிதறிக் கிடந்தன சிகரெட் துண்டுகள் பல. அவர்களுடைய இழை பின்னிக் கிடந்த மோன நிலேயைக் கலேத்தது சுவர்க் கடிகாரம். மாயா விடை பெற்றுக்கொண்டாள். சந்திரமௌலி அவளேப் பிரியா மனத்துடன் வழியனுப்பி வைத்தார்.

திரைப்பட உலகில் ஈடுசோடில்லாத ஓர் சிறந்த சினிமா ராணி மாயா. வயதும் வாலிபமும் சந்திக்கும் வளம் கொழிக்கும் பருவம். இளமை அவள் கோமளமேனிக்குப் புது மெருகிட்டது. சங்கீதம், நடிப்பு, சௌந்தர்யம் அவளிடம் சங்கமித்திருக்கையில் சினிமா வானில் பிரத்தியேக ஸ்தானத்தை அவள் ஸ்வீகரித்துக்கொண்டதில் வியப்பில்லே தான். ஆனல் மிஸ் மாயா ஒரு காலத்தில்—அதாவது இரண்டு வருஷங்களுக்கு முன்—சர்வ சாதாரணமான வெறும் கோகிலமாகவே இருந்து வந்தாள். இளமைதொட்டே சினிமா என்றல் அவளுக்குப் பிராணன். புதிது புதிதாக 'ரிலீஸ்' செய்யப்படும் படங்களின் தராதரத்தை எடை போட்டுச் சீர்தூக்கும் 'க்ரிடிக்'கின் பண்பாடு அவளிடம் அப்போதிருந்தே அடைக்கலம் புகுந்திருந்தது. இத்தகைய நிலேயில் எப்படியும் சினிமாவில் சேர்ந்துவிட வேண்டுமென்ற

ஆதுரம் மட்டும் அவள் இருதய அந்தரங்கத்தின் ஏதோ ஒரு மூலையில் தூங்கிக் கிடந்தது.

அதே சமயம், 'படத்தில் நடிக்கப் புது முகங்கள் தேவை' என்ற விளம்பரம் அவள் பெண் நெஞ்சத்தில் பால் வார்த்தது. பலதரப்பட்ட 'போஸ்'களில் புகைப்படத்தை அனுப்பினாள். எதிர்காலத்தின் புகழுக்கு முகமன் கூறி வெற்றியுடன் பதில் வந்தது. கிளம்பினாள். திரையுலகம் ஊக்கமூட்டி வரவேற்றது. கோகிலம், மிஸ் மாயாவாக மாறினாள்—அதாவது, மாற்றப்பட்டாள்!

ஆண்டவனது சிருஷ்டி மேதைக்கு மாயா ஓர் உன்னத எடுத்துக்காட்டு. அவளுடைய அழகின் தேஜஸ், அருவியின் மெல்லிய ஓசைபோல் சிரிக்கும் பாணி, தன் பாகத்தை உணர்ந்து செவ்வனே நடிக்கும் லட்சியம்—இவை அவள் மேதைக்கு முத்திரையிட்டன. அதன் காரணமாக டைரக்டரது அன்பிற்குப் பாத்திரமானாள். டைரக்டர் சந்திர மௌலி இளம் வயசு. எம். ஏ. பட்டதாரி. சிறந்த கலா ரசிகர். மாயாவைத் தான் எடுக்கும் முதல் படத்திலேயே எப்பாடு பட்டும் 'பிலிம் ஸ்டா'ராக்கி விடுவதென்று திட்டமிட்டிருந்தார்.

'அன்னை பூமி' என்ற படம்தான் அவருடைய முதல் சிருஷ்டி. தானே வில்லன் பாகமேற்று நடித்தார். பொது மக்களின் உள்ளத்தை எளிதில் கவரத்தக்க முறையில் காமிக், தேசீயம், ஹிந்தி ட்யூனில் அமைக்கப்பெற்ற பாட்டுக்கள் போன்ற தந்திரங்களைக் கையாண்டார். வெற்றி கிடைத்தது எதிர்பார்த்ததற்கு மேல். மாயாவின் புகழ் உச்சிமேவிற்று. பத்திரிகைகள் மாயாவைப்பற்றிப் பத்தி பத்தியாக எழுதின.

இவ்விதம் மாயாவை மருவி வந்துகொண்டிருந்த மதிப்பையும், புகழையும் கண்ட டைரக்டருக்கு அவளைத் தன் துணைவியாக்கிக்கொள்ள ஆவல் பிறந்தது. விஷயத்தைப் பிரஸ்தாபித்தார். மாயாவிற்கும் அந்த எண்ணம் சரி

யெனவே பட்டது. மேலும் அப்போதுதான் கண்கொத்திப் பறவைபோல் தன்னைப்பற்றிக் கண்காணித்து வரும் சமூகத்தின் சூழ்நிலையிலிருந்து தப்பமுடியும் என்பதையும் தீர உணரலானாள். பின் சம்மதமும் கொடுத்தாள். அடுத்த படப் பிடிப்பு முடிந்ததும் தம்பதிகளாக எண்ணினர்.

'அன்னை பூமி' சம்பாதித்த புகழின் வெற்றிச் சுவட்டிலேயே அடுத்தபடியாகத் தயாரிக்கப்போகும் 'மாயா மோகினி' படத்தின் கதாநாயகனாக நடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஜோதிநாத் என்னும் புது நடிகரை மாயாவிற்கு அன்று அறிமுகம் செய்துவைப்பதாக டைரக்டர் வாக்களித்திருந்தார். சாயங்காலம் ஸ்டுடியோவிற்குப் புறப்பட ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்த அவள் பெண் மனதில் ஏதேதோ எண்ணங்கள் அலைபாய்ந்தன. தன்னுடன் முக்கிய பாகமேற்று நடிக்கவேண்டிய அப்புது மனிதர் எவ்விதம் இருப்பார், பழகும் விதத்தில் எத்தகைய மனப்பான்மையுடையவரோ என்பது போன்ற நினைவுச் சுழற்சியில் அயர்ந்திருந்தாள். ஏனென்றால், முதல் படத்தில் முக்கிய பாகத்தை டைரக்டரே ஏற்றுக்கொண்டார். நெடுநாளாகப் பழகிப் போனதால் அவருடன் ஒட்டி நடிப்பதில் லவலேசமும் அதிர்ச்சியோ அல்லது திகிலோ ஏற்படவில்லை மாயாவுக்கு. ஆனால் ஜோதிநாத்...?

இவ்விதம் மனம் சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில் 'மிகவும் ரகசியம்' என்று 'டேஞ்சர் சிக்னல்' காட்டி நின்ற தபாலை நீட்டினான் வேலைக்காரப் பையன். பதட்டத்துடன் அதைப் பிரித்துப் படித்தாள்.

'அம்மணி,

முன்னும் பின்னும் தெரிந்திராத இடத்திலிருந்து இக் கடிதம் வருவது கண்டு நீங்கள் ஆச்சரியப்படலாம்; அதிசயப்படலாம். ஆனால் பாலைநிலத்தில் காயும் நிலவு போன்று என் வாழ்நாட்கள் வீணாகிவரும் துரதிருஷ்டத்திற்கு விடிவு ஏற்படத் தங்களது கருணைதான் வேண்டும், வேடிக்கையாகத் தோன்றலாம். வெளியிட்டுக் கூறி

விடுகிறேன். அன்று 'அக்கினி சாட்சி'யாக வரித்துக் கரம்பற்றிய என் பதி, தங்கள் டைரக்டர், தாங்கள் விரித்த மாயவலையில் சிக்கிவிட்டார் என்பது சில தினங்கள் முன்னர்தான் தெரியும். கோபிக்காதீர்கள். நைந்துபோன என் இடிந்த இதயத்தின் சோகக் குமுறல்கள்தான் இவை. ஆனால் இந்த அபலை உங்களிடம் காதல் பிச்சை மட்டுமே வேண்டி நிற்கிறேன். என் கணவரைத் தயவுபண்ணி என்னிடம் வந்து சேர உதவி புரியுங்கள். அன்று பிரிந்த அவர் பிரிவை இனியும் சகிக்க முடியாது. கண் நிறைந்த கணவனின் கனிவு முகத்தை ஒருதரமேனும் தரிசித்துத் தாலி பாக்கியம் பெற அருள் புரியுங்கள். மண்டியிட்டு மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதுவே என் தாழ்ந்த வேண்டுகோள்.

லக்ஷ்மி.'

அத்துமீறிச் சுழன்ற நடிகை மாயாவின் மனத்திரையில் டைரக்டருடன் பழக்கம் ஏற்பட்ட நாட்களின் முக்கிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சினிமாப் படம்போல் ஓடலாயின. அதுவரை டைரக்டர் கல்யாணமாகாதவர் என்றே நம்பியிருந்தாள். அப்படித்தான் ஆரம்ப முதல் அவரும் உறுதி சொல்லிவந்தார். ஆனால்...!

அதே தருணம் தோட்டத்தின் மரக்கிளை யொன்றிலிருந்து கூண்டினுள் சிறைபுகப் போகும் குயிலின் சோக கீதம் காற்றில் மிதந்து வந்தது. மாயா திகைத்தாள். உள்ளத்தை வெளிக்காட்டிய மதுரமோகன கீதத்தின் பண்பாட்டில் டைரக்டரின் கைபிடித்த மனைவியின் ஒடிந்த உள்ளத்தின் அவல ஓலம் எதிரொலிப்பது போன்ற பிரமை எழுந்தது அவளுக்கு. கைகோர்த்த புருஷன்—மனைவியரிடையே நிலவவேண்டிய மனமொன்றுபட்ட பாந்தவ்யம்—அன்பின் இணைப்பில் உருவகிக்கும் பாசத்தின் பின்னல் அறுந்து போய்விடக் காரணம் அவளே என்பதை உணர்ந்த மாயாவின் இமைவட்டங்களில் விளிம்புக் கோடிட்ட நீரை மெல்ல ரோஜா விரலால் துடைத்தாள்.

ஆனால் அவள் குற்றவாளியா? ஒருக்காலுமில்லை. மனமறிந்த விதமாக அவள் யாருக்கும் குந்தகம் விளைவிக்க வில்லைதான். டைரக்டர் அவளை ஏமாற்றிவிட்டார். எப்படியும் டைரக்டரது கபடவேஷம் வெளிப்படக் காலம் வழி வகுக்கும் என்ற திடநம்பிக்கையில் மனம் தேறினாள். அத்துடன் டைரக்டரது சகவாசத்தை எவ்விதத்திலும் ஒடுக்கி விட முடிவு செய்துவிட்டாள்.

ஸ்டுடியோ ஞாபகம் அப்பொழுதுதான் வந்தது. புறப்பட்டாள். அவள் உள்ளம் சாந்தி நிறைந்தது. இமைப் போதில் புயல் கிளம்பிற்று. புயல் வீசியது. பின்னர் புயல் அடங்கி அமைதி. ஆம்; விந்தைதான்!

ஜோதிநாத்தை மாயாவிற்கு அறிமுகம் செய்து வைத்தார் டைரக்டர். ஆனால் அந்த முதல் சந்திப்பில் இரு நடிகர்களிடையேயும் கனிந்த கனவின் மயக்கத்தை ஜாடையாக கவனித்துவிட்ட டைரக்டருக்கு என்னவோபோல் இருந்தது. இருந்தும் வெளிக்காட்டிக்கொள்ள இயல வில்லை. ஒரு சில தினங்கள் தேய்ந்தன. மாயாவும் ஜோதிநாத்தும் நெருங்கிப் பழகினர். டைரக்டரது வஞ்சகத் திற்குப் பரிகாரமாக ஜோதிநாத்திடம் ஏற்பட்ட பரிச்சயம் புனிதத்தன்மை வாய்ந்தது என எண்ணிப் பூரித்தாள் மாயா. தன் இதயத் தாமரையை மலர்விக்கச் சக்திபெற்ற பிரேமைக் கதிர்கள் ஜோதிநாத்திடமே நிலவியுள்ளன என்பதையும் நிர்ணயித்துக் கொண்டாள்.

அன்றுதான் 'மாயா மோஹினி' படத்தின் ஷூட்டிங் ஆரம்ப தினம்.

குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேரவேண்டிய மாயாவும் ஜோதிநாத்தும் இன்னும் வரக்காணோமே என்று எண்ணிய டைரக்டர் சந்திரமௌலிக்கு அவர்கள் மீதிருந்த சந்தேகம் வலுத்தது. டைரக்டருக்கு ஜோதிநாத் பேரில் ஏற்கெனவே ஒரு 'கண்' உண்டென்பதை அவர் அறிவாரோ என்னவோ? ஆனால் மாயா நன்கு அறிவாள். அத்தகைய ஒரு

சந்தர்ப்பத்தை வகுத்து, தனது வாழ்வின் எதிர்காலத்திற்கு ஸ்திரமிடுவதென்பதே அவளுடைய அந்தரங்கம்.

ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாகச் சிந்தனைகள் பெருகி அதன் நடுவில் சஞ்சரித்த டைரக்டருடைய மூளை குழம் பிற்று. காலம் கடந்து மாயாவும் ஜோதிநாத்தும் காரி லிருந்து இறங்கி ஸ்டைலாக ஒயிலுடன் நடந்து உள்ளே நுழைவதைக் கண்டதும் சந்திரமௌலியின் கோபம் சுடர் தெறித்தது. ஏற்கெனவே புது நடிகரைப்பற்றிக் கொண் டிருந்த சந்தேகப் பொறி ஜ்வாலையிட்டது. கண்மூடி கண் திறக்கும் நேரம் சிந்தித்தார். இதே ரீதியில் மாயா ஜோதி நாத்திடம் படம் பிடித்தாகும் வரை பழக நேரிட்டால் ஒரு வேளை தன்னை நிராகரிக்கவும் நேரிடலாம் என்ற ஐயம் அவர் மனதைச் சாறு பிழிந்தது. அப்புறம் திரையுலகில் தன் பெயர்...? என்றும் மாயா தன் ஏகபோக உரிமை என்பதாய்க் கனவு கண்டு வந்தவர் டைரக்டர். ஆனால் அந்தக் கடிதம்....?

புது நடிகரை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்து விட்டு, 'மிஸ்டர் ஜோதிநாத்! எங்கள் புதுப் படத்தின் "அக்ரிமெண்ட்"டிலிருந்து உங்களை விலக்கிவிட்டேன். மன்னிக்கவும்' என்று எடுத்த எடுப்பிலேயே டைரக்டர் மொழிந்ததைக் கேட்ட மாயா திடுக்கிட்டு மலைத்துப் போனாள், புது நடிகரும் ஸ்தம்பித்தார். இத்தகைய திடீர் மாறுதலின் காரணத்தை அனுமானித்தாள் மாயா.

'டைரக்டர் ஸார், இப்பொழுது நன்றாகப் புரிந்து விட்டது உங்களின் கபடநாடகம்—வெளிப்பூச்செல்லாம். நான் உங்களுக்குப் பாத்யதை அற்றவள் என்பதை நான் உணர்ந்துகொண்டு—என் மனசாட்சி அறிவுறுத்தி—நாட் கள் பல ஆகப்போகின்றன. ஜோதிநாத் உங்கள் கண்ணை உறுத்திக் கொண்டேயிருந்த ரகசியத்தையும் நான் அறியாம லில்லை. ஆனால் உங்களுக்கு, முன்பே மணம் புரிந்துவைத்த துணைவி ஒருத்தி உண்டென்பதை இதுகாறும் மறைத்து வைத்து ஏமாற்றியது ஆச்சரியமே. உங்களைக் கைபிடித்த மனையாள் பொழியும் துயரக் கண்ணீரின் அடித்தளத்தில்

என் மன மாளிகையை இன்பமயமானதாக நிர்மாணிக்க என் பெண் மனம் ஒருபோதும் இடம் தராது.'

மிஸ் மாயா இப்படிப் பேசினாள். அவளேதான் கண்டித்துப் பேசினாள். பெண்மை முன்னின்று பேசியது. அந்தப் பேச்சிலே உக்கிரம் உதயமானது. பிறகு அன்று வந்த கடிதத்தையும் அவரிடம் நீட்டினாள்.

'டைரக்டர் ஸார், தாங்கள் என்னை இத்துணை தூரம் முன்னேற்றுவித்தமைக்கு என் நன்றியும் வணக்கமும். ஆனால், புதுப்பட ஒப்பந்தத்தை விட்டு நானும் இப்பொழுதே விலகிக் கொள்கிறேன். மன்னியுங்கள்' என்று கூறிய மாயா 'விர்'ரென்று கிளம்பினாள். ஜோதிநாத் அவளைப் பின்பற்றினான்.

மாயாவின் இத்தகைய—கனவில்கூட எதிர்பாராத—முடிவை நினைத்து மனம் ஒடிந்த டைரக்டர், மாயா சென்ற வழியில் பதித்திருந்த விழியைத் திருப்பினார். கையில் பிரித்திருந்த கடிதத்தைத் திரும்பவும் பார்த்தார். அவர் கண்களில் கண்ணீர் பிரவகித்தது. மறுகணம் அப்படியே சிலையாய்ச் செயலிழந்து அமர்ந்துவிட்டார் சந்திரமௌலி.

ஏய் காளி

அறந்தாங்கி ஸ்டேஷனில் ரயில் நின்றதுதான் தாமதம்; ரயிலினின்றும் ஜனங்கள் கும்பல் கும்பலாக இறங்க ஆரம் பித்தனர்; அவர்களில் குமாரசாமியும் ஒருவன். தலையில் சுமந்திருந்த பெரிய மூட்டையுடன் ரயில் நிலையத்தைவிட்டு ஊருக்குள் நடந்தான். வெய்யிலின் வெக்கை சற்று தணிந் திருந்தது; அந்தி மயங்கும் வேளை.

ஊரின் முன்னடியிலிருந்த கடையில் 'சாயா' குடித்து விட்டுப் பணத்தை முதலாளியிடம் நீட்டியவண்ணம் 'ஏனுங்க, ஆவணத்தாங்கோட்டைவரை துணைக்கு ஒரு ஆள் வேணும். சில்லரை எதாச்சும் கொடுத்துடலாம்; கிடைக் குங்களா?' என்று கேட்டான் குமாரசாமி.

'அவசியமானு ஒரு ஆளை வரச் சொன்னுப் போச்சு' என்று சொல்லிவிட்டு, 'ஏய் காளி' என்று அழைப்பைச் சுண்டிவிட்டான் கடைக்காரன். சோம்பல் முறித்து விசித் தெழுந்த காளியை ஏற இறங்கப் பார்த்தான் குமாரசாமி.

'காளி, சீக்கிரம் எழுந்திருப்பா, ஒரு கிராக்கி வந் திருக்கு. பாக்கி தூக்கத்தைத் திரும்பவந்து மறந்துடாமல் தூங்கிக்கலாம், ஐயாவோடே சாலைவரை போகணும்' என்று மேலும் துரிதப்படுத்தினன் டீக் கடைக்காரன்.

கந்தலும் கிழிசலுமாகப் பார்க்கப் பரிதாபமாகத தோற்றம் கொடுத்த காளிக்கும் ஒரு தேத்தண்ணீர் வாங் கிக் கொடுத்துப் புறப்பட்டான் குமாரசாமி.

அந்தி மங்கல் எங்கும் படர்ந்தது. சூரியனின் கதிர் கள் பொன் ரேக்குப் பெற்றுப் பிரகாசித்தன. இயற்கை கண்ணமூச்சு விளையாடியது.

மூட்டையை இதம் பதமாகத் தோளில் சாய்த்துத் தலைமுண்டாசுக்கு அணைவாக வைத்துக்கொண்டு காளி முன் சென்றான். குமாரசாமிக்கு அவனையும் அறியாமல் காளியிடம் அனுதாபம் சுரந்தது. வழிப்பயணத்துக்குப் பேச்சு இருந்தால் தொலை — தூரம் தோன்றுதல்லவா? காளியின் வாயைக் கிளறிவிட்டால் ஒருகால் அவனைப்பற்றி ஏதாகிலும் விருத்தாந்தம் புறப்படுமென்ற ஆவல் குமாரசாமிக்கு. மறு வினாடி அவன் இதய சபலத்தைத் துழாவி யறிந்தவனாட்டம் காளியே முதலில் பேச வாய் தூக்கினான்.

'அண்ணாச்சி, என்ன இப்படி ஒண்டியாய்ப் புறப்பட்டீங்க? ஆனா முடிச்சைப் பார்த்தாப் பெலமாக் கனக்குது. வேறு யாரும் உங்க சம்சாரம், பிள்ளைகுட்டி யாராச்சும் வருவாங்களா? அல்லது முன்னாடியே போயாச்சா?'

இது காளியின் கேள்வி.

சற்றே மறந்திருந்த ஏதோ ஒன்றை அவன் நினைவு படுத்திவிட்டவன் போலக் கணநேரம் குமாரசாமி பேசாதிருந்தான்.

'காளி, எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. ஆனா என் தங்கச்சிக்கு முதலிலே கல்யாணம் கட்டினப்புறம்தான் என்னைப்பற்றி யோசிக்கணும். தங்கச்சியையும் அம்மாவையும் காலம்பற வண்டிக்கு ரயிலேற்றிவிட்டேன். அவசரமா ஒரு காரியம் எனக்குத் தலைமேலே இருந்துச்சு. அதாலே நான் அவங்களோடு போக வாய்க்கலே. எனக்காகக் காத்துக்கிட்டிருப்பாங்க. சொந்தக்காரங்க வீட்டிலே ஒரு சடங்கு. அதுக்குத்தான் போறேன்' என்று குமாரசாமி கூறினான். 'ஊம்' கொட்டிக் கேட்டான் காளி.

குறுக்கிட்ட ஆற்று மணலைத் தாண்டிச் சென்ற சமயம் கூப்பிடு தூரத்தில் 'குபுகுபு'வென்று தீப்புகை மண்டலம் மேகத்தை எட்டிப்பிடிப்பது போன்று பரவி வந்ததைக் கண்ட குமாரசாமி, வேடிக்கை மாதிரி அக்காட்சியைக் காளிக்கும் காண்பித்தான்.

'இதுக்கு இம்மாம் தெகப்புக் கொள்றீங்களே. அஞ்சாறு வருசத்துக்கு முந்தி ஜப்பான்காரன் பர்மாவைக் குண்டு போட்டுத் தீக்கிரையாக்கினதை நீங்க கண்ணாலே காணக் கூடத் துணிச்சல் படமாட்டிங்க போலே. ஹும்; பாவிப்பய சண்டைவந்து...' என்று பேசிக்கொண்டு வந்த காளியின் குரலில் அளவிறந்த துயரம் தடம்பதிந்திருந்தது. இதை யுணர்ந்த குமாரசாமி கனிவுடன் பச்சாதாபத்தோடு காளி யைப் பார்த்தான். அவன் கண்களினின்றும் அருவி சோர நீர்ச்சொட்டுகள் படிப்படியாக வழிந்துகொண்டிருந்தன.

காளி.

ஐயா, இருந்திருந்தாப்போல இப்படி ஏன் கண்கலங்கு துன்னுதானே ரோசனே பண்ணுறீங்க. வயிற்றுப்பிழைப்புக் காக நானும் என் தங்கச்சியும் கடல் கடந்து பர்மா தேசத் துக்குப் போனேம். பெற்றவுங்க எங்களை அனுதரவா விட்டுட்டுச் செத்துட்டாங்க. வேலே செஞ்சு பிழைச்சு அதிலே கிடைக்கும் வருமபடியைக் கொண்டு நானும் தங்கச்சியும் காலத்தைக் கடத்தினேம். இப்படி வருசம் ஒண்ணு தாண்டிப்போச்சு. அப்புறம்தான் சண்டை மூண்டு குண்டு வீச்சுத் தொடங்கியது. கடை அலுவலா அடுத்த வங்குசாலே வரை போயிட்டுத் திரும்பி வந்து பார்த்தேன். ஊரே நிர்த்துளிப்பட்டுச்சு. பிணக்காடு கணக்காப் பட்டணம் தோணுச்சு. உயிரு தத்தளிக்க, பதைச்ச நெஞ் சோடு என் கண்ணே எங்கெல்லாமோ தேடினேன்; அலசி னேன்; காண முடியலே. அப்பவே என் ஜீவன் வடிஞ்சிருச்சு. உயிர் தப்பிச்ச இரண்டொரு பொங்கிச் சாமியார்களேயும் விசாரிச்சுப் பார்த்தேன். தெரியாதுன்னுட்டாங்க. நடைப் பிணமாக நடந்து நம்ப மண்ணே மிதிச்சேன். சுற்றுவட் டாரத் திருநாள் ஒண்ணு பாக்கி வைக்காம இன்னமும் தேடிக்கிட்டுத்தான் இருக்கேன். ஐயாவே, நீங்களும் ஒரு தங்கச்சியோடே பிறந்தவங்கதானுங்களே. என் ஆசைத் தங்கையை என் உயிர் இருக்கிறதுக்குள்ளே காணலாமா? காணக்கூடுமா?—' என்ருன் காளி. அவன் பேச்சில் சொல்

லுக்குப் புறம்பான சோகமிருந்தது; சஞ்சலமிருந்தது; ஆர்வமிருந்தது; ஆதுரமிருந்தது!

குமாரசாமி காளியை நோக்கினான். அவன் செயலிழந்த பாவையாக நின்றிருந்தான். விழிக்குழியில் புதைந்து கிடந்த கண்ணின் கருவிழிகள் அங்குமிங்கும் யாரையோ தேடியலைந்தன. அவன் தங்கையையா? 'சகோதரியை மீண்டும் பார்க்கலாமா?' என்ற ஆசைக் கனவில் மிதந்த அவன் இமைப்பொழுது அதிர்ச்சியடைந்தான். அதே நொடியில் 'இனி எப்படி, எங்கே அவளைக் காண இயலும்!' என்ற நிலை ஏற்படவே மலர்ச்சி பெற்ற அவன் வாட்டமுற்றான்; வாடிப் போனான்.

சாலை எல்லையை மிதிக்கும் வரை இருவரும் மோன நிலையில் வழிநடந்தனர். ஊரை அடைந்தவுடன் குமாரசாமி சில்லரையை எண்ணி எட்டு அணா காளிக்குக் கொடுத்தான். காளி சிரித்தான்; பலமாகச் சிரித்துக் கொட்டினான், ஊழிக் கூத்தில் பிரமன் உதிர்த்த பேய்ச் சிரிப்புக் கணக்கில்—! அவன் சிரிப்பில் இதய அந்தரங்க எண்ணங்கள் பூராவும் அலைபாய்ந்து மேல் பூச்சாகி எதிரொலிப்பது போன்று குமாரசாமி நினைத்துக்கொண்டான்.

'பாவம் பைத்தியம் போல.'

குமாரசாமி இரக்கங் காட்டினான். காளி அப்படியென்றால் பைத்தியமா? யார் சொன்னார்கள்?

'ஐயா, காசு பணத்துக்கு என்னுங்க. உங்க மாதிரி நல்ல மனுசங்கதான் எனக்குப் பெரிசு. எனக்கு என் தங்கச்சிப் பொண்ணு கிடைக்குங்களா?' என்று கூறி, அவன் தங்கியுள்ள வீட்டைக் கேட்டுக்கொண்டு காளி விடை பெற்றுக்கொண்டான்.

அடுத்த நாள்.

மத்தியானம் கடைத் தெருப் பக்கம் குமாரசாமி சென்றிருந்தான்; சடங்கு விசேஷம் முடிந்ததால் ஊருக்குப் புறப்படச் சாமான்கள் வாங்கிவரப் போயிருந்தான் அவன்.

வீட்டின் தாழ்வாரத்தில் கைகளால் முகத்தை ஏற்றபடி உட்கார்ந்திருந்தாள் அவன் தங்கை. சீவி முடித்திருத்தாள்; புது ஆடை உடுத்தியிருந்தாள். அழகான முகம் பொலி வுடன் விளங்கியது.

'குமாரசாமி ஐயா இருக்காங்களா?' என்று கேட்டுக் கொண்டு காளி முன்னே வரலாஞன். திரும்பவும் ரயிலடிக் குப் போக ஏதாவது 'சான்ஸ்' தட்டலாமல்லவா?

உட்கார்ந்திருந்த அப்பெண்ணை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான். யாருடைய முகம் அது? காளி பின்னும் ஓர் அடி முன் எடுத்து வைத்து, அந்த யுவதியை நோக்கிஞன்.

'நெசமாவே நம்ப தங்கச்சியேதாஞ இது? -

கனவின் தொடுகோட்டில் சஞ்சரித்துக்கொண்டிருந்த அவனுக்குச் சுய நினைவு முடுக்கப்பட்டதும், அடுத்தும் ஒரு தரம் அவளைப் பார்த்தான்.

தன் தங்கச்சியைப் போன்ற அதே சாயல—அதே முகம: அதே பார்வை. அப்படியென்றால் அவள்தான் அவன் தங்கையா?

அவன் தங்கச்சியை அப்படியே உரித்து வைத்திருந்தது போலிருந்தது அப்பெண்ணின் உருவம். ஆஞல் தன் தங்கச்சி மண்ணுகிவிட்டிருப்பாள் என்பதையும் காளி அவ்வப்போது உணராதில்லை. என்ருலும் சபலம்—பாசம் அவனை ஆட்டிப் படைத்தது. ஆட்டுவித்தால் ஆடாதார் யாரே உளர்?

இனம் விளங்காத பாந்தவ்யம், சிதைந்த எண்ணக் கலவையின் பிரதிபலிப்பென அந்தப் பெண்மீது கனிந்தது காளிக்கு. அவள் அவனுள் இடம் பெற்ருள்.

'தங்கச்சி'—

அழைத்த மனம் மணம் பெற்றது; உள்ளம் மலர்ந்தது; உடல் சிலிர்த்தது. காளி பரவசமடைந்தான். நரம்புக்கு நரம்பு புத்துயிர் ஊர்ந்து கிளர்ந்தது.

தங்கச்சி என்ற பாசத்தின் பிணைப்புடன், துல்லிய அன் போடு அந்தப் பெண்ணை இமை கொட்டாது பார்த்து நின்ற

காளிக்கு இவ்வுலக எண்ணமே கிடையாதுபோலும். அவன் தன்னையும் மறந்து சிரித்தான். ஆமாம்; அவள் உருவிலே அவன் தன் சொந்தத் தங்கச்சி நடமாடுவதை, அழகு காட்டி விளையாடுவதைக் கண் மூடாமல் பார்த்து நின்றான்!

குமாரசாமி கையில் பழங்களுடன் பிரவேசித்தான். வழியில் நின்ற காளியைக் கண்டுவிட்டு, 'காளி, வாப்பா' என்று முகமன் கூறினான். காளி அப்போதுதான் உணர்வு பெற்றான்.

தமையன் வந்ததும் ஒதுங்கி நின்ற அப்பெண் சாமான் களை உள்ளெடுத்துப் போனாள்.

'ஐயா, கொஞ்சம் தாகத்துக்கு வேணும்' என்றான் காளி.

உண்மையில் அவனுக்குத் தாகமில்லை. ஆனால் அவள் கையால் ஒரு மிடறு தண்ணீரேனும் அருந்தவேண்டுமென் றிருந்தது அவனுக்கு. தண்ணீர், செம்பில் கொணர்ந்தாள் மங்கை.

அவள் நீட்டிய செம்பைக் கை நீட்டி வாங்கின காளியின் விரல்கள் அவளது பூங்கரங்களைத் தீண்டின. அவன் புளகித் தான்; பூரித்தான்; பாச வெள்ளம் கரைபுரண்டது. தன் தங்கச்சியுடன் கழித்த 'அந்த நாட்கள்' மனதில் நிழலாடின. அவன் அவளை உவகையுடன் சிருஷ்டி செலுத்தினான். ஆனால் பதிலுக்கு அவள் விழித்த நோக்கிலே ஏன் இத்தகைய புயல்? சூறாவளி?

துவண்டு மறையும் மின்னலென அவள் மறைந்தாள்.

'அண்ணாச்சி.

ஏககாலத்தில் குமாரசாமியும் காளியும் திரும்பினார்கள். குமாரசாமி மட்டுமே உள்ளே நுழைந்தான். காளி ஏக்க முற்றுச் சிலையானான்.

'தங்கச்சி.'

காளி மனதிற்குள் அழைத்துக்கொண்டான். அவள் நிலைப்படியைத் தாண்டி நின்றாள்; சேலை தரையில் மிதந்து கிடந்தது. பார்வையைத் திசை விலக்கிவிட்டாள்.

'அண்ணாச்சி, யாரு அந்த மனுசன். அப்பவே தொட்டு என்னையே விழுங்கிப்பிடுகிறவர் கணக்காப் பார்த்துக்கிட்டே இருக்காரு. அந்த ஆளு பைத்தியமாங்காட்டியும்—?'

அந்த வார்த்தைகள் காளிக்குத் தெளிவாகக் கேட்டன. அந்தப் பெண்தான் பேசினாள்.

'சுரீர், சுரீர்' என்று அவ்வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூரிய அம்பாகப் பாய்ந்தன அவன் உடல், உள்ளம் இரண் டிலுமாக. எய்தவனிருக்க அம்பை நோவதா? அம்பை— சொல் அம்பை எய்தது அந்தத் 'தங்கச்சி'யாயிற்றே? உடன் பிறக்காவிட்டாலும் உடன் பிறந்ததாகப் பாசம் சொரிந் தானே அவன்?

காளி அன்பு காட்டினான். அவளோ பழி காட்டிவிட் டாள். பேதை! அன்பும் பழியும் துருவங்களின் இரு மாறு பட்ட புள்ளி மையங்களல்லவா? இந்த இரண்டு உள்ளங் களும் எங்ஙனம் ஒன்றுசேர முடியும்? அவன் பிணைத்து இணைக்கப் பார்த்தான். அவள் அபவாதம் சொல்லிவிட் டாளே! எண்ணெயும் தண்ணீரும் ஒன்றுகலக்க முடியுமா, என்ன?

அந்த யுவதி எய்த அம்பு காளியைத் துளைத்துக்கொண் டிருந்தது. புண் ரணமாயிற்று. கணத்தில் மீண்டும் அம்பு வீச்சு. ஐயையோ! அவன் துடித்தான், கரையில் வீசி யெறிந்த மீனைப்போல.

'தங்கச்சி.'

கண்ணீர் வெள்ளம், வெந்து புரையோடிய நெஞ்சு, உயிர் ஊசலாடிய உடல்; இந்நிலையிலும் காளி அவளை மறக்க வில்லை.

துள்ளியோடும் ஆற்று நீரின் மேல்பரப்பு அழகாக— சலனமற்றுத்தானே தோன்றுகின்றது. ஆனால் நீரின் அடிப் பரப்பிலே சுழித்தோடும் சுழல் யாருக்குப் புலப்படும்?

மனம் ஒரு குழந்தை; எடுப்பார் கைப்பிள்ளை. எடுப்பவர்கள் குழந்தைவசம் மனமிழக்கலாம். அதே சமயம் குழந்தை எடுப்பவரைப்பற்றி எந்நிலையில் தீர்ப்பு நிர்ணயம் செய்கிறதோ? யார் அறிவார்கள்? காளியின் மனமும் அப்படித்தான்; அவன் அந்தப் பெண்ணைத் தங்கையாக மதித்தான். தன் சொந்தச் சகோதரியைப்போலவே, ஒரே தினுசாக—அசல் அவளே மாதிரி காணப்பட்ட அந்தச் சிறுமியின் சூழ்நிலையிலேயே இருந்து, ஏதேனும் குற்றேவல் புரிந்து வாழ்வின் எஞ்சும் நாட்களைக் கழித்துவிடலாமென்று கனவு கண்டான் காளி. இது குறித்துக் குமாரசாமியிடம் பேச் செடுக்கவுமிருந்தான் அவன். ஆனால் அந்தப் பழி! காளி பாவமறியாதவன். பழி சுமத்தப்பட்டான், பாவம்!

காளி கனவிற்குங் கனவின் விழிப்பிற்கும் ஊடே அல்லாடினான். விழிப்பு அவனது கண்களை வழி திறந்தது.

அதே கணம் அவ்வீட்டை விட்டு வெளியேறினான். நீர் முட்டிய கண்களால் உலகத்தைத் துழாவினான். காளிக்கு உலகம் இதயமற்றதாகப்பட்டது; பாசமற்றதாகப்பட்டது; அவிழ்க்கக்கூடாத விடுகதையாகப்பட்டது. உள்ளத்தில் என்றும் பசுமையுடன் சிலையோடிருந்த தன் ஆவித் தங்கையை—அடுத்து அதே ஸ்தானத்தில் தங்கச்சியென மதித்த அந்தப் பெண்ணை—அப்புறம் அவள் உண்டாக்கி விட்ட ஆறாத புண்ணை—ஆகிய இவற்றைச் சுமந்தவாறு அவன், கால்கள் இழுத்த திக்கில் நடக்க ஆரம்பித்தான். நடந்தான், நடந்துகொண்டேயிருந்தான். வர வர அவனுடைய நேத்திரங்களின் கூட்டுறவில் உலகம் சூன்யமாகிக் கொண்டே வந்தது! உலகம் பொல்லாதது!

மையலும் தையலும்

மாடன் குடிசையினுள் நுழைந்த சமயம் மெல்லிய முனகல் சப்தமொன்று அவன் காதில் நன்ருக விழுந்தது! கையில் வைத்திருந்த மகுடியைத் தடாரென்று கீழே போட்டு விட்டுத் திரும்பினுன்.

'தம்பி...'

தரையில் விரித்திருந்த கிழிந்த பாயில் படுத்திருந்த தமையன் முருகுவின் அழைப்பு அவன் செவியில் ஏறிற்று. ஆனுலும் அப்போதைய மனநிலையில் அந்த வார்த்தைகள் மாடனுக்கு நெருப்பாகத் தகித்தன. வேதனை பெருமூச்சாகி வெளியேறிற்று.

'தம்பி, கொஞ்சம் விளக்கைப் பொருதுவேன்...இருட்டு கம்முன்னு இருக்கு...கண்ணுகூடத் தெரியல்லே...சங்கிலிக் கருப்பண்ணசாமி, இதுவா உன் சோதனே? ஊம்...இருந் திருப்பிலே உடம்புக்கு இப்படி வந்திருச்சே. தேற எம்பிட்டு நாளாகுதோ...பாவம், மாடனுக்குத்தான் வீண் சிரமம்...'

நெருப்புக்குச்சியைப் பெட்டியின் ஓரத்தில் உரசி விளக் கேற்றினுன் மாடன். இருண்ட வெளியில் ஒளி பரவிற்று. அவன் இருண்ட மனத்திலுங்கூட நம்பிக்கை ஒளி உதய மாவது போன்ற பிரமை இழைந்தது.

'வஞ்சி!'

மாடன் கம்மிய குரலில் அப்பெயரைத் தனக்குள் ஒரு முறை அழைத்துப் பார்க்கலானுன். அழைத்த வாய் கமழ்ந் தது. அவன் இதயத்திலே இன்ப ஊற்றுப் பெருகிற்று.

'கருப்பண்ணசாமி, வஞ்சி எனக்குக் கிட்டுவாளா? எட்டாப் பழமாகிவிடமாட்டாளே? ஒனக்கு ஒரு பொங்கல்

வச்சுக் கும்பிடுறேன். எப்படியும் அந்தக் குட்டி என் வசம் வந்திர நீதான் கண் திறக்க வேணும்.'

சற்று நேரத்திற்கு முன்பு குடிசைக்குத் திரும்புகையில் மாடன் வழியில் வஞ்சியைச் சந்தித்தான்.

'வஞ்சி!' என்ருன்.

அவள் அழகு காட்டி நின்ருள். அவள் காட்டுப் பூ! குறவர் இனத்தில் அவள் ஒரு செந்தாமரை. அவள்மீது ஏனையக் குறவர்களுக்கு எப்போதுமே ஒரு கண் உண்டு.

'வஞ்சி, இன்னிக்கு நம்ப கண்ணுலத்தைப் பத்தி உங்கிட்டே ''உண்டு இல்லே''ன்னு ஒரு முடிவு கேட்டிர ரோசிச்சிருக்கேன்' என்ருன் மாடன்.

'மச்சான், வெளுத்ததெல்லாம் பாலுன்னு நம்ப லாமா என்ன? ஒங்கிட்டேயும் பேருக்கு அஞ்சு, பத்து வெள்ளிப் பணம் உருண்டுதாஞ, நேத்திக்கு உங்க அண் ணுச்சி எங்கிட்ட அப்படிக் கேப்பாரா? அவருகிட்ட ரொம் பப் பணம் இருக்குதாம்; அவருக்கு எம்மேலே கண்ணு போலேருக்கு. பூடகமாச் சொன்ஞரு. நான் முடிவாச் சொல்லிப்பிடறேன். நீங்களும் கையிலே கொஞ்சம் பணம் சேர்த்ததும் நம்ம ரெண்டுபேரும் கண்ணுலம் பண்ணிக்க லாம் மச்சான்.'

வஞ்சி மேல்பூச்சாகக் கூறியதைக் கேட்ட மாடன், ஒரு கணம் சிலையாஞன். தான் விரும்பும் பெண்ணைத் தன் தமையனும் அடைய வலைபோடுகிருன் என்ற செய்தி அவ னைத் துயரத்திற்குள்ளாக்கியது.

'அண்ணனுமில்லே அண்ணன்...அந்தப் பயல் எனக்கு அண்ணனு? ஊஹூம்; எல்லாம் வெளிவேஷம்! அப்ப டின்னு இதுவரை எம்பேரில் உசிரையே வச்சிருக்கவனைப் போல நடந்ததெல்லாம் பாவனைதானு? வரட்டும்...'

சொல்லாமல் கொள்ளாமல் வஞ்சி நடந்தாள். அதற் குள் மாடன் ஏதோ ஒரு ஸ்திரமான தீர்மானத்திற்கு வந்த வனைப் போல ஓடிப்போய், 'வஞ்சி, அதுக்குள்ளார இப்

படி விரசா ஓடறியே! நாளை விடிஞ்சதும் உன் கையிலே வெறும் வெள்ளிக்காசைக் குலுங்கச் செஞ்சுட்டாச் சம்ம தந்தானே? அப்புறம் நீ என் கண்ணுட்டியாறதுக்கு அட்டி யில்லையே' என்று சொல்லிக் கண் சிமிட்டினன். வஞ்சி யும் குறுநகையை உதிர்த்தவாறு திரும்பினள். இரு ஜோடி விழிகளின் சங்கமத்தில் அவர்களது மணவினை ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது!

'ஏலே மாடா...'

அடித்தொண்டைக் குழியினின்றும் மிதந்தோடிய வார்த்தைகள் முனகலுடன் வெளிப்போந்தன. முருகு தம்பியை அலட்டினன்.

முழங்காலில் கைகளை அணைத்துக் கட்டிய வண்ண மிருந்த மாடன் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு சும்மா விருந்தான், கேட்டும் கேளாதது மாதிரி.

முருகுவும் மாடனும் உடன்பிறப்பு. விவரம் புரிந்த நாள்தொட்டு அண்ணனின் பராமரிப்பில் வளர்ந்தவன் மாடன். முருகு சற்று முன்கோபி. கோபமிருக்கும் இடத்தில்தானே குணமுமிருக்கும்? முருகுவுக்கு முதல் தாரம் கல்யாணம் பண்ணி அந்தப் பெண் இறந்து போனுள். வருடங்கள் இரண்டு ஆகின்றன. இதுவரை அவன் கல் யாணத்தைப்பற்றி அக்கறை காட்டவில்லை.

தற்சமயம் அந்தக் குடிசையில் அவர்கள் இரண்டு பேர் மட்டுமே வாசம். முருகு பாம்பு விஷத்தைப் போக் கடிப்பதிலே சூரன், அத்துடன் நாட்டு வைத்தியத்திலும் அவனுக்கு நல்ல பேர். பெயரும் புகழும் அவனுக்கு நிதி சேர்த்துத் தந்ததில் வியப்பில்லை அல்லவா? அது போக, மாடனும் தினமும் பாம்பு, மகுடி சகிதம் ஊர் சுற்றி வருவான். வரும்போது அவனுடைய சுருக்குப் பையாகிய கஜானாவில் பல காசுகள் இன்ப ஒலி எழுப்பிக் கொண்டிருக் கும்.

மாடனுக்கும் வயது வந்தது. காதல் 'பண்ணினுன்'; வஞ்சியின் வலையில் சிக்கினுன். ஆனுல் முடிவில் பார்க்கப் போனுல் வஞ்சிக்கொடியை அடையப் போட்டி!—அதுவும் அவன் கூடப்பிறந்த சகோதரனே போட்டி போட்டான்.

எண்ணச் சுழற்சியில் மாடனின் மனம் கிளை தாவியது; கண்களில் கண்ணீர் வேலி கட்டியது. அவன் மருண்டு நின்றுன். வெளியே கப்பியிருந்த இருளை மின்னல் கீற்று ஒன்று கிழித்துச் சென்றது. சற்று நேரத்தில் ஒளி பரவி மறைந்தது. மீண்டும் அதே இருள் திரள். அதேபோல அவனுக்கு ஒரு யுக்தி மின்வெட்டியது; அல்ல—பழி! சுற்றுச் சூழ்நிலையை அவன் மறந்தான். தன்னை இது காறும் ஆளாக்கிய அண்ணனை அடியுடன் மறந்தான். ஆனுல் அந்த வஞ்சிதான் அவன் ஸ்மரணையில் நின்று உணர்வூட்டி நின்றுள். மாடன் தன் அன்பை, பாசத்தை, உள்ளத்தை—ஏன் எல்லாவற்றையுமே அந்த ஒரு வஞ்சியின் நிமித்தம் திரணமாக எண்ணினுன்.

மாடன் சூதாடினுன். அவனுடைய சூதுப் பொருள் என்ன தெரியுமா? அதுதான் அவனுடைய தமையன் முருகுவின் உயிர்! பழி; வஞ்சம்! அவனது மனப் பாம்பு ஊர்ந்தது; படமெடுத்தது. காலைச் சுற்றின பாம்பு கடிக்காமலிருக்குமா? ஒரே கல்லில் இரண்டு மாங்காய்...! தனக்குப் போட்டியிடும் அண்ணன் ஒழிந்துபோவான்; பிறகு வஞ்சி விரும்பும் பணம் கிட்டும்! அதற்கப்புறம் வஞ்சியே கிடைத்துவிடுவாள். ஆகா! அவன் மனம் சிலந்திவலை பின்னியது.

'தம்பி...'

'அண்ணுச்சி?'

'அப்பவேபுடுச்சு அலட்டுறேனே...கேட்கல்லியா...'

'தூங்கிப்புட்டேன், என்ன சேதி?' உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினுன் மாடன்.

'மேலுக்கு முடியலே. என்னமோ போல வருது, கொஞ்சம் சுடு தண்ணி வச்சுக் கஞ்சி காச்சித் தர்றியா?' வெள்ளை உள்ளத்துடன் கெஞ்சினன் முருகு.

'ஆகட்டும் அண்ணாச்சி.'

அடுப்புப் பற்றவைத்து மாடன் கஞ்சி தயாரித்தான். பிறகு குவளையில் ஊற்றி ஆறவைத்தான். மறுபடியும் உள்ளே சென்று ஏதோ ஒன்றை எடுத்து வந்து கஞ்சியில் தூவிக் கலந்தான். அவன் கைகள் நடுங்கின; உடல் வியர்த்துக் கொட்டியது.

குவளையைத் தொட்டுப் பார்த்தான். சூடு தாள வில்லை. ஆறட்டுமே என்று பொறுத்திருந்த அவனுக்குத் தூக்கம் சுருட்டிக்கொண்டு வந்தது; தூங்கிவிட்டான் போலும்!

சற்றைக்கெல்லாம் 'தம்பி...தம்பி...' என்று முருகு அலட்டினன். அலறல் கேட்டுக் கண் விழித்தான் தம்பி மாடன்.

'தம்பி, நான் உனக்கு என்ன தீவினை செஞ்சேன்... ஏதுக்கு என்னை இப்படிச் சந்தேகப்பட்டே? உன் சந்தோஷம் ஒண்டியேதான் என் மூச்சுண்ணு எண்ணிப் பூரிச்சிருந்தேன். ஆனு நீ என்னை இப்படி உசிரோடே கொல்ல நினைப்பே யின்னு துளியும் எண்ணலேயே... அதுதான் நீ மனசிலே முடிச்சிருந்ததை உன்னையறியாமல் தூக்கத்திலே உன் வாய் வெளியே கொட்டிருச்சுதே! தம்பி, ஒங்கிட்டே ரெண்டு, மூணு நாளு முந்தியே சொல்லியிருக்கவேணும். அந்தப் பொண்ணு வஞ்சியை ஒனக்கே கண்ணாலம் செஞ்சு வச்சிர வேணுமின்னு நேத்திக்கு அதுகிட்டே அளப்பறிஞ்சு பார்த் தேன். ஆனு என் கெட்ட காலம் என்னைச் சம்சயிச்சுட்டது போல. அத்தோடே என்னைப்பற்றியும் உங்கிட்டே அவதூறு சொல்லியிருக்கு. தம்பி, நீயும் வஞ்சியும் சந்தோசமா இருங்க. அதுவே என்னுடைய ரொம்ப நாளையக் கனு. உள்ளே கலயத்திலே அம்பது ரூபாய் பணம் இருக்கு!

எடுத்துக்க...' தொடர வகையின்றி அவன் வார்த்தைகள் உதட்டுடன் ஒட்டிவிட்டன.

என்ன தோன்றியதோ, மாடன் 'சடக்'கென்று அண்ணனின் தலைமாட்டில் இருந்த கஞ்சிக் குவளையைப் பார்த்தான்; அது காலியாகவிருந்தது! 'பக்'கென்றது மாடனுக்கு. அவன் மனச்சாட்சி அவனைத் தூண்டில் போட்டு இழுத்தது.

அகல்விளக்கின் மங்கல் ஒளியில் முருகுவை நோக்கினன்; அவனுடைய இமைகள் மூடியிருந்தன. பேச்சு மூச்சற்றுப் பிரேதக் கணக்கில் அவன் கிடந்தான்.

'அண்ணுச்சி! ஐயோ! நான் பாவி! கொலைகாரன்...!' என்று ஓலமிட்டான் மாடன். உச்சாணிக் கொம்பில் அந்தரத்தில் கால் தவறித் திணறுபவனைப் போன்று அவன் தத்தளித்தான்; பதறினன். வெளியே மேகங்கள் வானத்துப் பாசறையில் போர் முரசம் கொட்டின. முகில் வானம் மழை பொழிந்தது.

அதே கணத்தில் 'மச்சான்!' என்ற சப்தம் கேட்டது. மாடன் பிரமித்துத் திரும்பிப் பார்க்கலானான். பதட்டத்துடன் பூங்கொடி வஞ்சி நின்றிருந்தாள்.

'உங்க அழுகை சத்தம் கேட்டுது. உசிரே போயிருச்சு எனக்கு! ஓடியாந்தேன்' என்றாள் வஞ்சி.

தேரையைக் கவ்வும் பாம்புபோல மாடன் வஞ்சியின் கழுத்தில் கையைக் கொடுத்துக் குரல்வளையைப் பற்றினன்.

'பாவி மகளே, என் மனதை மாற்றி, என் அண்ணனையும் சாகடிச்சிட்டியே!...பாதகி!...அதுக்குப் பழி உங்கிட்டே வாங்கினாத்தான் எனக்கு மனசு ஆறும்...'

வஞ்சியின் ஓலம் வளர்ந்தது.

அப்போது 'தம்பி...' என்ற மெல்லிய குரலை அவன் கேட்டான். கேட்டதுதான் தாமதம், அவன் பிடி தளர்ந்தது. 'அ ண் ணு ச் சி !' என்று கூவியழைத்து ஓடினன்.

'அண்ணாச்சி, நீங்க பிழைச்சுட்டிங்களா? அந்தக் குட்டிமேலே கொண்ட ஆசையிலே உங்க உயிருக்கு உலே வைக்கக் கஞ்சியிலே விஷம் கலந்துட்டேன். அண்ணாச்சி! என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னியுங்க!'

மாடன் தேம்பினான். முருகுவுக்குக் கொஞ்சம் தெம்பு ஊறியது. தம்பியை அணைத்துக்கொண்டு, 'தம்பி, எல்லாத்துக்கும் மேலே கடவுள் இருக்காரல்லவா? நீ விஷமின்னு எண்ணிக் கலந்தது சும்மா மயக்க மருந்துபோல, நம்ப நல்ல காலம். கடந்தது கண்ணீரோடு தொலையட்டும். அந்தப் பொண்ணைக் குறை சொல்லாதே. அது என்ன செய்யும்? விடிஞ்சதுமே வஞ்சியைக் கண்ணாலம் செஞ்சிக்கிடப் பரிசம் போட்டுடுவோமா? அதை நீதான் கேளுவேன்...' என்றான் முருகு.

குடிசையின் மூலையிலிருந்த அகல்விளக்கின் திரியில் சுடர் ஏறியது; ஒளி மங்கியது. சற்றுக் கழித்து அச்சுடர் தெறித்துப் பூமியில் விழுந்தது. மறுபடியும் முன்போல அழகாக அகல் வெளிச்சம் எங்கும் பரவ ஆரம்பித்தது!

சாவிலே வாழ்வு

'ஆயா, வருசப் பிறப்புக்குத் தங்கச்சியையும் மச்சானை யும் நம்ப வீட்டுக்கு அழைக்கணும்மில்லே, அதுக்காக அவங்க ரெண்டுபேருக்கும் புது வேட்டியும் சேலையும் எடுத் தாந்திருக்கேன்.'

'தம்பி, நானுந்தான் அப்பவே பிடிச்சு ரோசிச்சுக் கிட்டிருந்தேன். நல்லதாப் போச்சு நீயே முந்திக்கிட்டது. பின்னே அவங்களையெல்லாம் சும்மாவா கூப்பிடறது; அதி லேயும் இந்த வருசந்தானே முதல் தேவை. ஆமா, அல் லாம் எம்பிட்டுப் பணமாவுது?'

'இருபது ரூபாய் கிட்டக்க ஓடிருச்சு. இதுக்குக் குறைஞ்சு எடுத்தாக்க இந்தக் காலத்திலே துணி வகைப் படுமா? அதோடே இன்னிக்குத் தேங்காய் லாவாரம் கொஞ்சம் மவுசு. ஒரு மூச்சிலே அம்பிட்டும் முதலா யிடுச்சு—' என்று சொல்லி அத்துடன் பேச்சிற்கு முத்தாய்ப் பிட்டான் சின்னையா. தன் தாய் துணிமணிக்காக எங்கே அதிகம் செலவழித்துவிட்டதாகக் குறைப்படுவாளோ என்ற அச்சம் ஒருபுறம் லேசாக அவன் மனதைச் செல்லரித்தது. தைலம்மாதான் தற்சமயம் வீட்டுக்குப் பொறுப்பு. அவள் கணவன் இறந்த பிறகு குடும்ப நிர்வா கம் பூராவும் அவள் கண்காணிப்பிலும், கண்டிப்பிலுந்தான் முன்னேறியது. ஓட்டு வீட்டு மாசிமலைத் தேவன் வழி வமிசமென்றால் பின்னே சும்மாவா?

தன் தங்கச்சி விஷயத்தில் பணம் செலவழிக்கச் சின் னையா ஒருபோதும் யோசிக்கமாட்டான். அதில் அவனுக்கு என்றும் தனித்த பெருமிதம் சுழித்தோடும். உடன் பிறந்த தங்கை—அவள் முகத்தில் என்றும் ஆனந்தம் மலருவதற்காக சின்னையா எதையும் தியாகம் செய்யச்

சித்தமாயிருந்தான். தங்கையைப்பற்றி நினைத்த மாத்தி ரத்தில் அவன் மனதில் உற்சாகம் நிரம்பி வழியும். புது வருசப் பிறப்புக்குத் தங்கையை அழைத்துவர எண்ண மிட்டான். சந்தைக்குப்போய்த் திரும்பிய களைப்பில் சாப் பிட்டு முடித்து வெற்றிலை போட்டுக்கொள்ள வாசலுக்கு வந்தான். அவனுடன் கையில் வெற்றிலைக் 'கொட்டான்' சகிதம் அவன் தாயும் வந்தாள்.

'நாளை விடிஞ்சதுமா மச்சான் கிட்டப் போய்ச் சொல் லிப் புது வருசப் பிறப்புக்கு வரச் சொல்லிப்பிடுறேன், ஆயா.'

'ஆமா தம்பி, அப்பத்தான் மாப்பிள்ளைக்கும் புறப் பட லாயக்குப்படும். அவங்க பலசோலிக்காரங்க பாரு; இல்லியா?'

அவள் பேச்சைத் துண்டித்ததுதான் தாமதம். அதே கணம் 'ஆயா' என்ற குரல் கேட்டது. ஏக காலத்தில் சின்னையாவும் அவன் ஆயாளும் பின் திரும்பினார்கள். சிறு குழந்தையின் நிலையில் தன்னை உடந்தையாக்கிச் செருமிக் கொண்டிருந்தாள் வள்ளி. சின்னையா அழைப்பதற்குச் செல்லுவதற்குள் கண்ணீரே அவளை அழைத்துக்கொண்டு வந்துவிட்டது. சின்னையாவின் இதயம் நெக்குவிட்டது.

'தங்கச்சி, என்ன விசயம்? எதுக்கு இப்படித் தேம்பி அழுகிறே? மச்சான் வரலையாங்காட்டியும்...' என்று கேட் டுக்கொண்டே வந்த சின்னையா 'டக்'கென்று திகைத்து நின்றுவிட்டான். அந்தியில் கண்ட நிலவில் வள்ளியின் சோம்பிய முகத்தில் கைவிரல்கள் ஐந்தும் அப்படியே தடம் பதிந்து வீங்கியிருந்தது தெள்ளத் தெரிந்தது.

தைலம்மா உள்ளம் நடுங்கினாள்.

சின்னையா என்னவோ ஏதோவென்று பதறித் துடித் தான்.

'இதெல்லாம் என்னு தங்கச்சி?'

'அதெல்லாம் அவரு—மச்சான் செஞ்ச அநியாயம். கண்ணாலம் கட்டி எண்ணி நாலு மாசம் ஆகறதுக்குள்ளே அவருக்கு எம்மேலே வெறுப்பு வந்திடுச்சு. எல்லாம் காரிய மாத்தான்; கண்டிச் சீமையிலேருந்து அது அக்கா மகள் வந்திருக்குதாம், அந்தக் குட்டி மேலே அவரு கண்ணு வைச்சுப்பிட்டாராம், பணக்காரங்களாம்; என்னை விலக்கி வைச்சிட்டு அந்தப் பொண்ணைத்தான் பிறக்கிற மாசம் கண்ணாலம் கட்டிக்கப்போறாரும். இனிமே நான் அந்த வீட்டுப் பக்கங்கூட அடியெடுத்து வைக்கப்படாதுன்னு அடிச்சுத் துரத்திட்டாரு' என்றாள் வள்ளி விம்மிய குர லில். அவள் மார்பகம் விம்மித் தாழ்ந்தது. அவளுடைய நயனச் செம்புகள் நீரைப் பெருக்கின.

சற்று முன் தாயும் மகனும் வள்ளியைப்பற்றி எவ் வளவு ஆசையாக நினைத்துத் திருவிழாவிற்கு மாப்பிள்ளை யையும் மகளையும் வரவழைக்கத் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் கடைசியில்...?

'அடிச்சுத் துரத்திப்புட்டானா? நன்றிகெட்ட பய மகன். தங்கச்சி, கலங்காதே ஊர் மனுசங்கிட்டச் சொல்லி நியாயம் கேக்கலாம். மாரிப்பயல் வழிக்கு வந்தாத் தப் பிச்சான், இல்லாப்போனா அவனை ஒரு கை பார்த்துக் கிறேன். பாவிப் பயல் ஒன்னைக் கை நீட்ட எப்படி மனசு வந்துச்சோ?' சின்னையா இப்படிப் பேசினான். அவன் குரலில், வார்த்தைப் பின்னணியில் சோளம் பொரிந்தது.

மாரி இப்படி நடந்துகொள்வான் என்று கிஞ்சித்தும் எதிர்பார்த்தவனல்ல சின்னையா. தன் தங்கையின் நிலை அவனுக்கு ஆத்திரம் உண்டாக்கியது.

மகளைச் சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றாள் தைலம்மாள். அவள் கண்களில் கண்ணீர் பனித் திருந்தது.

காலத்தேருக்கு 'ஹோல்டான்' போட யாருக்குத் திராணி உண்டு? நாட்கள் கடுகிப் பறந்தன. தன் சகோதரி

வந்ததுதொட்டுச் சோம்பிய முகத்துடன் சதா காணப்பட்டதைக் கவனித்த சின்னையா பெரிதும் வேதனைப்பட்டான். அவ்வூர் மணியக்காரர் வீட்டுக்கு நடையாக நடந்து அவர் மூலம் மாரியைச் சமாதானப்படுத்த முயற்சித்தான்; எப்படியும் தன் தங்கை திரும்பவும் அவள் புருசனிடம் ராசியாகிவிட்டால்தான் நிம்மதிப்படுமென்று எண்ணம் அவனுக்கு. ஆனால் அவன் ஆசை நிறைவேறவில்லை. வள்ளியைப்பற்றி இனிப் பேசிப் பயனில்லை என்பதாகக் கூறிவிட்ட மாரியின் முடிவைக் கண்டு அதிர்ந்துபோய்விட்டான் சின்னையா.

அன்று முழுதும், வள்ளி முகம் வீங்க அழுது தீர்த்தாள். தன் வாழ்க்கைச் சூரியன் இங்ஙனம் அஸ்தமித்துப் போகுமென்று அவள் எப்படி நினைத்திருக்கக்கூடும்? ஆனால் அந்த ஒரு நாள்—காதல் வாழ்வின் தொடக்கத்திற்குச் செப்பனிட்ட புனித சம்பவத்தை வள்ளி என்றுமே மறக்கமாட்டாள்!

கிராமமே பரபரப்பாகக் காட்சியளித்தது. ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளோடு கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அன்று அம்மன் கோவில் கடைசித் திருவிழா; ஆகவே பலவித வேடிக்கைகளைப் பார்த்து மகிழுவதற்கு ஜனங்கள் திரள் திரளாகக் கூடியிருந்தார்கள். பலகாரக் கடைகளைச் சூழ்ந்து சிறுவர் கூட்டம் மொய்த்துநின்றது. இளங் காதலர்கள் பரஸ்பரம் பட்சணங்கள் வாங்கிப் பரிமாறிக்கொண்டார்கள். அம்மன் கோவில் திருவிழாவிலே அழகு உலாப் பாடப்போவதுபோலச் சீவிச் சிங்காரித்துக்கொண்டு போனாள் வள்ளி. சுற்றுப்புறங்களைப் பொறுத்தமட்டில் அவள் எடுப்பான பெண் என்று பெயர். அந்தி மயக்கம் அவள் கண்களில்; அழகு மயக்கம் அவளது எழில் முகப்படுதாவில்; கனவு மயக்கம் புன்னகை நெளியும் இதழ் ஓரத்தில். ஆக அவள் மயக்க உரு; அது வள்ளி!

'பொய்க்கால் குதிரை' ஆட்டம் ஒரு ஓரத்தில் நடந்து கொண்டிருந்தது. 'பெட்ரோமாக்ஸ்' விளக்குப் புடை சூழ, தம்பட்டம் முழங்க அழகாக ஆடிக்கொண்டிருந்த அந்த இளைஞனை இமைக்காமல் பார்த்து நின்றாள் வள்ளி. அதே போதில் தன்னையும் அந்த உருவம் விழுங்கிவிடுவது போன்று நோக்கியிருந்ததையும் அவள் கண்டுகொண்டாள். விழா முடிந்து வீட்டுக்குச் சென்ற அவள் இதயத்திலே அந்த வாட்டசாட்டமான ஆண் பிள்ளை இடம் பெற்றான். விழாவிலே ஆட்டம் முடிந்துவிட்டது. ஆனால் வள்ளி தன் இதயத்திலே ஏதோ ஓர் ஆட்டம் ஆரம்பமாகியிருப்பதாக உணர்ந்தாள்.

அடுத்த நாள் குளித்து முழுகி மனை மிதித்தாள் வள்ளி; மிதித்த அந்த இமைப்போதில் அவள் செயலிழந்தாள். காரணம்—தயக்கம்...! அன்று திருவிழாவில் கண்ட இளைஞனை வீட்டில் தரிசித்தாள். மாரியும் பார்த்தான். 'பைனாக்குலர்ஸ்' கையாளும் விஞ்ஞானியைப்போல அவன் கண்கள் வள்ளியை எடைபோட்டன. ஈரப் புடவையுடன் நின்ற அவளுக்கு வெட்கம்; 'கிணற்று நீரை வெள்ளமா கொண்டுபோயிடும்' என்று எண்ணமிட்டான் சின்னையா.

வள்ளிக்கு மகிழ்ச்சி எல்லை தாண்டிற்று. ஏனென்றால் உள்ளத்தில் சிலையோடியிருந்த பிம்பத்தை—பிம்பத்தின் உரிமையாளரை மீளவும் நேரில் காணும் பாக்கியம் பெற்றுவிட்டாளல்லவா?

அடிக்கடி அவர்கள் இருவரும் தனிமையைத் துண்டித்து, ஒருவரையொருவர் கண்டார்கள். இனமறியாத வெட்கப் புன்னகை அவர்களது இதய அந்தரங்கத்தைத் தம்பட்டமடித்துக் காட்டியது. வள்ளி—மாரி இருவரிடையிலும் ஏற்பட்ட அன்பைக் கண்டு மறு மாதமே இருவரையும் தம்பதிகளாக்கினான், சின்னையா. வள்ளி மாரிக்கு வாழ்க்கைப்பட்டதில் பூரித்துப் போனாள். ஊராரும் பெருமைப்படப் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் அதே மாரிதானா இப்படித் தன்னை வேண்டா வெறுப்புடன் உதறித் தள்ளுவது என்று எண்ணிப் பார்த்த வள்ளிக்கு அழுகை பொங்கியது. கடைசியாக அன்றைக்கு அவளைப் பார்த்து அவள் கணவன் 'வள்ளியாமில்லே வள்ளி ஆளைப் பாரு மூஞ்சியிருக்கிற பவுசிலே அழுகை வேறேயாங்காட்டியும்...' என்று ஏளனம் பேசிய சம்பவமும் நினைவில் எழுந்தது. உண்மைதான்; வள்ளி அப்போதைய நிலையில் அழகு மங்கித்தான் இருந்தாள். முகத்தில் பூராவும் அம்மை வடுக்கள் நிறைந்திருந்தன. திருமணமான மூன்றும் மாதம் அவளுக்கு 'அம்மை' கண்டு ஆள் தேறியதே பெரும்பாடாகிவிட்டது. முகத்தில் சிறு சிறு வடுக்கள் தோன்றின. தகதகவென்று ஒளிவீசும் முகம் கருநிறத் தழும்புகளோடு அழகற்றுத் தோன்றியது—மதி முகத்திலே குறிப்பிடத் தகுந்த மாறுதல்—மனதில் வெறுப்பினையூட்டக்கூடிய அளவு படர்ந்திருந்தது. எந்த அழகு மாரியை ஆகர்ஷித்ததோ அது இப்போது அவளிடம் இல்லை. எனவே மாரியின் மனம் மாறியது. வள்ளியை வெறுத்தான். தற்சமயம் அவளிடம் அழகில்லை என்பதற்கு வெறுத்தானென்றால் பிறகு மாரியும் மலருக்கு மலர் தாவித் திரியும் மது வண்டு மாதிரிதானா? இதே வள்ளி அன்று ஓர் கிராம மோகினியாகப் பரிணமித்தவளேயல்லவா?

அந்தி வானத்தில் விந்தைக் கோளங்கள் மலர்ந்தன. சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் புரள, கரங்களிடைக் கன்னத்தைப் புதைத்தவாறு வீற்றிருந்தாள் வள்ளி, தன் மச்சானின் இரண்டாம் கல்யாணத்துக்கு ஏற்பாடுகள் நடப்பதாகக் கேள்விப்பட்டதிலிருந்து அவளது இதய வேதனை இரட்டித்துப் பெருகியது.

'தங்கச்சி, எதுக்குப் பிரமாதமாக் கவலைப்பட்டுக் குந்தியிருக்கே. நான் தீர முடிவுபண்ணி ரோசிச்சிட்டேன். நம்ப சாதி வளக்கப்படி உனக்கு இரண்டாம் கண்ணாலம் கட்டத் தீர்மானிச்சிருக்கேன். மாப்பிள்ளை நம்ப மாங்குடி மாமன் மகன். அப்பத்தான் மாரிக்கும் சொரணை வரும்

ஆமா, வள்ளி' என்றான் சின்னையா. அவர்கள் ஜாதிக் கட்டுப்பாடு அத்தகையதொரு உரிமைக்கு—புது வாழ்விற்கு அனுமதித்தது. அதைப்பற்றி அவர்களுக்குள் விகற்பமோ, வித்தியாசமோ கிடையாது.

தமையனின் வார்த்தைகளைக் கேட்டதும் வள்ளி நிலை கலங்கிப் போனாள்.

சின்னையா மாங்குடிக்குப் பரிசம் போடப் போய் அன்றுடன் இரண்டு நாட்கள் ஓடியிருந்தன.

'அப்படின்னு மச்சானுச்கும் எனக்கும் இனிச் சொந்தமே இல்லையா, என்ன அநியாயம்?' என்பதாக எண்ணிறந்த முறை தன்னுள் குறைப்பட்டுக்கொண்டாள் வள்ளி. அவள் பெண் நெஞ்சில் பிரளயம் பிரவகித்துப் புரண்டது!

தண்ணீர் மொண்டு வரச் சென்றாள் வள்ளி, வழியில் 'ஏளே வள்ளி' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். எதிரே வந்து நின்ற அந்தப் பெண்ணைக் கண்டதும் ஒரு கணம் அவள் பிரமித்து நின்றாள். ஏனென்றால் அந்தப் பெண்தான் மாரிக்குப் புதிதாக வாழ்க்கைப்படவிருக்கும் 'கண்டிச் சீமைப் பெண்!'

'வள்ளி, என்னைக் கண்டு ஏதுக்கு இப்படிச் சிலை கணக்காப் போயிட்டே? மாரி அத்தான் வலையிலேருந்து நல்ல வேளை தப்பிச்சுட்டேன். ஏற்கெனவே அவருக்கு நீ வாழ்க்கைப்பட்டு, கடைசியா உன்னை விலக்கிட்டது எல்லாம் இப்பத்தான் சேதி காதுக்கு எட்டுச்சு. வள்ளி, உனக்குத் துரோகம் பண்ணி நான் அவரோடே வாழக் கொஞ்சமும் எனக்குப் பிடிக்கலே. ஆனா பாவம்...மாரிக்கு இந்தத் தண்டனை வரவேணும். இரண்டு நாள் முன்னாலே சந்தையிலிருந்து வரப்போ யாரோ ரெண்டு பேருங்க வழிமறிச்சு மாரியை அடிச்சுப் போட்டுட்டாங்களாம். ஆளு பிழைக்கிறதுகூட அரிதுன்னு பேசிக்கறாங்க. ஒனக்கு விசயமே தெரியாதா?' என்றாள் அவள்.

மின்னல் துவளும் நேரம் வள்ளிக்குச் சுயநினைவு அற்றுப் புவனமே பம்பரம் சுற்றியது. மறுகணம் அந்தப் பெண்ணின் கருணைக்கு நன்றி தெரிவித்துவிட்டு, உடனே தன் கணவன் வீட்டை நோக்கி வழி நடந்தாள்—ஓடினாள் போட்டியிட்ட மனப் புயலுடன். மச்சானுக்கு யாதொரு குறையும் ஏற்படாதிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். வள்ளியின் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. ஐந்து விரல்கள் அழுந்திப் பதியத் தன் கன்னத்தைச் சுவைபார்த்த மாரியை அவள் நினைக்கவும் துணியவில்லை. ஆனால் இனிய மொழி பேசும் மாரி செல்லமாகத் தன் கன்னங்களைத் தட்டியதைத்தான் மீண்டும் நினைவுகூர்ந்தாள். இப்போது அவள் மனம், மாரிக்கு என்ன நேர்ந்ததோ என்று துணுக்குற்றது. வேகமாக ஓடினாள்.

பிணம் போலத் தரையில் கிடத்தப்பட்டிருந்த மாரியைக் கண்ணுற்ற வள்ளிக்கு உலகமே சுழன்றது. 'மச்சான்' என்று கூவியழைத்து அலறினாள். வள்ளியைத் திரும்பவும் அவ்வீட்டில் கண்ட உறவினர்கள் அவளது உயர்ந்த போக்கைக் கண்டு வியந்தார்கள்.

தன் மனைவியைப் பார்த்ததும் மாரி கண்ணீருகுத்த வண்ணம், 'வள்ளி, நான் மகா பாவி, நீயே என் வீடு தேடி வந்துட்டியா? ஆமா, பூமியாட்டம் பொறுத்திருந்த ஒனக்குத் தீங்கு பண்ண நெனைச்சிருந்ததுக்கு இந்தத் தண்டனை போதும். நான் இனிப் பிழைக்கமாட்டேன். என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுக்க, அப்பத்தான் என் உடம்பு வேகும்...' என்றான் மாரி.

மேலே அவனால் பேச முடியவில்லை. அதுவே அவன் இறுதிப் பேச்சாகவும் அமைந்தது. அழுது புரண்டாள் வள்ளி. அந்த வீட்டில் அப்புறம் ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்காமல் அதே இரவில் தாய் வீடு திரும்பினாள்.

வள்ளியைக் கண்டதும்தான் தைலம்மாவிற்கு உயிர் வந்தது. மாங்குடியிலே பரிசம் போட்டு முகூர்த்தத்திற்குத்

தேதி வைத்திருக்கும் சேதியைத் தங்கச்சியிடம் கூறத் துடித்தான் சின்னையா. அதே சமயத்தில், 'அண்ணாச்சி அவரு—எம் புருசன் செத்துப் போயிட்டாரு. யாரோ பாவிப் பயலுங்க அவரை அடிச்சுக் கொன்னுட்டாங்க. அங்கே போயிட்டுத்தான் இப்ப வாறேன். மச்சான் சாவுக்கப்புறம் இனிமேப் புதுசா என்னாலே வாழ்க்கை தொவக்க ஏலாது. அவரு கை தொட்டுக் கட்டின தாலியைத் தவிர இனி வேறே யாரும் என் கழுத்திலே மஞ்சள் கயிறு முடியச் சம்மதிக்கமாட்டேன். எம்மேலே ஆணை இது...' என்றாள் வள்ளி. அவள் பெண்; அவள் அவன் மனைவி!

சின்னையா ஆணியால் அறையப்பட்டவனாக நின்றான்.

வள்ளியின் அழுகை வளர்ந்தது.

'தங்கச்சி, என்னை மன்னிப்பியா? உன்னை இப்படி அநியாயமா மாரி தள்ளி வச்சிட்டானே என்கிற ஆத்திரத்திலே, அவன் மேலே பழிவாங்க நான் அவனை அடிச்சுப் போட ஆட்களை ஏவிப்போட்டேன். ஆனா இப்படி அவன் உசிருக்கு ஆபத்து வருமின்னு துளியும் தெரியாது. ஐயோ, தங்கச்சி...' என்று கூறிய தன் தமையனின் வார்த்தைகளைக் கேட்ட வள்ளி அப்படியே மூர்ச்சித்து விழுந்தாள்!

புண்ணியம் ஒன்று

'பலே, சவாசு...!'

மணமும், சுவையும் கூடிக் குலவிய அந்த மல்கோவா மாம்பழத்தை அவசரமும், ஆத்திரமுமாகக் கடித்துச் சுவைத்து, ஆசை ஆசையாக அநுபவித்து மகிழ்ந்த பரவசக் குதூகலத்தோடு நெஞ்சம் பதை பதைக்க விம்மிக்கொண்டே சிட்டாகப் பறந்தோடி வந்த சக்திவேல், உலகாளும் ராக்காச்சி ஆத்தாளின் திடல் வந்ததும்தான் நின்றான்; நல்ல மூச்சு விட்டான்! நின்றவன் சிலையானான்! ஏன் அப்படி மேனி சிலிர்த்திட நின்றான்?

பாவம்...!

இப்போது

அந்தி மயங்கியது.

ஆனால்...

அவன்—சக்திவேல், மயங்கவில்லைதான்! இனிமேலும் ஏன் மயங்கப் போகிறான் அவன்? அவனுடைய ஆசை ஆசையான மயக்கம்தான் மயங்கி விளையாடி இப்போது தெளிந்து விட்டதே! கீழ் வசத்திலே பார்வையை வலை விரித்தான். அவன் வலையிலே ஆத்தாள் ராக்காச்சி மட்டிலும் விழாமல் தப்பிவிட முடியுமாக்கும்? அரைக்கணம் அவன் சிரித்தான்! தன்னை மறந்துதான் சிரித்திருப்பானோ? 'நான் ஒண்ணும் கொக்கு இல்லே! நான் சக்திவேலாக்கும்! அதாலேதான், நான் நினைச்சதை நானே முடிச்சிப்புட்டேன்...! என்னோட அடி நாளையக் கனா கொஞ்சமுந்தி பலிச்சிடுச்சு...! இனிமே என்மட்டுக்கும் என்னோட உசிர்கூடத் துச்சம்தான்...! ஆமா; ஆத்தா ராக்காச்சி மேலே ஆணை வச்சுத்தான் செப்பு

றேன்...!' மீண்டும் சிரித்தான்; வாய்விட்டுச் சிரித்தான் அவன்!

சுடலையாடியின் கழுத்தில் இழைந்து கிடக்கின்ற ராஜ நாகமெனா அவன் கழுத்திலே உருமாலை சுற்றிக் கிடந்த அந்தத் துவாலை கழன்றும், சுழன்றும் அவனது காலடியிலே வீழ்ந்தது. தலை குனிந்தவனின் திருஷ்டியில் திருஷ்டி கழித்து 'சிவனே'யென்று கிடந்த கிழிசல் துவாலையைக் கையில் எடுத்தான்: 'ஐயையோ...!' என்று ஓலமிடலானான். ஆத் தாளே, மூத்தவளே! நான் பாவியாகிப் போயிட்டேனே?" என்று நெஞ்சு வெடித்துச் சிதறக் கூவினான்; மீண்டும் அந்தத் துவாலையை நோக்கினான் சக்திவேல்.

அந்தப் பாதிக் கிழிசல் விதியாகவே சிரிக்கிறது; சிரித்துக் கொண்டேயிருக்கிறது...!

அலறிக் கதறிக்கொண்டே ராக்காச்சியம்மனின் சந்நி தானத்திலே நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான் சக்திவேல். இடுக்கிப் புழுவாகத் துடித்தான்; துடியாய்த் துடித்தான். 'ரத்தத்திமிரிலேயும், மோக வெறியிலேயும் நான் செஞ்சுப் பிட்ட அநியாயப் பாவத்துக்கு ஒன்னாலே தக்க தண்டனை கொடுத்துப்புட ஏலாது ஆத்தாளே ராக்காச்சியோ...! 'அதாலேதான் நான் செஞ்ச அந்தப் பாவமான, பயங்கர மான, ஈனத்தனமான பழிபாவத்துக்கு உண்டான தண்டனையை எனக்கு நானே இந்தாலே கொடுத்துக்கிடப் போறேனாக்கும்...! ஆமாடி ஆத்தாளே!' நடுங்கும் குர லுடன் கத்திக்கொண்டு பாதி கிழிச்சல் துணியைப் பற்றிக் கொண்டே இருளைக் கிழித்துச் சாலையைக் குறிவைத்து ஓடினான் இளவட்டம். பெருக்கெடுத்து ஓடின கண்ணீரில் அவனுடைய கன்னங்களின் தழும்புகள் எரிந்தன!

சாலை வந்தது.

ஆவணத்தாங்கோட்டைச் சாலை.

கிட்டத்தில் ஒட்டி நின்ற ஆலமரத்தை அமைதி காணத் தவித்த வெள்ளைத்தனமான நிவாரணப் புத்தியோடு ஏற

இறங்க நோக்கினுன் சக்திவேல்! 'பலே, சவாசு!' புதிதான மனிதத் தன்மையில் புயலிலே சிக்கி சுழன்ற துடிப்புடன் வாய் விட்டும், மனம் விட்டும் 'ஓ'வென்று அழுதான். புது வெள்ளம் மடை உடைத்து, மடை உடைந்து கொப்புளித்து ஓட்டமெடுத்தது. கைக்கு எட்டின பெருங்கிளையில் பாதித் துவாலையை வெகு அவசரமாக வீசிவிட்டுக் கிளையிலே தாவினுன்; நீண்டு கிடந்த கிழிசல் துணியின் இரு கரைக் கட்டுக்களையும் முன்னும் பின்னுமாகத் தொங்குமாறு இழுத்து உருகுச் சுருக்கிட்டு அவ்வளையத்திலே தன் கழுத்தைப் பதற்றத்துடன் நுழைக்கலானுன்!

அந்நேரம் பார்த்து எங்கிருந்தோ, ஏனே கரிச்சான் ஒன்று கூவிற்று.

போதும் போதாதற்கு மழை. மின்னல் வேறு கிழக்கே சீறிக் கீறிப் பாய்ந்தது.

மின்னல் வெளிச்சத்திலே கழுத்திலே இழைந்த சுருக்குக் கயிற்ருேடு, திடுக்கிட்டவனுக விசுக்கென்று திரும்பிப் பார்த்தான். மறு இமைப்பில், 'அட பாவமே...! பரிதாபமே!' என்று சத்தமிட்டான். கண் மூடிக் கண் திறப்பதற்குள், கண் மூடிவிடாத மனிதத் தன்மையில் ஆத்திரமும், ஆவேசமுமாகக் கண்கள் தளும்பின. இறுக்கிவிடத் துடித்துத் தவித்த துணி வளையினின்றும் தலையை அவசரம் அவசரமாக விடுவித்துக் கொண்டான்; என்னவோ ஓர் உறுத்தலோடு பதை பதைத்தவனுகத் துவாலையைக் கையோடு நீளமாய் இழுத்துக்கொண்டே தரையில் குதித்தான்; நிற்காமலும் நிலைக்காமலும் கிழக்கில் ஓடினுன் அவன்.

அங்கே—

சாலையோரத்து ஆலமரக் கிளையிலே யாரோ பெண் ஒருத்தி சுருக்குப் போட்டுக்கொண்டு தொங்கிக் கொண்டிருக்கிருளே...!

அடுத்த கணம்—

'ஐயையோ ஆத்தாளே...!'

ஜீவன் துடிக்க, அழகான இளம் மீசையும் துடித்தது. ஆலமரத்தில் எம்பித் தாவியவன், கைத் துணிக் கிழிசலை வீசிவிட்டு உச்சாணிக் கொம்பில் ஏறினன்; அந்தப் பெண்ணின் தங்கமான கழுத்தை ஈவிரக்கமில்லாமலே முறுக்கேற்றி இறுக்கி விட்டிருந்த முடிச்சுக்களை முன் பற்களால் கடித்துத் தளர்த்தினன்; மூச்சு இரைத்தது.

மறுநொடியில் அந்தப் பெண் அழகி மண்ணிலே சாய்ந்தாள்!

அவ்வளவுதான்! மறு நொடியில் அவன் 'ஐயையோ!' என்று வீரிட்டான்! ஈரல் குலை துவண்டு நடுங்கத் தொடங்கியது; கன்னத் தழும்புகளில் எரிச்சல் மூண்டது; மீண்டது.

இப்பொழுது—

அந்த இரண்டு பாதித் துவாலைக் கிழிசல்களும் திசை மாறிய விதியாகிக் கமுக்கமாகவே சிரித்துக்கொண்டிருந்தனவோ?

அவன் தரை மீன் ஆனன்.

மூச்சுப் பேச்சில்லாமலும், மூடின கண்கள் திறக்காமலும், பிணம் போலவே இன்னமும் மல்லாந்து கிடக்கிருள் அந்தப் பெண்...!

இருட்டைப் பார்க்காமல், ஆனல் அழகுச் சுவை வாசனையை மட்டிலும் பார்த்த ஈக்கள் மாம்பழக் கன்னங்களில் காட்டுத்தனமாக மொய்க்கின்றன. பருவம் திமிறிய கவர்ச்சியான இளைய மார்பகம் அந்தமும் சந்தமும் வழிய எம்பி எம்பித் தாழ்கின்றன. சோற்றுக்கைப் பக்கத்துக் கொட்டடி ரவிக்கைக் கிழிசலில் மின்னிப் பளிச்சிட்ட கரும் புள்ளிக்குத் திருஷ்டி சுற்றிப் போட்டுவிட்டுச் சாட்சி சொல்லத் தெரியாமல் சுங்கடிச் சேலை சரிந்து கிடந்தது. ரத்தக் கோடுகளும் அங்கங்கே துல்லிதமாகத் தரிசனம் கொடுத்தன. இடைவெளி விட்டு ஒற்றைவடத் தங்கச் சங்கிலியும் பார்வைக்குப் பொருளாகத் தவறிவிடவில்லை தான்!

கூதல்.

குனிந்து கிடந்த தலை பையப் பைய நிமிர்ந்தது.

'பவளக்கொடி...!'

'ஆசையான எம்பூட்டு அயித்தை மவளே! அழகுக் குட்டியே! பவளக்கொடிக் கண்ணே! என்னோட கண்ணு திறந்திருச்சே! நீ மட்டுக்கும் கண்ணை மூடிக்கிட்டு இப்படிப் பொணம் கணக்கிலே கிடக்கலாமா புள்ளே பவளக் கொடியோ?'

சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை அல்லவா? ரோசம் ரோசமாக வந்தது. கோபமும் கூடவே வந்தது. இனி, தொட்டு எழுப்பினால்தான் உண்டு. பிச்சை ஏந்துகிற மாதிரி கைகளைப் பரப்பி நீட்டினான். குழந்தையாக ஏந்தினான். நீர் தெளித்தான் முகத்தில்.

'அருமை பெருமையான எம்பூட்டு அயித்தை மகளே, பவளக்கொடிப் பெண்ணே...! விலை மதிக்க வாய்க்காத அபூர்வமான உன்னோட உசிரை நீயே வைராக்கியமாய்ப் போக்கிடத் துணிஞ்சதுக்கு அப்பாலே, நான் மட்டும் உசிர் தறிச்சிருப்பேனுங்காட்டி? இந்தாலே, இப்பவே நானும் கொஞ்சம் முந்தி திட்டமிட்டாப்பிலேயே சுருக்குப் போட்டுக் கிட்டு செத்து மடிஞ்சிப் பூடுறேன்...! தாயே ராக்காச்சி! எப்படி எப்படியெல்லாம் நீ விளையாடிப் பூட்டே? விளை யாட்டுக் காட்டிப்பூட்டே...? ஐயையோ, பவளக் கொடியோ...! நான் கொடும் பாவி...! ஆத்தாளுக்கே அடுக்காத என்னோட பெரும் பாவத்துக்கு எனக்கு நானே கொடுக்கப் போற தண்டனைதான் சத்தியமான, தருமமான பரிகாரமாக அமையவும் ஏலுமாக்கும்! ஆமா!'

கதறிக்கொண்டே எழுந்தான். எழுந்தவன், ரத்தம் நிறக்க எட்டத்திலே கிடந்த பாதிக் கிழிசல் துவாலைகளில் ஒன்றை இனம் கண்டு எடுக்க ஓட்டி நடந்தான். நடந்தவன், கால் தடுக்கிப் பவளக்கொடியின் காலடியிலே சரணடைந் தான்.

மறு இமைப்பிலே—

'அடி பாவியே! ராக்காச்சி...! பாவியாக்கப்பட்டுப் புட்ட என்னே இன்னமுமா உசிரோட வச்சிருக்கே? ஐயையோ...! இனிமே நான் என்ன செய்வேனும்?'

கெட்ட சொப்பனம் கண்டவளாக அலறிப் புடைத்துக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள் அந்தப் பெண். உச்சந் தலையிலும், அடிவயிற்றிலும் பலம் கொண்டமட்டும் அடித்துக் கொண்டே மருக்கொண்டவள் போலே விழி பிதுங்கச் சுற்றிச் சூழப் பார்வையை வீசினள். திடீரென்று ஆண் வாடையை உணர்ந்ததுதான் தாமதம், உடனே அவள் தன்னைத்தானே ஆத்திரம் மூளப் பார்த்துக்கொண்டாள். உடலும், உள்ளமும் பதறிய நிலையில், அலங்கோலமாகக் கிடந்த மாரகச் சேலையைச் சீராக்கிக் கொண்டபின், 'யாருங்க நீங்க?' என்று மூர்த்தண்யமான ஓங்காரக் குரலெடுத்து வினவினள் அவள்.

பத்ரகாளியை நேருக்கு நேர் கண்டவன் மாதிரி ஓர் அரை நொடி நடுநடுங்கிவிட்டான் சக்திவேல். பிறகு, சுயப் பிரக்ஞையை நிதானமாக மீட்டுக்கொண்டான். 'அயித்தை மகளே, பவளக்கொடித் தங்கமே! என்னைத் தெரியலையா? நான்தான் உன்னோட அம்மான் மகன், முறை மச்சான் சக்தி வேல்!' என்று இனம்காட்டி ஈனத் தொனியில் பேசினன் அவன்.

'ஆ! நீங்களா?'

பவளக்கொடி விம்மினள்.

'ஆமா புள்ளே!'

சக்திவேல் செருமினன்.

'அப்படீன்னு, செத்துச் சிவலோகம் பறியப்போன இந்தப் பாவியை நீங்களா காப்பாத்தினீக?'

'ஆமா புள்ளே, ஆமா!'

'ஐயையோ!' என்று வீரிட்டாள் பவளக்கொடி. இந்தப் பாவியை நீங்க ஏங்க காப்பாத்தினீங்க மச்சான்காரவுகளே?' கண்ணீரும் கம்பலையுமாகக் கேட்டாள்.

பயத்தால் முகம் வெளுக்கத் தேம்பினான் சக்திவேல். 'பவளக்கொடிப் பொண்ணே! வார்ற வெள்ளிக்கிழமைதான் உன் அப்பன்காரரர் உன்னோட இஷ்டப்படியே குளமங்கலம் மச்சு வீட்டுப் புதுப் பணக்காரரோட தலைச்சன் மகன் மாணிக்கத்துக்குக் கண்ணாலம் கட்டிக்கொடுக்கப் போறாரே! பின்னே நீ ஏனும் சுருக்குப் போட்டுக்கின்னு தற்கொலை பண்ணிக்கிட முனைஞ்சீயாம்?' என்ற கேள்விக்கு எதிர்க் கேள்வி கேட்டான் சக்திவேல்.

பவளக்கொடி, 'ஐயையோ . . . தெய்வமே!' என்று ஓலமிட லானாள். 'மானம் பறிபோன பின்னே நான் ஏனுங்க உயிர் வாழவேணும் மச்சான்காரவுகளே?' என்று அலறினாள். 'கொல் லுக் கொலைக்கு அஞ்சாத ஈனப் பொறப்புப் படுபாவி இள வட்டம் எவனோ ஒருத்தன் கொஞ்சம் முந்தி அந்திக்கட்டுக் கழிஞ்ச கும்மிருட்டிலே தாராடிப் பொட்டல் காட்டிலே புல்லுச் செதுக்கிக்கிட்டு இருக்கையிலே, என்னோட முதுகுப் புறத்தாலே கள்ளத்தனமாய்த் திடுதிப்னு கமுக்கமாய் வந்து லேஞ்சுத் துண்டைக் கிழிச்சு ஒரு பாதித் துணியினாலே என் னோட கண்ணுரெண்டையும் முதலிலே இறுக்கிக் கட்டிப் போட்டு, அப்பாலே கை ரெண்டையும், வாயையும் கட்டி முடிச்சோட முடிச்சாய்ப் பின்னிக் கட்டி முடிஞ்சுப்புட்டு . . . ஐயையோ . . . என்னை . . . நேச மச்சான்காரவுகளே . . .! ஐயையோ . . . நான் மகா பாவி ஆகிபுட்டேனே . . .! நான் படுபாவி ஆக்கப்பட்டுப்புட்டேனே . . .!' என்று கதறினாள். 'என்ன பாடுபட்டும் அந்தப் பாவி மிருகத்துக்கிட்டேயிருந்து தப்பி என் மானத்தைக் கட்டிக் காப்பாத்திக்கிடவே முடியாமல் பூடுச்சுங்களே அம்மான் மகன்காரவுகளே . . .! ஐயையோ!' என்று மூச்சடைக்கப் புலம்பினாள் அவள்.

அவள்—சாட்சாத் பவளக்கொடியேதானோ . . .?

'ஐயையோ!'

சக்திவேல் சின்னப்பிள்ளையாக விம்முகிறான். 'ஆத்தாளே பவளப் பொண்ணே! உன்னை மல்லுக்கட்டி வலுக்கட்டாயமாகக் கெடுத்துப்பூட்ட அந்தப் பாவி மகனை உன்னாலே கடைசிமட்டுக்கும் எந்த வகையிலேயும் இனம் கண்டுக்கிடவே வாய்க்கலையாங்காட்டி?...' என்று வினவினான்.

'ஐயையோ...! அந்த இடுசாமப் பேய் இருட்டுப் பொழுதிலே, என்னாலே எப்படீங்க இனம் கண்டுக்கிட்டிருக்க வாய்க்கும்...? நான் மட்டும் அந்நேரத்திலே தப்பியிருந்தேன்னா, அப்பவே அந்தப் பழிகாரப் பாவியை அங்கேயே கடிச்சுக் குதறிப் பத்திரகாளியாய் அவனோட இளரத்தத்தை உறிஞ்சிக் குடிச்சிருக்க மாட்டேனுங்களா? பிரக்ஞை வந்து சுரணை வந்தடியும் துணி முடிச்சுக்களை அவிழ்த்து என்னை விடுவிச்சுக்கிட்டுச் சேலையை மேனியிலே சுத்திக்கிட்டு நாலு பக்கத்திலேயும் அந்த கேடுகெட்ட மிருகத்தைத் தேடினேனே? அந்தக் குள்ளநரிப் பாவிப் பயலைக் கடைசி வரையிலேயும் என்னாலே கண்டுபிடிக்கவே முடியாமல் போயிடுச்சுங்களே, சக்திவேல் மச்சான்காரவுகளே...? அப்பாலேதான், பாவி நான் சுருக்குப் போட்டுக்கிட்டு செத்து மடிய எத்தனம் செஞ்சேனுங்களே? கடைசியிலே, அதுக்குக்கூட வழி கிடைக்காமல் போயிடுச்சுங்களே...? ஐயையோ! ஏனும் என்னைக் காப்பாத்தினீங்க, அம்மான்மகன்காரவுகளே...? நான் மகா ரோசக்காரியாக்கும்! இந்தத் துப்பு உங்களுக்கும் நல்லாவே புரியும்! நானே என்னோட உசிரைப் போக்கிக்கிட்டாத்தான், பாவி என்னோட மனசு ஆறும்! எங்கிட்டு ஒளிஞ்சு கிடக்குதாம் அந்தப் பாதித் துவாலைக் கிழிசல்?' காட்டுக் கத்தலாகக் கத்திக்கொண்டே எதிர்ப்புறம் பாய்ந்தாள் அவள்.

'அயித்தை மகளே! அப்படியே நில்லு!' என்று கெஞ்சிக் கொண்டே, பவளக்கொடியின் கைகளைப் பற்றித் தடுத்துக் கையெடுத்துக் கும்பிடுகிறான் சக்திவேல்! 'நல்ல காலத்துக்கு நான் இங்கிட்டு அவசியமாவும், அவசரமாவும் வரப்போக, என்னாலே உன்னோட உசிரைக் காப்பாத்த வாய்சிச்சு! என் உயிர் இருக்கிற பரியந்தம் இனிமே உன்னைச் சாகவே விடமாட்டேனாக்கும்! ஆமா புள்ளே...! நானும் நல்லதுக்

காகத்தான் உயிர்தப்பிப் பிழைச்சிருக்கேனுக்கும்! இல்லாங் காட்டி, இந்நேரம் நான் சுருக்குப் போட்டுக்கிட்டுச் செத்து மடிஞ்ச இடத்திலே புல் மண்டியிருக்காதாங்காட்டி?' தேம்பி ஞன் சக்திவேல்.

'மச்சான்காரவுகளே! என்னு சொல்லுறிக நீங்க? நீங்க ஏதுக்குச் சாகப் போனீங்களாம்?' பாதங்களை மாற்றி நடை பழகியபடி கேட்டாள் அவள்.

முறைமைப் பெண்ணுன சொந்த அத்தை மகள் பவளக் கொடியை அச்சம் மேலிட்டு மேனி நடுங்கப் பையப் பையக் குனிந்திருந்த தலையை நிமிர்த்தியவனுகப் பார்த்தான் சக்தி வேல். பார்த்த கண்கள் குளமாயின. செருமலும் விம்மலும் வெடிக்கின்றன. வெளிமனம் சுக்கலாகப் பொடிக்கத் துடிக்க, உள் மனம் வலிதாங்கமாட்டாமல் தவிக்க, அவன் புத்தி சக்தியோடு பவளக்கொடியை—பாவப்பட்ட, பாவப்படுத்தப் பட்ட பவளக்கொடியை திகில் மேவிய தைரியத்தோடு ஊடுருவுகிறுன். 'பவளப்புள்ளே! ஆதி நாளையிலே உன்னோட சீமை ஓட்டு வீட்டிலே நீ பொறந்தடியுமே, 'நீயேதான் எனக்குப் பொண்டாட்டி அப்படின்னு என்னைப் பெத்தெடுத்த ஆத்தாக்காரி ரொம்ப நம்பிக்கையோட சொல்லிப்புட்டாக; அப்பாலே, நீ ஆளான மாசி மாசக் கடுத்தத்திலே நான் முறை மச்சான் உரிமையிலேயும் உறவிலேயும் உலுப்பை, மொய்ப் பணம், பட்டுக் கண்டாங்கி அல்லாத்தையும் கொட்டு முழங்க ஊர்கோலம் வந்து உங்க தலைவாசலிலே வச்சதைக் கண்டுக் கிட்ட உங்க அப்பன்காரர் உனக்கும் எனக்கும் வெரசாவே கண்ணுலம் நடத்திப்புட வேண்டியதுதான் அப்படின்னு உத்தாரம் தந்தாக! ஆனு, என் பாளத்த விதி என்னை நிமிண்டி வேடிக்கை பார்க்க நினைச்சிருந்த துப்பு வெறும் மனுசனுன எனக்கு அப்ப மட்டுப்படவே இல்லை! பணப் பசை யோட திமிரிலேயும் சவகாசத் தோஷத்திலேயும் சட்டத் தோட கண்ணிலே கைவீச்சு மண்ணைத் தூவிப்போட்டு நான் கள்ளச்சாராயம் குடிக்க ஆரம்பிச்ச சங்கதி என் ஆசைக் கிளி ஒனக்கும் எட்டிப்பூடும் என்கிற புத்தியே எனக்கு வராமல் பூடுச்சு! 'குடிகார மச்சானை நான் கண்ணுலம் கட்டிக்கிட

இந்தச் சென்மத்திலே நான் ஒப்பவே ஏலாது" அப்படின்னு நீ ஒங்க வீட்டிலே சத்தியம் பறையப்போக, உனக்கும் நம்ம கோடித் தெரு அயன் பணக்காரப் புள்ளி ஆதிமூலஞ்சேர்வை தலேச்சன் மகன் மாணிக்கத்துக்கும் முகூர்த்தம் நடத்தவும் முடிவு செஞ்ச தாக்கல் தகவல் என் காதுக்கு விழுந்ததுதான், என்னோட தப்பு என் புத்தியிலே உறைச்சுது; மேனி முழுக்க எரிஞ்சுது! என் நெஞ்சிலேயும் நினைப்பிலேயும் அல்லும் பகலும் இம்மாங்காலமாய் விளையாடிக்கிட்டு இருந்த நீ... வாரக்கிழமையிலே எவனோ அயலான் ஒருத்தனுக்கு வாக்கப் பட்டு முந்தானை விரிக்கப்போறியே என்கிற நிசமான சங்கதியை என்னாலே தாங்கிக்கிடவே முடியல்லே! ஆகச்சே, உன்னோட இன்ப நினைப்பிலேயே நான் எம்புட்டு உசிரைப் போக்கிக்கிடவும் முடிவுகட்டி, கொஞ்சமுந்தி இங்கிட்டு வந்து ஆலமரத்துக் கிளையிலே சுருக்குப் போட்டுக்கிட ஆயத்தப் பட்ட வேளையிலேதான், தெய்வாதீனமாய் வெடிச்ச மின் வெட்டிலே உன்னை, மரக்கிளையிலே தொங்கிக்கிட்டிருந்த உன்னைக் கண்டேன்! ஏலே, புள்ளே! எல்லாமே நல்லதுக்குத் தான் இப்படி ஏடாகூடமா நடந்திருக்குமோ, என்னமோ? என்னை நம்பு, பவளப் பொண்ணே! நீ கெட்டுப் போயிருக்க லாம்! ஆனாலும், உண்மையிலேயே நீ உன்னையும் மீறி எவனோ ஈவிரக்கமத்த பாவி ஒருத்தனாலே வலுக்கட்டாயமாகக் கெடுக்கப்பட்டிருக்கே! ஆதாலே, நீ பாவம் தீண்டாத சுத்த மான கன்னிக் கொழுந்துதானுக்கும்! இந்தச் சத்தியத்தை நான் சொல்லல்லே! நம்ம சாமி, காந்திச்சாமி சொல்லியிருக் காகளாக்கும்! ஏ, புள்ளே...! கண்ணைத் துடைச்சுக்கிட்டு நிமிர்ந்து நில்லு! இப்பவே ஆத்தா ராக்காச்சியை சாட்சி வச்சு உனக்குத் திருப்பூட்டி உன்னை எம் பொஞ்சாதியாய் ஆக்கிடுவேன்! இது ஆத்தா மேலே இடுகிற ஆணை! ஆமா, புள்ளே, ஆமா!

உணர்ச்சிவசப்பட்ட நிலையிலே, நா தழுதழுக்கவும், கண்ணீர் பூச்சிதறவும் பேசினான் அவன்.

அவன் சக்திவேல் அல்லவா?

அவள்—பவளக்கொடி விம்மி வெடிக்க வேளை கணித்துக் கொண்டிருந்த மார்பகத்தை அழுத்தித் தேய்த்தபடி தலை சுழலப் புயலிலே தடுமாறிக்கொண்டே காலடி எடுத்து வைக்க எத்தனம் செய்தாள். மறு விநாடி, கால் இடறத் தட்டித் தடுமாறியவளாகச் சாய்ந்துவிட்டாள்; நொடியிலே கண்ணீர்க் கண்களைக் கசக்கிக்கொண்டு மண்ணைப் பார்த்தாள்!

மண் பிளந்துவிடவில்லைதானே? ஆனல், அவள்தான் பிளந்துபோனுள்!

'ஆசை மச்சான்காரவுகளே! இப்பைக்கு நீங்க சொன்னது சாடாவும் சத்தியந்தானுங்களே?' என்று சிரிப்பைத் தொடர்ந்து, கண்களின் சுடுநீரையும் தொடர்ந்து கேட்டாள்.

தீக்கணப்பு ரோஜாப்பூவைக்கூடத் தீண்டுமா, என்ன?

'நான் இப்பச் சொன்னது ஓட்டுக்கும் ஆத்தா ராக்காயி பேரிலே ஆணைகட்டிச் செப்பின சத்தியமாக்கும்! என்னை நம்பு, புள்ளே!'

சக்திவேல் ஆனந்தப் பெருக்கில் மிதந்து பேசினுன்.

'பலே, சவாசு!'

பவளக்கொடி கண்ணீரும் கம்பலையுமாகிக் கூவிய வண்ணம் அட்டகாசமாகச் சிரித்தவளாக நடை தொடர்ந்தாள். புழுதி மண் பரத்திட்ட அந்தப் பாதிக் கிழிசல் துவாலையை 'லாந்தியவாறு' சக்திவேலை அண்டினுள். 'சக்திவேல் மச்சான்ணு, சக்திவேல் மச்சான்தான்!' நயமாய்ப் பேசியவள், மறு இமைப்பில், விநயமாகவும் விதியாகவும் ஓங்காரமாய்ச் சிரிக்கலானுள். அடுத்த கண் சிமிட்டலில் 'ஐயையோ!' என்று அலறிக் கதறலானுள். இப்போது அவனை—முறைமச்சான் சக்திவேலை நேருக்கு நேராகப் பார்த்தாள்; பார்வையிட்டாள். உடன், கைக்கு மையாக அவன் தலைமுடிகளைப் பற்றியபடி, 'அட பாவி...! பழிகாரா...! காமப் பிசாசே! ஒரு பாவமும் அறியாத என்னை நயவஞ்சனை

யாய்க் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிப் போட்டு, இப்ப கூத்தா அடிக்கிறே கூத்து! இந்தப் பாதிக் கிழிசல் துவாலையாலே என்னை கண்ணு, கை, வாய் அல்லாத்தையும் முழுக்கக் கட்டிப் போட்டுப்புட்டு என்னைப் பதம் பார்த்துப்பூட்டது இந்த ரெண்டு கையுந்தானே?...ஏ கண்ணைத் தொறந் துக்கிடு வாயைத் தொறந்து பேசுடா, காவாலிப் பயலே!" என்று கொக்கரித்தவளாகத் தீப்பொறி பறந்த கண்களால் அவனைச் சுட்டெரிக்க முனைந்த வண்ணம் சக்திவேலின் கைகள் இரண்டையும், ரத்தத் தழும்புகள் நிலவில் சிரித்த கைகள் இரண்டையும் உடும்புப் பிடியாகப் பற்றிப் பற்களால் மாறி மாறிக் கடித்தாள். 'ஈவிரக்கமத்துப் போயிட்ட பேய் மிருகமே! எனக்கும் ஒன்னைவிடவும் காந்திச் சாமியைத் தெரியும்டா! அதாலே தாண்டா ஒன்னை இப்படிக் குதறினே னுக்கும்!' ஓங்காரமாய்க் கூவியபடி, இடுப்பில் செருகியிருந்த வீச்சரிவாளை எடுத்தாள். 'டேய்! நான் எப்பவோ செத்து போயிட்டேண்டா! ஆனுக்கா, நீ இனிமேத்தான் சாகப் போற! ஆமாடா இது சத்தியம்டா! மனுசத்தனமே இல் லாமப் போய்ட்ட ஒன்னை என்ன செய்யுறேன், பார்த்துக் கடா!' பத்ரகாளியாக உருக்கொண்டு மூர்த்தண்யமான வெறிமூளக் கையிலிருந்த வீச்சரிவாளைச் சக்திவேலைக் குறி வைத்து ஓங்கினாள் அவள்!

அதே சடுதியிலே...

'ஐயையோ! தெய்வமே! என் தெய்வமே! நான் பாவி தான்! நான் பாவியேதான்! ஆத்தாளே, என்னை நீ சமிச்சு எனக்கு மாப்புக் கொடுக்கமாட்டே; கொடுக்கவும் வேண்டாம்! எனக்கு உண்டான தண்டனையை நானே கொடுத்துக்கிடுவேன்! இது மெய்யாக்கும்!"

கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டு கூக்குரல் பரப்பிய வாறு, பவளக்கொடியின் தேவதைப் பாதங்களிலே நெடுஞ் சாண்கிடையாகச் சரண் அடைந்தான்.

அவன் சக்திவேல்!

அவள் சுடுகாட்டுக் காட்டேரியாகிச் சிரிக்கிறாள்; சிரிக்கிறாள்!

அவள் பவளக்கொடி!

'பேடிப்பயலே, ஏந்திருச்சுத் திரும்பிக் கிரும்பிப் பார்க்காமலே...ம்...ஓடுடாலே! அடிநாளையிலே நீ அசலான நல்ல மனுசனாய் இருந்து எம்மேலே மெய்யாலுமே நேசமும் பாசமும் வச்சிருந்த அந்த நன்னிக்காகவே நான் ஒனக்கு நன்னியோட மாப்புத் தந்து ஒன் ரத்தத்தை குடிக்காமல் விட்டிருக்கேனுக்கும்! அசந்து மறந்து என்னை மறுகடுத்தமும் திரும்பிப் பார்த்தியோ, அப்பவே நீ செத்தே! ஊம், சல்தியிலே ஓடுடாலே!'

சக்திவேல் நெஞ்சைப் பிசைந்துகொண்டே, ஏக்கமும் கலக்கமும் சூழ்ந்திடப் பவளக்கொடியை அச்சத்தோடு ஏறிட்டு நோக்கினான்.

'ஊம், ஓடுடாலே, பாவிப் பழிகாரப் பயலே!'

சக்திவேல் பிசாசைக் கண்ட பாவனையில் திரும்பிப் பார்க்காமலே ஓட்டமெடுத்தான்!

பவளக்கொடி சிரித்தாள்; சிரித்துக்கொண்டேயிருந்தாள்!

இப்பொழுது...

கணங்கள், தெய்வக் கணங்களாக ஊர்ந்தன.

சாக்குருவியொன்று ஏன் அப்படி ஓலமிடுகிறது?

அது:

ராக்காச்சி ஆத்தாளின் தெய்வத் திருச் சந்நிதானம்.

புதிய ரத்தம் பீறிடவும் வீறிடவும், விண்முட்டி மண் முட்டக் கதறி அலறிக்கொண்டே, வீச்சரிவாளைக் காறித் துப்பி வீசிவிட்டு நின்றாள் அவள்.

ராக்காச்சியோ சிரித்தாள்! சிரித்துக்கொண்டேயிருந்தாள்!

இப்போது, பவளக்கொடியும் சிரிக்கிருள்!

'ஓ!...பலே!'

பவளக்கொடி நிமிர்ந்தாள்.

தூண்டாமலே எரிந்துகொண்டேயிருந்த அந்தத் தூண்டா மணி விளக்குக்கும் சிரிக்கத் தெரியுமா, என்ன?

பாய்ந்தாள் பவளக்கொடி!

இப்போது...

அவள் மேனியிலே—பவளக்கொடியின் மேனியிலே தீ பாய்ந்தது!

கண் மூடிக் கண் திறக்கும் நேரத்திலே...

மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க நின்முன் சக்திவேல்! 'எந் தெய்வமே, பவளக்கொடியே! எம்புட்டு ஆசையான, அருமையான, பெருமையான பவளக்கொடியே...அயித்தை மகளே!' கைகள் நடுநடுங்க நின்றவன், பவளக்கொடியின் மேனித்தீயை அணைத்திடத் துடியாய்த் துடித்துக்கொண்டேயிருந்தான்.

அந்நேரத்திலே,

இடி முழங்கிட, மழை வீரிட்டது!

அவன், சக்திவேல், 'ஆத்தாளே!' என்று விம்மிக் கொண்டே கையெடுத்துக் கும்பிட்டவனுகச் சிரித்தான்!

ஈரம் சொட்டச் சொட்ட மண்ணிலே சாயவிருந்த பவளக்கொடியை மனம் பதைக்க வாரியெடுத்துத் தோளோடு தோளாகச் சாய்த்துக்கொண்டான் சக்திவேல்.

'பவளக்கொடி! என்னுேட பவளக்கொடிப் பொண் ணே எந் தெய்வமே!'

தெய்வம் கண் திறக்குமே அப்படி, அவள்—பவளக் கொடி கண் திறக்கிருள்!

'பவளம்! ஆத்தா ராக்காச்சி உனக்கும் எனக்கும்தான் புருசன்—பொஞ்சாதியாக ஆகிறதுக்கு விதிச்சிருக்காளுக்கும்!

அதனாலே, நீ மறுக்கடுத்தழும் வம்பு படிக்காம, வீம்பு பிடிக்காம என்னைப் பெரிய மனசு பண்ணிச் சமிச்சு, இந்தப் பாவிக்கும் நல்ல மனுசனாக மாறுறதுக்கு ஒரு புண்ணியத்தைக் கொடுத்துப்பிடுடி, எந்தெய்வமே பவளக்கொடியே! நீ ஒப்பலேன்னா, நன் இப்பவே அந்தத் தூண்டாமணி விளக் கோட நெருப்பிலே பாய்ஞ்சு நான் செத்துபடிஞ்சுப் பூடு வேன்! ஆமா! உம்மேலே சத்தியம் வச்சுச் சொல்லிப் பூட்டேன்! எந்தெய்வமே! நல்ல வாக்குக் கொடுக்க மாட்டியா?"

அவன்—சக்திவேல் கதறினன்; கதறிக்கொண்டே யிருந்தான்!

இப்போது,

'மச்சான்...!'

அதோ தாலிச்சரடு தெய்வமாய்ப் புன்னகை செய் கிறது!...

'ஞான் ஒரு இந்தியனுணா!'

அவன்...?

யாரோ ஒருவன்.

என்னவோ ஒரு பேர்.

ஏதோ ஓர் ஊர்.

ஊர் என்றவுடன்—

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்!' என்ற பாட்டு ஓட்டமாக ஓடி வர வேண்டாமோ?

அவன்...கிடக்கிறுன்!

அதோ, எக்ஸ்பிரஸ்.

ஜாக்கிரதை.

எக்ஸ்பிரஸ் ஓட்டமாகவே ஓடிக்கொண்டிருக்கிறது! —ஜாக்கிரதை!

சென்னை—கொச்சி எக்ஸ்பிரஸ்.

நாட்டிலே இப்போதெல்லாம் 'ரோஷ' உணர்ச்சியைப் பற்றி ரொம்பவும் தூக்கலாகவே பேசப்பட்டு வருகிறது.

அதனுல்தானே என்னவோ, அந்தத் துரிதவண்டி கொச்சியைக் குறிவைத்துப் பூஞ்சிட்டாகப் பறக்கிறது; பறந்துகொண்டிருக்கிறது. 'சற்றே விலகி இருக்கிறேன்!' என்று சொல்லாமல் சொல்லி, தமிழ்மண் சற்றே ஒதுங்கியிருக்க வேண்டும்!

இங்கே, அவன் மனமும் ஓடத் தொடங்கிவிட்டது. அவனுக்கு இன்னமும் 'ஸ்தலம்' கிட்டவில்லை. சென்னையில், சென்ட்ரல் ஸ்டேஷனில் தொடர்ந்த 'ஒற்றைக்கால் தவம்'

மேலும் தொடர்ந்தது; தொடர்கிறது. பாதங்கள் கெஞ்சின; கொஞ்சின.

பாவம், உமையவள்!... முன் ஒரு காலத்திலே, ஒற்றைக் கால் தவம் செய்தாளாமே?—அன்னையின் கால்கள் எப்படி எப்படியெல்லாம் வலித்திருக்கும்?

அவன் தவித்தான்; பாசத் தவிப்பாக இருக்கலாம்; பாசத்தின் தவிப்பாகவே இருக்க வேண்டும்! பட்டணத்தில் சாஸ்திரி நகரில் பெண்டு—பிள்ளைகள்! எல்லாம் நண்டும், சுண்டும்!—'மஹேஸ்வரனே, நீயும் பிள்ளைக் குட்டிக்காரன் தான்; பாசம் படுகிற பாடு உனக்கும் தெரியத்தான் வேணும்! அதனுலேதான், உங்கிட்டே ஒரு சின்ன யாசகத்தை, ரொம்பச் சின்னதான ஒரு பிச்சையைக் கேட்கணும்னு இப்ப என் புத்திக்குத் தோணுது. என்னுடை உசிரை இன்னும் ஒரு ஆறேழு வருஷத்துக்காச்சும் கட்டிக் காப்பாற்றி என் கையிலே ஒப்படைச்சிடுவியா, அப்பனே—அம்மையப்பனே? உன் பெண்களுக்குக் கல்யாணம்—காட்சி நடக்கவேணுமே!'—அவனுக்கு மட்டுமல்லாமல் அவனுடைய கண்களுக்கும் அழத் தெரிகிறது!...வெள்ளம்!...

காலம் ஓடுகிறது.

ரயிலும் ஓடுகிறது.

கொட்டாவி பீறிடுகிறது.

இப்போது நெஞ்சும் வலிக்கத் தொடங்கவே, ஆற்ருமை மேலிட்டது. பாதங்களை மாற்றிப் போட்டு நிற்கக்கூட முடியவில்லையே? 'இந்நேரம் அரசாங்கத்துச் செலவிலே முதல் வகுப்பிலே ஜாம்ஜாம்னு பிரயாணம் செய்ய வேண்டியவன், இப்ப எப்படியெல்லாம் பிராண அவஸ்தைப்பட வேண்டியதாயிடுச்சு! கொச்சியிலிருந்து நேற்றைக்குத் தகவல் வந்திருந்தா, ப்யூன் உதவிகொண்டு டிக்கட் ரிசர்வேஷன் கிடைச்சிருக்குமே? அரசு முறையிலே மனிதர்கள் இயந்திரமாக அலுவல் பார்த்தாலும், வயது ஐம்பத்தெட்டு முடிந்துவிட்டால், உடனே பதவி ஓய்வு கொடுத்துவிடுவார்கள்!' அவனுக்கு இப்போது சிரிப்புச் சிரிப்பாக வந்தது. 'நாளை மறு

நாள் எனக்கும் ஓய்வு கிடைச்சிடும். இந்த ஓய்வைக் கொண்டாட, என்னைக் கூப்பிட்டிருக்காங்க. நாளைக்கு நான் "நன்னி" பறையணும்!' விதியோடு விளையாடுகிறவனுக்குச் சிரிப்போடு விளையாடத்தானா தெரியாது...?

கோடைக்கும் குளிர் அடிக்குமோ...?

தேய்பிறை நிலவு அதோ, நெடிதுயர்ந்த தென்னை மரங்களில் கண் சிமிட்டுகிறது.

கண்மூடி மௌனியாக மகிழ்ந்த அவனது ரசனை மனம் வாசனை மல்லியாய் மணக்கிறது.

என்னவோ சத்தம் கேட்டது.

ஓலவக்கோடு!

பின்சாமம் கொடிகட்டி உறங்கிய 'சமயம்' அது என்றாலும், 'ப்ரயாணம்' விழித்திருக்க வேண்டாமா?

கிழவி ஒருத்தி இறங்கினாள்.

எங்கோ ஓர் இடம் காலி ஆகியிருக்கக்கூடும்.

'ஞான் சோதிக்கட்டே?'

'ஐய்யடா!'

இடப் பிரச்சினையில், பீடிகளின் முணுமுணுப்புக்கள் வந்த சுவடு தெரியாமலே தேய்ந்து விடுகின்றன.

காலியான இடம் அவனுக்காகவே காத்திருக்கவேண்டும்; முண்டியடித்துக் கொண்டு முன்னேறியவன், 'சரணம் சாமியே, ஐயப்பா!' என்று சோர்ந்து உட்கார்ந்தான். நாவறண்டது; கோயம்புத்தூர் சந்திப்பில் காப்பி சாப்பிட்டதோடு சரி. காலாறத் தரையிலே கால் பாவி நின்று காப்பியைச் சுவைத்தும் ருசித்தும் குடித்துக் கொண்டிருந்த நேரத்தில், அவன் உள்மனத்தில் ஆழமாகவே பதிந்து விட்டிருந்த சுதந்திர தின விழாக் காட்சிகள் மறுபடி சட்டை உரித்துக்கொண்டு படம் எடுத்தன; படம் காட்டின. ஜங்ஷனில் கண்டெடுத்துப் பத்திரப்படுத்தின தாயின் மணிக்

கொடி மற்றும் காந்தி மகாத்மாவின் படங்கள் சட்டைப் பையில் இப்போதும் உறுத்தவே செய்கின்றன...! ஊம்!

சாயா வந்தது.

பைசா போனது.

ரயிலுக்குக்கூட பூங்குயிலாகக் கூவத் தெரிகிறது.

அவன் இப்போது நல்ல மூச்சு விட்டான். சென்னைக்கும் கொச்சிக்குமாக எத்தனை தரம்தான் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து கொண்டிருப்பான் அவன்! 'விடிந்தால், எல்லாமே விடிந்துவிடும்!' அசலான விதியைப் போலவே, அந்நியமான அவனுக்கும் சிரிக்கத் தெரியும். நேரங்கெட்ட அந் நேரத்தில் அவன் மறுபடி 'எழுத்துக்காரன்' ஆனுன். சிருஷ்டியின் கர்வம் அவன் நெஞ்சிலும் நினைவிலும் ஆலப்புழைப் பச்சை ரக ஏலக்காயின் மணத்தைக் கூட்டுகிறது! நினைவுகள் சிரிக்கவே. சுற்றிச் சூழ விழிகளைச் சுழலவிடுகிருன் அவன். இருந்திருந்தாற்போல், அவனிடம் ஒரு பதற்றம் மிஞ்சியது. அவன் அமர்ந்திருந்த பலகைக்கு அடியிலே கிடந்த அந்த முரட்டு மனிதனை அவன் மறந்துவிட மாட்டான்; மிதித்து விடவும் மாட்டான்!

ஆஹா!

யார், அந்தப் பூவை...?

ஓ...!

பூலோக ரம்பையாகத்தான் இருக்க வேண்டும். அவள் தான் உறங்குகிருள்; ஆனுல், அவள் அழகு உறங்கவில்லையே! நல்ல பருவம்; நல்ல வயது. சேர நல்நாட்டு இளம்பெண் அல்லவா? தமிழ்ப் பெண்மை குலுங்க, அடக்க ஒடுக்கமாகச் சாய்ந்து கிடந்தாள். அவளுடைய மார்போடு மார்பாக அணைந்து கிடந்த 'ஆண்குட்டி' உறக்கக் கிறக்கத்தில் பாலமுதம் பருகிடத் துடிக்கிறது; தவிக்கிறது. பட்டு மேனி யில் பட்டும் படாமலும் ஆடிவரும் தேனகத் தவழ்ந்து கிடந்த 'முண்டு' ரொம்பவும் கெட்டிதான். மதி!...

அவனும் தவித்தான்; துடித்தான். 'சேச்சி எழுந்திருக்க மாட்டாளா? குழந்தையின் அச்சன் எங்கே கிடக்கிறுனே? பாவம்! அதற்கு ஞானப்பால் வேண்டாமே, பரமாரி அம்மே!'

'குட்டி' வீரிடுகிறது...

அது, குழந்தை.

குழந்தையும் தெய்வமும் ஒன்றுதானும்; ஒன்றே தானும்...! 'ஒன்றே குலம்...ஒருவனே தேவன்!' நினைப் பதற்கென்று இப்படிச் சில விதிகள்...!

அவன் இப்பொழுது 'பச்சைமண்'ணின் செப்பு வாயைத் தேடினன். ஆனல், அவன் திருஷ்டியில் பட்டதோ, பட்ட மரம் தளிர்த்த மாதிரியான 'சௌந்தர்யமாய' தரிசனம் ஒன்று. மெய்சிலிர்க்க, நினைவுகள் வீட்டுக்காரியிடம் தஞ்ச மடைய, நல்லவேளையாக, அவன் மெய் உணர்ந்தான். க்ஷணப்பித்தமான குற்ற உணர்வுக்காகக் கழிவிரக்கம் கொண்டு, நேத்திரங்களை வேறுபுறம் திருப்பினன்.

அங்கே:

யாரோ ஒரு 'சிர்ப்பக்காரன்' இன்னமும் 'அந்தக் காட்சி'யைக் கண்காட்சியாக்கி ரசிப்பதில் லயித்திருக் கிறுனே...? எதிர் ஆசனப்பலகையில், தலையும், காலுமாக நீட்டிக் கிடந்த அந்தப் பெண்ணின்—அந்தத் தாயின் கால் மாட்டில் நின்றுகொண்டிருந்த அந்த இளவட்டம். பிரயாணச் சாதனங்கள் வைப்பதற்குப் பயன்பட்டுப் பயன ளிக்க வேண்டிய பலகையின் விளிம்பிலே இரு கைகளையும் ஊன்றி அணை கொடுத்தவனுகக் காட்சியளித்தான். அவனுடைய முகத்தில் நிழலாடிய 'மோக வெறி' கூடுதல் அடைந்துகொண்டே இருந்தது.

சே...!

உடம்பில் உறைந்திருந்த 'தணிப்பு' மாறி, 'சூடு' உறைக்கவே, கனைத்தான் அவன்.

மூச்!—அந்த வெறியனுக்குச் சொற்பமாவது 'பேடி' உண்டாக வேண்டாமோ?...பேடி!—அவன் ஆத்திரப் பட்டான். 'சுத்தத் தள்ளிப்பொளி!'

அழகான தாயின் பூங்கரங்கள், அவளுடைய கச்சையின் பூவிலங்காக அமைந்த அடி முடிச்சை அத்தனை தூக்கக் கலக்கத்திலும் ஞாபகமாக இறுக்கிக்கொள்வதில் முனைந்தன; கண்கள் இன்னமும் விழித்துக்கொள்ளவில்லை. பிள்ளையைப் படுக்கை ஒண்டலில் மாற்றிக் கிடத்திவிட்டு, அவளும் இப்போது மாறிக் கிடக்க எத்தனம் செய்தாள். 'முண்டு' சீர் அடைந்து, சீர் பெற்றது. 'கஞ்ச மலர்ப்பாதங்கள்' சேலைக் கரையில் ஒளிந்துகொண்டன.

ஓ...!

எவ்வளவு நாணயமான அழகோடு அவள் தரிசனம் தருகிருள்...அந்த அழகை நிதர்சனமான அழகென்றும் சொல்லவேண்டும்! அவன் எண்ணமிட்டான். குழற்கற்றையில் மூன்றும்பிறையாகப் பூத்து மணம் பரப்பிய மல்லிகைப் பூச்சரம் எத்துணை கம்பீரமான தருமத்தோடும், சத்தியத்தோடும் அவளுடைய மாண்புமிக்க அழகைப் பிரகடனப் படுத்திக் கொண்டிருக்கிறது! தாலிப்பொட்டின் புனித நிறச் சரடு பின்கழுத்தின் பூஞ்சை மயிர்த்தொகுதியில் வனவாசம் செய்திருக்கலாம்.

அவன் அந்தக் காமவெறியனை மறுபடி நோக்கினுன்.

ஆனல், அந்தக் காமுகனே, இன்னமும்கூட அந்தப் பேரழகுச் சிங்காரியையே ரசித்துக் கொண்டிருந்தான்...!

கைந்நொடிப் பொழுது கழிந்தது.

என்ன அநியாயம்...!

அந்தக் காவாலிப்பயல் அவள் காலடியில் குந்தி, சில விஞடிகளுக்கெல்லாம் அவளுக்குப் பக்கத்தில் சாய்ந்து விட்டான்!

அவனது ஆத்திரம் வளர்ந்தது... 'யார் இந்தப் பொறுக்கி...? இவன் அந்தப் பெண்ணேடை ''பர்த்தாவு''

அல்லவே! அவள் இவனுக்குப் ''பாரியாள்'' ஆகவும் இருக்க முடியாது. இவன் யாராம்? அப்படியானல், அவளோட புருஷன் எங்கே?' தவிப்பும் ஏக்கமும் வளரத் தொடங்கின. 'ஒருவேளை, என் காலடியில் ஸ்மரணை தப்பிக்கிடந்த முரடன் தான் அந்தக் கேரளப் பைங்கிளிக்கு வாய்த்த காதல் கணவனாக இருப்பானே?' அவனுடைய கைகள் துருதுருக் கின்றன! — அந்தத் தறுதலைப் பயலை ஹிப்பி முடியைப் பிடித்து அலக்காகத் தூக்கி வெளியே வீசியெறிந்தால் என்ன...?

'பதினலாம் ராவுதித்தது மானத்தே!'

இந் நேரத்தில் ஏது பாட்டு? யாரோ, எங்கோ பாடு கிறார்கள்.

கேரளத்தின் கள்ளங்கவடு இல்லாத, குழந்தைத் தனமான இயற்கையின் லாவண்யத்திலும் சிருங்காரத்திலும் ஓர் அரைக்கணம் அவன் சொக்கி மெய்ம்மறந்திருக்கத்தான் வேண்டும்!

இருந்திருந்தாற்போல, என்னவோ அரவம், அரவம் மாதிரி சீறியது.

சபாஷ்!

அந்தப் பெண்தாய் — தாய்ப்பெண் இனம் விளங்காத அந்தப் 'புதிய ஸ்பரிச'த்தின் தொட்டுணர்வை இனம் புரிந்து அறிந்து விழிப்புப்பெற்ற தவிப்பில், துடிப்பில், கோபத்தில் தட்டித் தடுமாறியவளாக வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து, அந்த மனிதமிருகத்தின் — மிருக மனிதனின் ஹிப்பி முடியை எட்டிப் பிடித்து நெட்டித் தள்ளிவிட்டாள்... 'ஓளங்கள்' படத்திலே ஒரு கட்டத்திலே பூர்ணிமா கொடுங் கலூர்ப் பகவதியாகச் சினந்து கொதித்தெழவில்லையா?— அப்படித் தோன்றினள் அவள்! 'சேட்டா!' என்று கூவி, அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்தாள். கீழே காலடியில் கும்பகர்ணனாக உறங்கிக்கிடந்த முரடனை எழுப்பினாள். அவனை ஒட்டி உரசியபடி அவனிடம் என்னவோ 'பறை'ந்

தான். அவன்தான் அவளுடைய 'சேட்டன்.' சேட்டன் என்ருல் இங்கே கணவன்தான் — அண்ணன் இல்லை!

லட்சணமான அழகிக்கு அவலட்சணமாக வாய்த்த முரட்டுக் கணவன். கண்கள் இரண்டும் ரத்தமாகச் சிவக்க எதிர்ப்பக்கம் பாய்ந்தான்! — ஆடு திருடிய 'கள்ளனுக' விழித்துக்கொண்டே, அங்கிருந்து தப்பிப் பிழைக்க முனைந்த அந்த அநாகரிகப் போக்கிரியை அவனது கழுத்தில் கையைக் கொடுத்து இழுத்து நிறுத்திஞன்.

'ராஸ்கல்!' — வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டே, பாரதத்தின் பாரம்பரியப் பண்பாட்டின் நன்றியை மறந்த அந்தப் பாவியை அடித்து நொறுக்கக் கைகளை ஓங்கிஞன்!

'நாயர்!...'

அவன் தடுத்தான்; மனிதத்தன்மையில் சிலிர்த்து மனிதாபிமானத்தோடு முரடனைத் தடுத்தான் அவன். 'சேட்டன் என்னைச் சமிச்சு மாப்புத் தரணும்!' என்று எச்சரித்தவனுக, அழகியின் முரட்டுக் கணவனிடமிருந்து அந்த அசிங்கமான மனித மிருகத்தை விடுவித்துத் தன் பக்கமாக இழுத்து, அந்த மிருக மனிதனின் நாகரீகமான, நயமான, சிவப்பான கன்னங்கள் இரண்டிலும் மாறி மாறி — மாற்றி மாற்றி அறை கொடுத்தான் அவன்! — பட்டணமாக இருந்திருந்தால், இப்படிப்பட்ட அநியாயத்திற்குத் தண்டனை கொடுப்பதில் அவனுடைய பெண்டு பிள்ளைகளும் தோள் கொடுத்திருப்பார்கள்...!

மறுகணம்...

அடிபட்ட ஈனப்புலி, இப்போது அவன்மீது பாய்ந்தது!

அவன் சிரிக்கிருன்! — அவனைத் தற்காத்துக்கொள்ள அவனுக்குத் தெரியும்!

'அதர்மம்' மண்ணைக் கவ்விற்று!

'மாத்ருபூமி' படபடத்தது; நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் பராமரிக்க வேண்டுமென்று பிரதமர்

இமாசலப் பிரதேசத்தில் பொதுமக்களை கேட்டுக் கொண்டிருந்தார்!

மலையாளப் பொற்பாவை, இப்போது விதியாகவும், வினையாகவும் சிரிக்கிறாள்!

'ஞங்ஙள் மலையாளியாண; ஞங்களிண்டே ஸ்வந்தக் காரியங்கள்லே எடை படண்ட்ட ஆவச்யம் உண்டாக்க நிங்ஙள் ஆராண...?' — அந்தப் பேடி, 'பேடி' கொண்டு, குனிந்த தலையை நிமிர்த்தாமல், அவனிடம் 'சோத்தியம்' கேட்கிறான்!

அவனைக் கேள்வி கேட்க இவன் யார்? அவனைப்பற்றி இவனுக்கு என்ன தெரியும்? என்ன புரியும்? — அவனுக்கு ரத்தம் கொதிக்கிறது; தமிழனுகத் தலை நிமிர்ந்து நின்றான். 'நிங்கள் ஆராண?' — விடை சொல்ல வேண்டாமோ...!

'ஞான் ஒரு இந்தியனுண!' — அவன் உணர்ச்சிகளின் பிழம்பாகி விம்முகிறான்!

அந்த ரௌடி எங்கே...?

கேரளத்தின் அன்புப் பைங்கிளி கண்ணீர்த் தரிசனம் தருகிறாள்! — அதோ...அதோ...!

எக்ஸ்பிரஸ் ஓடிக்கொண்டிருக்கிறது!

அவனுடைய சட்டைப்பையில் ஊசலாடிய அந்தப் படத்திற்கு அப்போது மூச்சுத் திணறியிருக்க வேண்டும்...!

அது... அது... 'தாயின் மணிக்கொடி!'...

எல்லைச் சக்தி

'விந்தையான விமரிசனம். ஆமாம், உன் சிந்தை தடுமாறுமல் பார்த்துக்கொள். உண்மையிலேயே நீ என்னைவிட ஆடலில் சிறந்தவளென்ருல், நீ சற்றுமுன் பெண்ணுள் ஆணுகிச் சூளுரைத்தாயே, அந்தச் சூளுக்கு—சவாலுக்கு—சபதத்துக்கு வெற்றி சொல்ல வேண்டுமென்ருல், நீ அந்தப் பார்வதியாகிவிடக்கூடாது. நினைவில் கிறுக்கி வைத்துக் கொள். உன் பேதை மனம் கிறுக்காகிவிடப் போகிறது. உஷார்!—சிவபிராஞல் சிந்தையொடுக்கப்பட்ட சக்தியாகி, தில்லையில்போய் எல்லைக்கல் பதித்துவிடக்கூடாது!... நடன உலகம் அப்பால் உன் பெயருக்குப் பாரதம் பாடிவிடும்...! அதுமட்டுமா? பரணியும் புனைந்துவிடுவார்கள். நிஜமாகவே உன் விமரிசனத்திலே விந்தை என்ற சொல்லை அடைமொழியாக்கிவிடாதே!...போட்டியிடப் போகிறவனே தன் எதிர்க் கட்சிக்காரிக்குப் பாடம் படித்துக்கொடுக்கிருனேயென்று எண்ணி அப்படி உன் மீன் விழிகள் துடிக்கின்றனவோ?—சொல், உன் கண்களிடம்; நான் நாளை உன்னைச் சந்திக்கிறேன்—நடன அரங்கிலே! அல்ல, அல்ல!...எல்லையிலாப் பெருவெளிக்கு எல்லை கிழித்துக் கிடக்கும் மயானத்திலே, சக்தியின் அகந்தை ஒடுக்கக் கால் மாறிக் குனிந்து குழை நக்கிய பிஞ்ஞகனுக நாளை உன்னைச் சந்திக்கின்றேன்... ஹ ஹ் ஹா!... ஹ ஹ் ஹா...!'

'மறந்துவிடாதீர்கள், உங்கள் சபதத்தை—சூளுரையை—வாதத்தை!...நடன ரஸிகர்கள் தீர்ப்புச் சொல்லட்டும்; நாளை விடியட்டும். துரைராஜன் நடனத்தில் சிறந்தவரா? இல்லை, பார்வதி சிறந்தவளா?—அதோ, கைலங்கிரியிலே, வெள்ளைப் பனிமலை மீதிலே—ஏன், அந்த அலகிலா விளையாட்டுடையானின் முகத்தில்கூட இந்தக் கேள்விகளுக்குப் பதில் பிரதிபலிக்கிறதே?...என் மாதா பராசக்திகூடச்

சொல்லாமல் சொல்லி என்னை ஆசிக்கிறுளே, வெற்றி என் பக்கம்தானென்று! சந்திப்போம். நாளை!...ஹஹ்ஹா! ஹஹ்ஹா!...இந்தப் பார்வதிக்குத்தான் வெற்றி, வெற்றி, வெற்றி!'

'இந்தத் துரைராஜனைச் சுட்டெரித்து, அவன் சாம்பலைப் பூசிக்கொண்டுதான் நிற்கப் போகிறேன். அப்பொழுதுதான் என் நாட்டியம் நிறையும். ஆமாம்; வெற்றி எனக்கேதான்! நான் பார்வதியல்லவா? என் அகந்தையை அந்தச் சிவனேகூட மாற்றவோ, மாற்றுக் குறைக்கவோ முடியாது. நான் பார்வதி!...'

'நிஜமாகவா?'

'ஆம்; என்னுடைய அன்னை சக்தியின்மேல் ஆணை!...இது மெய்யான சேதி, சகுந்தலா.'

'அப்படியென்றால் நீ சோமநாதனைத்தான் கலியாணம் செய்துகொள்ளப்போகிறுயா? உனக்கு நடனம் பயில்வித்து—உன்னைக் காதலித்த துரைராஜனைக் கைவிட்டுவிடத் தீர்மானித்துவிட்டாயா, பார்வதி?...'

'ஆமாம்; நூற்றுக்கு நூறு உண்மை. போட்டியாம்—போட்டி! நாட்டிய உலகம் என்னை வானளாவப் புகழ்கிறது; இந்தத் துரைராஜன் என்னை வாய்கொண்ட மட்டும் தூற்று கிறுன். பார்க்கிறேன்!...இன்றைய நடனப் போட்டியிலே எனக்கேதான் வெற்றி!'

'அப்படியென்றால், உன் மலர் மாலை...?'

'சோமநாதனின் அழகுக் கழுத்துக்கேதான்!'

'சபாஷ், நீலகண்டா! உன் புத்திசாலித்தனத்துக்கு யாம் பெரிதும் மெச்சினேம். இந்தா, பிடி உத்தரீயத்தை!'

'நான் தப்பித்தேன். துரை, அந்தி நெருங்குகிறதல்லவா? தில்லையிலே கல்லுருவாகச் சமைந்து நிற்கச் சபித்த அந்த ஒரிஜினல் பிராணுகவே நீ வடிவெடுத்து, ஒரு சாபம் இட்டது

போதாதென்று, எங்கே என்னையும் வேறு சபித்துவிடப் போகிருயோ என்று உயிர் நடுங்கிப் போனேன். நல்லவேளை, நான் தப்பித்தேன், பிழைத்தேன்!'

'அஞ்சேல்...'

'அபயம்!'

'பேஷ், பேஷ்!'

'சோமநாதன் வாயில் மண் போடவேண்டும்!'

'அதை நான் ஏன் சொல்லவேண்டும்? என் வாயில் நீ சர்க்கரையைப் போட்டுவிடுவாயல்லவா...?'

'ஓ...!'

'நண்பா, வெற்றி எனக்கேதான். தீட்டிய இடத்திலேயே பதம் பார்க்கக் கனவு காண்கிருள் பேதை பார்வதி. எனக்கு வெறி ஏறுகிறது. அது புகழ் வெறி; கலை வெறி! நான் பயில் வித்தேன். அவள் புகழ் பெறட்டும்; ஆட்சேபணம் ஏதும் எனக்குக் கிடையாது. ஆனாலும், பெண் பிறவிக்கு அகந்தை கூடாதல்லவா? பார்க்கலாம், யாருக்கு வெற்றி என்று...! தமிழ்க் கலைக்கூடம் இன்று இரவு வழங்கப்போகும் தீர்ப்பைக் கண்டு உலகம் மூக்கில் விரலை வைக்கப்போகிறது. அவளுடைய விசிறிகள் வேதனைப்படத்தான் போகின்றன... நீலகண்டா, நல்லகாலம், அந்த சிவசக்தி நடனத்தை எனக்கு நீ நினைவுபடுத்திஞய்!'

'ஆமாம்...'

'வெற்றி இந்தப் பார்வதி கொழுநனுக்கேதான்!'

'என்ன, பார்வதி கொழுநஞ?'

'ஆம்; சிவன் என்று அர்த்தம்!'

'ஓஹோ!'

'ஆஹோ!'

'ஆஹா, அற்புதம்!...தாம் தித் தாம், தை தத்தை!— வெகு நேர்த்தி!...'

'சிவபிரானும் பார்வதியுமே நேரில் பூலோகத்துக்கு விஜயம் செய்துவிட்டார்களா, என்ன? ஆஹா! தேவர்கள், நாரதர், கின்னரர்! மயானத் தாண்டவம்...!'

'அதோ, சிவனுக்கு வெறி மூண்டுவிட்டதே...?'

'பார்வதியின் பாதங்களிலே எத்தகைய இந்திர ஜாலம், என்ன குழைவு! ஸ்வரஜதியில்தான் எத்துணை ஜீவன், கற்பனை!'

'தன்னை மறந்த லயம் என்கிறார்களே, இதுதானா? சிவனுக்கும் போட்டி வெறியா? சக்தியைத் தோற்கடிக்கச் செய்யும் சாகஸமா? ஆ. குழை நழுவிவிட்டதே?'

'சங்கரியின் கண்களிலே ஏன் இந்தக் கலக்கம்?...சக்தி தான் பெரிதா?...'

'ஆஹா, அதோ, ஆதி கால்தூக்கி ஆடி அந்தக் குழையைப் பாதத்தால் எடுத்துக் காதில் அணிந்துகொள் கிறாரே?'

'சக்தி தோற்றுவிட்டாள்! அவள் பெண்தானே? அவளால் அப்படி முடியுமா, பாவம்?'

'ஐயா, ரசிகரே? அதோ பாரும், சிவனுக்குப் போட்டி யாக சக்தி காலைத் தூக்கி ஆடிவிட்டாள்...! சக்திதான் ஜெயித்தாள். அவள் எங்கள் இனமல்லவா?...'

'ஆ!'

'ஐயோ, அக்ரமம்! புராணம் ஏடு திருப்பப்பட்டு விட்டதா?'

'ஊழி தொடங்கிவிட்டதோ?'

'நடனத்திலா?'

'இல்லை, நடப்பு உலகத்துக்கு.'

'விசித்திரமான புராணக் கற்பனை!'

'அதிசயமான போட்டி!'

'அர்த்தமில்லாத காதல்!'

'அற்புதம்!'

'மோசம்...படுமோசம்!'

'நீ பெண் அல்ல!...பேய்! காளி! இவ்வளவு பெரிய ஜனக்கூட்டத்திலே நீ அந்தப் பயலுக்குப் போட்டியாகக் காலைத் தூக்கிச் சமமாக நடனம் ஆடிவிட்டாயே? நிருத்ய ஆசிரியரின் மகனான நானா—இந்தச் சோமநாதனா இனி உன்னை ஏறெடுத்துப் பார்ப்பேன்? அது வெறுங்கனவு. சிவபிரானுடன் போட்டியிட்டுத் தோற்ற அந்தக் கல்லழகி—எல்லைச் சக்தி கூட உன்னுடைய இந்தத் துணிச்சலைக் கண்டு தலை கவிழ்ந் திருப்பாளே? நீ பெண்ணா? நீ காளி!...மகா துர்க்கை!...ஓடு, திருவாலங்காட்டைவிட்டுத் தில்லைக்கு ஓடு!...'

'ஆண்மையுள்ள ஆணழகரே, நிறுத்துங்கள் உங்கள் சொற்பொழிவை. நான் பெண்; அசல் தமிழ்ப் பெண். உலகம் தெரிந்தவள்தான் நான். அந்தத் தில்லைச் சக்தியா நான். அப்படிக் கால்தூக்கி நடனம் ஆடாமல் இருக்க? நான் பார்வதி அல்லவா? பார்வதி ஒருநாளும் அந்தத் துரை ராஜனுக்குத் தோற்றவள் அல்ல! ஞாபகம் இருக்கட்டும், மிஸ்டர் சோமநாதன். தாங்கள் இனி என்னை ஏறெடுத்துப் பார்க்கவே வேண்டாம்; கண்களை மூடிக்கொண்டு ஜபம் செய்யுங்கள். நீங்கள் கண்ணை மூடுவதற்கு எவளாவது ஓர் அபலை வந்து உங்கள் கண்களைத் திறப்பாள்...'

'வார்த்தைகள் அளவுக்கு மிஞ்சிக் கனம்பெறுகின்றன. அப்படியென்றால், நடன நாடகம் என்ன ஆவதாம்? அதன் உயிர்க் கருத்து என்ன ஆவதாம்?'

'அது தூசுக்குச் சமானம். சிவனுக்கு அந்தச் சக்தி தோற்றிருக்கலாம். இந்தப் பார்வதி நடனத்தில் எவனுக் கும் சளைக்கமாட்டாள்; தோற்கமாட்டாள்; என் சபதம்.

குளுரை, வெற்றி பெற்றுவிட்டது. நான் நடன ராணி பார்வதி!...'

'இந்தப் பதிதையின் நிழல் பட்டாலே நமக்குப் பாவம்... வாருங்கள், அப்பா!...'

'ஓடுங்கள்!...இல்லையென்றுல், உங்களைச் சபித்துவிடுவேன். உள்ளத்தைப் புரிந்துகொள்ளத் திராணியில்லாத—நடனத்தின் ரகசியத்தை அறிந்துகொள்ள மூளை இல்லாத நீங்கள் எங்கள் தமிழ்நாட்டுக்குத் தேவையேயில்லை. ஆனுல் ஒன்றைமட்டும் மறந்துவிடாதீர்கள்; இந்தப் பார்வதி பண்பை உயிராகக் காக்கும் தமிழ்ப் பெண்.'

'பார்வதி, நடனத்திலே நான் தோற்றேன் என்றே வைத்துக்கொள்; நான் வருந்தமாட்டேன்...ஆனுல், நான் போட்டியிலே வெற்றி பெற்றுவிட்டேன். தோற்றவன் வெற்றிபெற்ற கதைதான் இங்கேயும் நடக்கிறது. எப்படியோ, என் நாடகம் பலித்துவிட்டது...ஆமாம்; காதல் போட்டியிலுங்கூட நான்தான் உனக்குச் சமம்?...இந்தத் துரைராஜன் அந்தச் சோமநாதன் அல்லவே?...'

'அன்பரே, என்னை எல்லைச் சக்தியாக ஆக்கத் தீர்மானித்துவிட்டீர்கள்போலும்!...நான் தமிழ்ப் பெண் பார்வதி!...நீங்கள் எனக்கு நிழல்தர விரும்பினுல், அது என் பூஜாபலன்தான்!'

செந்தட்டி மம்மே பாரே!

மூன்று முடிச்சுக்கள் விழுந்தன. வத்சலைக்கு ஏற்பட்ட மகிழ்வு இவ்வளவு அவ்வளவு அல்ல. எல்லாமே கனாப் போலவே தெரிந்தது. மங்கல நாண் அவளது விழி விரிப்பில் இழைந்தது. தனக்குத் தாலிபாக்கியம் அருளிய அலகிலா விளையாட்டுடையவனை நன்றி நெஞ்சுடன் தொழுதாள். மேனி புல்லரித்தது. நாதசுர முழக்கம் அவளுக்கு உணர்வையும் சுயநினைவையும் கொடுத்தது. தலையை உயர்த்த எத்தனம் செய்தாள். விழிகள் நாணம் பூண்டன. மூன்று முடிச்சுக்களை அருளிய சொக்கலிங்கத்தின் கடைவிழி நோக்கைச் சந்திக்க முடியாமல் திக்குமுக்காடினாள்.

மணப்பந்தலில் மளமளப்பு மிஞ்சியது. 'வாங்க, வாங்க!' என்ற வரவேற்பு மொழிகளும், 'தம்பி அவங்க எல்லோரையும் உட்காரவை. பர்மா பாயை விரிச்சுப்போடு. ம், ரங்கூன் ஜமுக்காளத்தையும் உதறி விரியப்பா!...இந்தா பார், மரவைத் தட்டிலே வெற்றிலை பாக்கை நிரப்பிக் கொண்டுவா!' என்ற உபசாரக் குறிப்புகளும் மாப்பிள்ளையின் இதழ்க் கரையினின்றும் ஒதுங்கி ஒலித்த வண்ணம் இருந்தன.

'சரி, நேரமாயிற்று. கல்யாண பரிசு, வாழ்த்து எல்லாம் வந்து குவிந்து கிடக்கிறதே, எல்லாவற்றையும் பிரித்துக் கொடுத்துவிடலாமே!...அப்புறம், பந்திவைக்க ஆரம்பித்து விட்டால், ஒரு சோலியைச் சமாளிக்கவே நேரமும் பொழுதும் காணாது!' என்றார் பெரியவர் ஒருவர். கழுத்தில் இருப்பிடம் அமைத்திருந்த 'ருத்திராட்சக் கெவுடு' அவரது விரல்களின் ஆணைக்கேற்ப அசைந்தது.

'ம், அய்யா சொல்றதும் சரியான யோசனைதான்!'— சந்தனப் பேலாவை இடம் மாற்றிக்கொண்டிருந்த 'உக்கிராணப் பொறுப்பாளர்' ஆமோதித்தார்.

பந்தல் காவணத்தின் மையத்தில் சேகரித்து வைக்கப் பட்டிருந்த பரிசில்களையும், கடிதங்களையும், வாழ்த்துப் பத்திரங்களையும் எடுபிடிகள் கைக்குக் கொஞ்சமாக அள்ளி எடுத்து, மணமகனுக்கு அருகில் வைத்தார்கள். மாப்பிள்ளை சொக்கலிங்கம் இளம் சிரிப்புத் தவழ, அவற்றைப் பார்க்க லானன். ஆர்வம் மிகுந்த பார்வை துள்ளிக் குதித்துத் தவழ்ந்தது; பட்டுச் சொக்காயின் இடது கைப்பகுதியைச் சுருட்டி மடக்கிவிட்டவாறு பரிசுப் பொருள்களை விரல் அமைத்து விலக்கிப் பார்த்தான். இதயத்தின் படபடப்பை நேத்திரங்களுக்கு மாற்றம் செய்து கொடுக்க ஒப்பாதவன் போன்று கடிதங்களின்மீது கண்ணோட்டம் செலுத்தினன். ஓர் அரைக்கணம் அவனது இதயம் அதிர்ந்தது. மார்பில் இழைந்திருந்த மகரகண்டி மாலை அவனுடைய நெஞ்சையே அமுக்கி அழுத்திவிடுவதைப் போன்று உணர்ந்தான். சிதைந்த ஆசை கண்ணீரின் அவதாரம் பூண்டது. மணமகன் அழலாமா? கூடாது. தன்னைச் சமாளித்துக்கொண்டான் அவன்.

அப்போது, வாழ்த்துப் பத்திரங்களை 'மைக்'கின் முன்னே வைத்துப் படித்துக்கொண்டிருந்தார் ஓர் இளைஞர்.

'நங்கை வத்சலை! அபிமன்யு கிடைத்தாற்போன்று உனக்குச் சொக்கலிங்கம் கிடைத்திருக்கிறுர். நீ கொடுத்து வைத்தவள். உங்கள் தாம்பத்தியம் சகல சௌபாக்கியங் களுடன் பொலிவுபெற வாழ்த்துகிறேன்; பிரார்த்திக் கின்றேன்.'

வாழ்த்துமடல் வரிகளில் மிதந்தாள் வத்சலை. 'ஆம், நான் கொடுத்து வைத்தவள்தான். சாமிக்கு நான் எடுத்துப் போட்ட பூ நல்ல பூவேதான்!'—கண்கள் கசிந்தன. அந்தக் கசிவில்தான், நடந்த கதை 'திருப்பம்' கண்டது.

புதுப்பட்டியில் மு. ஆ. வீடு என்றல் பசையான குடும்பம் என்று பேர். அந்த வீட்டின் தலைச்சன்தான் சொக்கலிங்கம். அவனுக்கு முறைப்பெண்தான் வத்சலை. அழகை ஒரு தட்டிலும், அவளை மறுதட்டிலும் வைத்து நிறுத்தலாம்.

தேர்ந்த எழில்; ஆனால் அவள் பிறந்த மனை நொடிப்பின் விளைவாக இறக்கம் கண்டது. 'சம்பந்தம் சாடிக்கை' விஷயத்தில் வத்சலையின் தந்தை வலியப்போய் எதையும் செய்யமுடியாமல் இருந்தார். இந்த இக்கட்டான நிலையில் தான் வத்சலை தவியாய்த் தவித்தாள். தன் கழுத்தில் மஞ்சள் கயிறு விழுமா என்று ஏங்கிக் கிடந்தாள். குல தெய்வத்தை நொந்துகொண்டாள். தன் முறை அத்தானை ரகசியமாகச் சந்தித்து, தன் பரிதாப நிலையைக் கண்ணீர் மல்கிப் புரள விளக்கினாள். சொக்கலிங்கம் இதயம் கொண் டிருந்தான். பணத்தை அவன் மதிக்கவில்லை: பெண்மையை மதித்தான். புதுச் சம்பந்தத்தை மதிக்காமல்; பழைய சொந்தத்தையே மதித்தான். விளைபலன்; வத்சலைக்கு, அவன் அம்மான் சொக்கலிங்கத்தின் நிழலில் 'போக்கிடம்' கிடைத்தது.

சுயநினைவை மீட்டுக்கொண்டாள் அவள். இளநீலநிற ஒளிப்புனலைக் கடந்தன விழிகள். அவள், அவள் தேடிய கண் கள் நீரில் மிதந்துகொண்டிருக்கக் கண்டாள்!

'மஞ்சள் நீராடல்' சடங்கு முடிந்தது. முகூர்த்தப் பட்டு சலசலக்க மாடிக்கு வந்தான் சொக்கலிங்கம். நடையில் இருந்த நிலைக்கண்ணாடி அவன் உருவை எழுதிக் காட்டிற்று. அழகு முகம் சஞ்சலத்தின் இழை பின்னிக் காட்சி தந்தது. சூன்ய வெளியில் கண் பதித்தான் அவன். இதயம் முழு வதிலும் வெறுமை அட்டகாசமாகச் சிரித்தது. அந்தச் சிரிப்பிலே அவனது அழுகை விளைந்தது. அக்கணம் தன் உயிர் தன்னிடமிருந்து விடைபெறத் துடிப்பதுபோலப் பட்டது அவனுக்கு. 'ஆமாம்; அன்று தினம் அந்தத் தெய்வம் என் உயிரைக் காப்பாற்றவில்லையானால், இன்று நான் மாலையும் கழுத்துமாக விளங்கியிருக்க முடியுமா? முடியவே முடியாதே!...' அவன் நெஞ்சு ஏறி இறங்கியது. அந்த ஏற்றத் தாழ்வில் அன்பு விளையாடியது.

'மாண்டலே பெட்டகம்' வாய் திறந்தது. சிறிய புகை படமொன்று கண்திறந்தது. இமைக் கதவம் மூடாமல், அவ்வுருவத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

அன்பு கசிந்த கண்கள்; அருள் நிறைந்த உதடுகள்; தேஜஸ் மண்டிய முகவிலாசம்; கொண்டை சுற்றப்பட்டிருந்த சுருள் அலை படிந்த தலை முடியில் நட்சத்திரப் பூக்கள் மின்னின; இடது பக்கத்தில் தந்தச் சீப்பு இருந்தது. ஸில்க் அங்கி; அது பொங்கிப் பூரித்த யௌவனத்திற்குப் பாதுகாவல் போலும்!

சொக்கலிங்கம் நேத்திரங்களை மூடினான்; இதழ்கள் வழி கேட்டன. 'மாட்டீஞ்சி!' என்று தன்னுள் அவன் முணு முணுத்துக்கொண்டான். கண்ணீர் முட்டி மோதியது. உருப்பெற்ற அந்தப் பெயரிலே பர்மியர் நாடு உருக் காட்டியது; அன்பின் கதை உருக்கொண்டது.

அன்பு சோதனை வடிவானது அல்லவா? ஆனால், இதே அன்புச் சோதனைக்கு இலக்கான நிகழ்ச்சிகளுக்கும் பஞ்சம் இருந்தது கிடையாதுதானே?

மேல் பர்மாவின் நாட்டு வளப்பத்துக்குச் சிறப்புப் பாயிரம் அளித்து, நீர்வளம் காட்டிய பெருமை ஐராவதி நதிக்கு உடைமையாகும். 'தப்பிப்பீன்' என்னும் ஊர் நதிக்கரையில் அமைந்தது. நீர்ச் செழிப்புக்கு ஏகபோக வாரிசு மாதிரி விளங்கினாள் மாட்டீஞ்சி. அவளுடைய தகப்பன் 'கொல்லாப்போ' மகா முரடன். அவனிடம் குதிரைவண்டி ஒன்று இருந்தது. இரங்கூன் முகத்துவாரத்தில் 'தீம்போனஸன்'—கப்பல் பிடிப்பு நடந்து முடிந்து ஐந்தாறு நாட்கள்வரை, மீஞ்சான் போன்ற பகுதிகளிலிருந்து திரளும் பிரயாணிகள் அவனுக்குக் கை நிறையைக் கொடுப்பார்கள். ஆனால் அவனிடம் ஒரு கெட்ட குணம் குடிகொண்டிருந்தது. கல்லாக்களை—இந்தியர்களை அவன் வெறுத்தான்.

ஒருநாள்.

சொக்கலிங்கம் தன்னுடைய நிர்வாகத்திலிருந்து மரக் கடைக் கல்லாவில் கணக்கப் பிள்ளையை அமர்த்திவிட்டு, கடையை விட்டு வெளியே வந்தான். கிஸ்தி வசூல் செய்ய வேண்டிய இடங்களின் புள்ளி விவரங்கள் அடங்கிய 'சிட்டைப் புத்தகம்' அவனுடைய 'சேப்பி'யில் இருந்தது. அவன் அணிந்திருந்த 'சைட்யூ லாங்' தெருவில் ஊர்ந்தன.

அந்தி மாலைப் பொழுது. சில்லறை வசூல்களை முடித்துக் கொண்டு, தமிழர்கள் வசிக்கும் 'பூசனிக்கன் அல்யா'வுக்கு வந்து, வேல்முருகனை வணங்கினான் அவன். இருள் சூழத் தொடங்கிற்று, புறப்பட்டான். இடை மறித்த வழியில் அன்பு இடை வெட்டியது. 'லாதாம—டைம்பாவ்!' என்று அவனை வரவேற்று உட்காரச் சொன்னான் பர்மாக்காரன் ஒருவன். கூம்ஸாவாம்—தாம்பூலத்தட்டை வைத்த கையுடன் 'லப்பை'யை நீட்டினான். அவன் கொபாங்குவே; வாடிக்கைக்காரன். தேநீர் குடித்ததும், வசூல் விவரம் பற்றிச் சொன்னான் சொக்கலிங்கம். அது சமயம். ஏதோ காலடியோசை கேட்கவே, அவன் எட்டிப் பார்த்தான். யாரும் தட்டுப்படவில்லை!

'ஜப்பான்காரன் கொடுமை முடிந்து, பர்மா சுதந்திரம் அடைந்ததும், அதற்குள் ஆங்ஸான் கொலை காரணமாகக் கிளம்பிய புயல் இப்போதுதான் லேசாக அடங்கி வருகிறது. இருட்டு வேளை. உங்களிடமோ ஐயாயிர ரூபாய் வரை நிலுவை வசூல் பணம் இருப்பதாகச் சொல்லுகின்றீர்கள். நான் வேண்டுமானால் துணை வரட்டுமா' என்று கேட்டான் பர்மாக்காரன்.

சொக்கலிங்கம் அவனது அன்பைப் பாராட்டி நன்றி சொல்லிவிட்டு, தானே ஒன்றியாக துணிவுடன் செல்ல முடியுமென்று புறப்பட்டுவிட்டான். அவனோடு ஆபத்தும் புறப்பட்டது. ஆபத்துக்கு ஓர் உருமென நின்றான் கொல்லாப்போ. இருட்செறிவுமிக்க சாலை முனையில் அவன் சொக்கலிங்கத்தை மடக்கினான். அவன் கையில் 'பக்கோ வீச்சரிவாள்' இருந்தது. 'ஒன்று பணம் கொடு; இல்லை, உன் உயிரைக் கொடு!' என்று முழங்கினான் முரடன். தலையில் சுற்றப்பட்டிருந்த சல்லாத் துணியை அவிழ்த்து சொக்கலிங்கத்தின் வாயைக் கட்டினான். குதிரை வண்டி பறந்தது.

மீண்டும் சொக்கலிங்கம் விழி மலர்ந்த தருணத்தில், தன்னைச் சுற்றிலும் பயங்கரமான இருள் ஆட்சி செலுத்தியதைக் கண்டான். அன்பின் கதவு மட்டுமின்றி, அறைக் கதவும் அடைபட்டிருக்கக் கண்டான். மீஞ்சானில் புதுப்

பட்டி தோன்றியது. தன்னை மணக்கோலத்தில் காண விழைந்து 'ஏர்மெயில்' மூலம் அந்த ஆசையை அனுப்பிய பெற்றோர்களை எண்ணினான். பர்மா நாட்டில் உள்ள சொத்துப்பத்தை நினைத்தான். 'ஸ்வேடீ காண் பயா' அவன் கண் முன் நின்றது. மண்ணிடை மெய்ப் பதித்து விழுந்து வணங்கினான். 'பத்து கியா'வுக்கு ஊதுவத்தி வாங்கிக் கொளுத்துவதாக பிரார்த்தனை செய்தான். இஷ்ட தெய்வங்களை வரவழைத்து, தன் உயிரைக் காத்தருளும்படி மன்றாடினான். மேனியெங்கும் வேர்வை. அவன் மறுபடி கண்களைத் திறந்த சமயம், தன் முன்னே பர்மியப் பெண் ஒருத்தி நிற்பதைக் கண்டான். அவள்தான் அன்பின் உருவம்! 'என் அப்பன் விடிவதற்குள் உன்னைக் கொன்று போட்டு விட்டு, உன் பணம் அத்தனையையும் லூட் அடித்து விடுவதாகத் திட்டம் போட்டிருக்கிறான். மகான் புத்தபிரான் தான் என் அப்பனைக் காத்து ரட்சிக்க வேண்டும். பொங்கிச் சாமிகளைக்கூட சட்டைபண்ணுதவனாயிற்றே அவன்! ஐயா, உங்களைப் பார்த்தால் ஏதோ என்னுடன் பிறந்த தமையனார் போலவே தோன்றுகிறது. அப்படித்தான் என் மனசில் பாசம் பெருகுகிறது. எனக்கு அண்ணன் இல்லை. உங்களையே அம்மாதிரி எண்ணுகின்றேன். இப்போதே நீங்கள் உங்கள் பணத்துடன் தப்பித்துக்கொள்ளுங்கள். என் தகப்பன் குடி போதையில் தூங்குகிறான். இதுதான் தக்க தருணம். இன்று என் உயிர் என்னவோ அளவில்லாத ஆனந்தத்தினால் துள்ளுகிறது. ஆனால் ஒரு விண்ணப்பம். நீங்கள் இந்த லப்பையை அருந்துங்கள். இன்னொன்று, உங்கள் தங்கையை மறந்து விடாதீர்கள்!...' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசினாள் அப் பெண்.

தன்னைக் காத்த தெய்வமென அவளை வாழ்த்திப் பிரிந்தான் சொக்கலிங்கம். அவள் இறுதியில் சொன்னது 'செந்தட்டீமம்மே பாரே!'—'என்னை மறந்துவிடாதீர்!' என்ற வாசகம். அவளைத் துறந்து பிரிவதென்பது சாத்தியமா?

'மாட்டீஞ்சி! நீ என் உயிர் காத்த தெய்வமல்லவா? உனக்குத்தானே முதன் முதலாக என்னுடைய திருமணப்

பத்திரிகையை அனுப்பினேன்?... நீ திருமண வாழ்த்துக்கூட அனுப்பவில்லையே? ஏன்?'

'அம்மான்!' என்று கூப்பிட்டாள் வத்சலை, கையில் பால் தம்ளர் வைத்திருந்தாள். கண்களில் கனவுகளைச் சுமந்திருந் தாள். மது மலரின் எழிலுக்கு வருணனையோ வக்கணையோ தேவையா, என்ன?

முதல் இரவு.

ஆத்திரம் பூக்கவில்லை; ஆதங்கம் குரல் கொடுத்தது: 'அம்மான், அன்றைக்கே உங்ககிட்டே கேட்கணும்னு நினைச் சேன். எப்போ பார்த்தாலும் நீங்க் ஏன் பிரமை தட்டிப் போய் இருக்கிறீங்க?... உங்க கண் ரெண்டும் சதா கலங்கிப் போகுதே, ஏன் அம்மான்?...'

மெய்மறந்த பரவசம் எய்தினுன் சொக்கலிங்கம். மோகப் பெருமயக்கம் அடைந்த பாவனையில் அவளை ஏறிட்டுப் பார்த் தான். கண்ணுமூச்சி ஆட்டத்திற்குத் துணைவர வத்சலையைக் கைதட்டி அழைக்கும் அழகைப் பார்த்தீர்களா?

'வத்சலை, என்னைப் பார்க்கிறபோது உனக்கு என்ன தோணும்?'

'நீங்க என் தெய்வம் என்கிற ஞாபகம்தான்!'

'அப்படியானு, என்னையே ஒரு ஜீவன் காப்பாத்திச் சுன்னு, அந்த உயிரைப்பற்றி நீ என்ன நினைப்பே?'

'தெய்வத்தைக் காத்த தெய்வம்னு நினைப்பேன்!'

'சரி, இந்தப் படத்தைப் பார்!'

அவன் நீட்டிய படத்தைப் பார்த்தாள் வத்சலை. முகத்தில் சலனக்கோடுகள் எழும்பின.

'இந்தா பார், இந்தக் கதையை—இல்லை—நிஜமாகவே நடந்த கதையைக் கேள்!' என்று சொல்லி, மாட்டீஞ்சியால் தான் பிழைத்து மறு பிறப்புக் கொண்ட விந்தை நிகழ்ச்சியை விளக்கினுன் சொக்கலிங்கம். மீண்டும் அவன் சிந்தனை வசப் பட்டான். பிறந்த மண்ணை மிதிக்க எண்ணி, முதல் கணக்கை

முடிக்கத் திட்டமிட்ட அவன், முதன் முதலில் மாட்டீஞ்சியிடம் பயணம் சொல்லிக்கொள்ளச் சென்றான். அவள் தந்தையை அண்டி, நிரம்பப் பொருள் கொடுத்தால், அது ஒரு வகையில் மாட்டீஞ்சிக்கும் உதவுமே என்பது அவன் கருத்து. மரப்பெட்டி வீட்டில் அடியெடுத்து வைத்ததும், புத்தரின் காலடியில் மாட்டீஞ்சியின் தந்தையின் படத்தைக் கண்டதும், அவனுக்கு மலைப்பு ஏற்பட்டது. தான் அனாதையாகிவிட்டதாகக் கதறினாள் அவள். நினைவுகளின் பிறப்புக்கு நேரம் காலம் இல்லை!

'வத்சலா, என் தெய்வம் மாட்டீஞ்சி எனக்கு வாழ்த்து அனுப்பாமல் இருக்கவே மாட்டாளே?...அவளிடமிருந்து எதுவும் வராததால், ஒருவேளை அவள் உயிருக்கு...!'

அவன் வார்த்தைகளை முடிப்பதற்கு முன்னதாக, 'அம்மான், என்னை, என்னை மன்னிச்சிருங்க' என்னும் அலறல் ஒலி அதிர்ந்தது. 'இந்தப் படத்தைக் கண்டதும், தப்பா நினைச்சுக்கிட்டுத்தான் இந்தப் பர்மாக் கடுதாசியையும் ஒளிச்சுப்பிட்டேன். எனக்குத் தாலி பாக்கியம் நிலைக்கச் செய்ஞ்ச தெய்வத்தைத் தப்பா நினைச்சது எவ்வளவு பெரிய பாவம்!' என்று கூறிய வண்ணம், கையிலிருந்த படத்துடன் கிழிக்கப்பட்ட உறைக் கடிதம் ஒன்றையும் நீட்டினாள் வத்சலா.

பர்மிய மொழிக் கடிதத்தின் பொருளை சொக்கலிங்கம் சொன்னான்.

'உயிருக்கு நேரான அண்ணா!

நலம். உங்கள் அழைப்பு பெற்றேன். உங்கள் தாம்பத்திய நல்வாழ்வுக்காக மகான் புத்தபிரானின் திருப்பாதங்களைத் தொழுது பிரார்த்தித்தேன். என் அண்ணியைக் காண, திருமணப் பரிசுகளோடு அடுத்த மாதம் கப்பலேறி வருகிறேன். என் எதிர்காலக் கணவரும் உடன் வருவார்.

மாட்டீஞ்சி.'

பின்னோக்கலி

முதல் பிரம்மா பெருமூச்செறிந்தார்.

முதற் பூ மடலவிழ்ந்தது.

முதல் குரல் புறப்பட்டது.

குழந்தை அழுதது; அழுதது; அப்படி அழுதது.

அபாயங்களைத் தன்னுள் அடக்கிக் கிடந்த காடு. கூப்பிடு தொலைவில் ஒரு காட்டாறு. கருக்கல் பொழுது.

புல் தரை; பிறந்த மேனியாய்க் கிடந்தது பச்சை மண். பச்சை ரத்தம் மேனியை வெட்டிப் பாய்ந்தோடத் துடித்துக் கொண்டிருந்தது. குழந்தையின் உடல் துடி துடித்தது. நஞ்சுக் கொடி துவண்டு கிடந்தது. ரத்தத்துளிகள் பல கோடுகளில், பல கோணங்களில் சிந்திக் கிடந்தன. பன்னீர்த் துளிகள் அந்தக் குருதிப் புனலில் இரண்டறக் கலந்தன.

புள்ளி மான்கள் ஓடிவந்தன. வண்ணப் பறவைகள் நாடி வந்தன. வாயில்லாப் பிராணிகள் வாய்விட்டுப் புலம்பின.

அந்தக் குழவியின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. குழந்தைத் தெய்வம் அழுதது; அழுதுகொண்டேயிருந்தது.

'மன்றுளே மாறியாடு மறைச் சிலம்படிகள்' நடுங்கின; 'வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணர்ந்துள்ளந்தோறுஞ் சென்றுளே அமுதமூற்றுந் திருவருள்' திகைத்தது; சிவன் சிந்தித்தார்.

'கவுணியர்க்குப் பால் சுரந்த சக்தி' தடுமாறினள்; 'பங்கயற்கணரிய பரம் பரனுருவே தனக்குரிய படிவமாகி, எண்ணிறந்த சராசரங்களீனின்றுந் தாழாக் கொங்கயற் கண்

மலர்க் கூந்தற் குமரி பாண்டியன் மகள்' செயலிழந்தாள். சிவசக்தி சிந்தித்தாள்.

'தேவி, பூலோகம் வர வர உருப்படாமல் போய்க் கொண்டிருக்கிறது. பார்த்தாயா, அந்தப் பச்சை மண்ணை? கேட்டாயா, அதன் தீனக்குரலை? "குவா, குவா" என்று கதறி அழும் அதன் வேதனையிலே, "தெய்வமே, தெய்வமே!" என்ற எதிரொலி கேட்கிறதே? பாவம்!...படைப்பு புதிர் என்று சொல்லுகிறார்கள் மண்ணிலே. ஆனால், அவர்களே படைப்பைப் புதிராக்கி, அத்துடன் வாழ்க்கையையும் புதிராக்கிக்கொண்டுவிடுகிறார்கள்; அதுமட்டுமா? நீயும் நானும்கூடத்தான் அந்தப் புதிர்ப்பிணைப்பில் இணைக்கப் பட்டுப் பேசப்படுகின்றோம். விந்தைமிகு மக்கள்—மக்களா? மாக்கள்!'

பிறை சூடியின் குரலில் எரிமலை கனன்றது.

'அன்பரே, உங்கள் வாய்மொழி முற்றும் உண்மை. கடந்த பத்து நாழிப் பொழுதாக நான் உறக்கம்கொள்ள வில்லை. முதற் குரல் எதிரொலித்தது—திடுக்கிட்டு விழித் தேன். சிசுவின் வினைப்பயன் அப்படியோ? பாவம், பிறந்த குழந்தை பிறந்த மண்ணில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. அதோ, பொழுது புலர்ந்துவிட்டது. காட்டுவழி நடப்பவர்கள் ஓடோடி வருகிறார்கள்; குழந்தையைப் பார்க்கிறார்களே! ஆ, என்ன கொடுமை? ஐயோ, அவர்கள் எல்லோரும் போய் விட்டார்களே, மதலையை மறந்து...! ஒரு சொட்டுக் கண்ணீருக்குக்கூடப் பஞ்சமாகிவிட்டதே? சே, பாழ் உலகம்! இதயமிழந்த பாவிகள்!'

இமயவல்லியின் இமைபாவா விழிகளிலே கோபம் கொந்தளித்தது.

'உமையவளே! சினம் தவிர். பூலோகம் விசித்திர மானது—அது நம் இருவருக்கும் புரியாததல்லவே? குழந்தை யைக் கண்டவர்கள் வறிதே சென்றார்களல்லவா? அப்போது, அவர்கள் உதடுகள் உதிர்த்தத் தீர்ப்பை மறுமுறையும் நினைத்துப்பார்: "ம்...! யார் பெற்ற குழந்தையோ? நமக்கு

எதற்கு இந்த வம்பு? எல்லாம் இதன் தலைவிதிப்படித்தானே நடக்கும்?'' என்று சொல்லிப் பயந்தோடிவிட்டார்களே! அர்த்தமற்ற, நெஞ்சற்ற வார்த்தைகளின் அநியாயத்தைப் பார்த்தாயா?' என்று கேள்விக்குறி எழுப்பினர் மங்கை பாகன்.

'ஆ! நெஞ்சு வெடிக்கக் கதறுகிறதே? பிறந்தது முதல் குமுறிக் குமுறி அழுகிறதே?...தேவா, குழந்தையின் முடிவு என்னவது?' என்று கவலையுடன் வினவினள் மாதா.

'பெற்றவளே குழந்தையைப்பற்றித் துளிகூட அக்கறைப் படாதபோது, நீ ஏன் கவலைப்படவேண்டும், சங்கரி?' என்று வினயமாகக் கேட்டார் சுடலையாடி.

'மறுபடியும் என்னைப் பரீட்சை செய்ய ஆரம்பித்துவிடா தீர்கள், பிரபோ! இந்தக் குழந்தைப் பிரச்சினையை முதலில் தீருங்கள். நல்ல தீர்ப்பு நவிலுங்கள்!' என்று வேண்டிக் கொண்டாள் காமக்கோட்டி.

'ஆகட்டும், நீ வீணே பதட்டப்படாதே!'—ஆறுதல் மொழி தந்தார் பிஞ்ஞகன்.

'நன்றி! ஆனால்?'

'ஐயப்பாடா?'

'அல்ல. ஆனால் அந்தக் குழந்தையின் பெற்றோர்கள்...? ஈரைந்து மாதம் சுமந்து பெற்ற அந்த அன்னை...?' என்று எதிர் வினா விடுக்கலானாள் நாரி.

பிறப்பிலி பெருமூச்செறிந்தார்:

'பூலோகத்தில் காதலுக்குப் புது மாதிரியான பொருள். கலியாணத்துக்கு முன்னும் கலியாணத்துக்குப் பின்னும்கூட ''காதல்'' என்ற ஒன்று உதயமாவதே கிடையாது. ஆனால், அவர்கள் வாய் என்னவோ, எல்லாம் உணர்ந்த மாதிரி, எடுத்ததெற்கெல்லாம் ''காதல், இன்றேல் சாதல்!'' என்ற ஒரே பல்லவியைத்தான் பாடித் தொலைக்கிறது. பூலோகக் காதலை தேவலோகக் காதலாக ''ரசாயன மாற்றம்'' செய்வ தாக உறுதி சொன்னான் அவன்—ஆமாம்; இந்தக் குழந்தை

யின் தகப்பன். அவள்—பிள்ளைக்கனியின் தாய் உண்மை யென்று நம்பினுள். உயிரும் உயிரும் ஒன்ருயின. உடலும் உடலும் ''முதல் இரவு'' விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடின. இருள் சிரித்த அந்தக் காட்டிலே, பூலோக சுவர்க்கத்தைத் தரிசித்தனர் காதலர்கள். ஆனல், காலம் சிரித்தது; ஊர் சிரித்தது; சமூகம் சிரித்தது. கண் கண்ட பூலோக சுவர்க்கமாம் இக் குழந்தையைக் கையால் எடுக்கத் தெம்பின்றி, அவளைப் பரபர வென்று இழுத்துக்கொண்டு ஓடோடிவிட்டான் அந்தப் பாவி! தேவலோகத்தில் மலர வேண்டிய பாரிஜாத மலர் வழிதவறிப் பூலோகத்தில் பூத்து விட்டது!' என்ருர் பார்வதி கொழுநன், கண்ணீருடன்.

'ஆதியே! பாரிஜாதம் கருகிவிடும் போலிருக்கிறது. நல்ல முடிவு காட்டுங்கள். துரிதப்படுத்துங்கள்!' என்று ஆதுரப் பட்டாள் சிவை.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுக்குச் சிரிக்கத்தாஞ தெரியாது...?

உதயம்.

தெய்வச் சந்நிதியில் தெய்வகானம்:

சாதிகுலம் பிறப் பிறப்புப் பந்த முத்தி,
அரு உருவத் தன்மை, நாமம்
ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும்
பிரிவற நின்றியக்கஞ் செய்யும்
சோதியை மாத்தூவெளியே மனதவிழ
நிறைவான துரிய வாழ்வேத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வோம்!

தெய்வக் குழந்தையின் அழுகையொலி வரவரத் தேய்ந்துகொண்டிருந்தது.

இதயமுள்ள யாரோ ஒரு செம்படவன் வந்தான்; குழந்தையைப் பார்த்தான்; அவனுடைய கண்ணீர்த்துளிகள் பேசும் பொற்சித்திரத்தைக் குளிப்பாட்டின. 'குழந்தை! மேலுலகத்துப் பாரிஜாதப் பூ! ஆண்டவனே உன் மகிமையே மகிமை. எங்கள் பிள்ளைக்கலி தீர்ந்துவிட்டது!' என்று ஆனந்தக் குரலைத் திக்கெட்டும் திசைபிரித்துவிட்ட வண்ணம், சேயும் கையுமாகப் பறந்தான்.

முக்கண்ணி சிரித்தாள்!

முக்கண்ணன் சிரித்தான்!

பாரிஜாதம் சிரித்தது!

இருட்டு—மை இருட்டு.

வண்ணக் களஞ்சியத்தை வாரியணைத்துக் கொஞ்சி மகிழ்ந்தவாறு வாசலில் அமர்ந்திருந்தான் அந்தச் செம்படவன். மெய்ம்மறந்திருந்தாள் அவனுடைய மனையாட்டி.

'அண்ணே, அண்ணே! ஓடியா, ஓடியா! பாவம், யாரோ ஒரு பொம்பளை காட்டாத்திலே விழுந்திட்டா. நாங்க படகிலே காப்பாத்தினோம். பொளைக்கிறளோ, என்னமோ, சங்கிலிக் கருப்பனுக்குத்தான் தெரியும்!'

அந்தப் பெண் மெல்ல மெல்லக் கண் திறந்தாள். கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது. அவள் கதறினள். 'கடவுளே! நான் செஞ்ச குற்றத்துக்கா என் குழந்தையை என்கிட்டேயிருந்து பிரிச்சே? என்னை ஆசைகாட்டி மோசஞ் செஞ்சவனைக் கொன்னுப்பிட்டு, என் குழந்தைக்காக ஓடோடி வந்தேனே...! பெற்ற வயிறு துடிச்சுச் சாகுதே? ஐயோ, என் ஆருயிர்ச் செல்வமே, இனி உன்னை எப்பிறப்பிலே கண்ணுலே காணப் போறேனே?...என்னை மன்னிச்சிட

மாட்டியா, தாயே? உனக்குத் தாயாகக் கொடுத்துவைக்காத பாவியாகிப்பிட்டேனே? கொலைகாரியாகிப்பிட்டேனே? ஐயோ...!'

அவளது விம்மிய மார்பகத்திலிருந்து பால் வெள்ளம் சுரந்தோடியது.

அவள் கண்கள் மூடிக்கொண்டன.

குழந்தை வீரிட்டு அழுதது!

கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தம்முடைய பல படைப்புகளின்மூலம் தமிழ் வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் எழுதிவரும் மூத்த எழுத்தாளரான பூவை எஸ். ஆறுமுகம் அவர்கள் பொன்னி, உமா ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இளம் எழுத்தாளர்கள் பலரை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமையும், புகழ்வாய்ந்த எழுத்தாளர்களிடம் நேர்காணல் நிகழ்ச்சிகள் நடத்தி, அவற்றைத் தொடர் கட்டுரைகளாக வெளியிட்ட சிறப்பும் அவருக்கு உண்டு.

நாற்பதாண்டுகளுக்கு முன்பு அவர் எழுதிய கடல் முத்து போன்ற சிறந்த கதைகள் இத்தொகுப்பின்மூலம் இப்போது வாசகர்களிடம் மறு அறிமுகம் பெறுகின்றன.

KADAL MUTHU

by POOVAI S. ARUMUGAM

விலை ரூ. 26·00 (இந்தியாவில் மட்டும்)